# டாக்டர் P. வரதராசுலு நாயுடு

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

DOCTOR P. VARADARAJULU NAIDU AVARKALIN VALKAI VARALARU

இயற்றியவர்:

சி. பி. சிற்றரசு

by CIRRARACU (C.P.)

CONNEMARA PUBLIC LIBRARY
1 - JUL 1958
MADRAS

வெளியிடுவோர்:

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

விலை அணா 8.] [50 புதுக் காசு

முதற் பதிப்பு — 1957

78116
~~35 K~~
V2:51y7M87 3157

வெங்கடேசன் அச்சகம், சென்னை—1.

CONNEMARA PUBLIC LIBRARY
1 - JUL 1958
MADRAS

# முன்னுரை

காலஞ்சென்ற உயர் திரு. டாக்டர் P. வரதராசுலு (நாயுடு) அவர்களுடைய, இந்த வாழ்க்கை வரலாற்றை எழுதியதற்குக் காரணம் இரண்டு. ஒன்று அவர் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை நானே எழுதவேண்டுமென்று கருதியிருந்தார். மற்றொன்று: அதற்கான ஆதாரங்களை என்னிடம் கொடுத்து எழுதும்படி கேட்டுக் கொண்டார்.

அவர், நான் எழுதிய நூல்களைப் படித்திருந்தார் என்று எனக்குத் தெரியாது. அவர் என் நூல்களின் விளக்கங்களைத் தந்தபிறகு எல்லா நூல்களையும் படித்திருக்கின்றார் என்பது எனக்குத் தெரிய வந்தது.

ஒரு நாள் நானும் அவரும் நேரடியான அறிமுகம் இல்லாத நிலையில் சென்னை Y. M. C. A. பட்டி மன்றத்தில் ஒரு கூட்டத்தில் கலந்துக்கொள்ளச் சென்றிருந்தோம். அன்றுதான் அவர் நேரடியாகப் பார்த்தார். நான் அவரை பலமுறை பார்த்திருக்கிறேன் என்றாலும், கலந்து பேசவோ அளவளாவவோ இயலாத நிலை. ஏனெனில் இருவரும் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள். நெறுங்கிப் பழகினாலன்றி ஒருவர் உள்ளக்கிடக்கையை எளிதில் புரிந்துகொள்ளும் வாய்ப்பு யாருக்கும் ஏற்படுவதில்லை என்ற உண்மை அன்றைய கூட்டத்தில் புலப்பட்டது. அந்தக் கூட்டத்தில் நாங்கள் இருவரும் தனித்தனியாக எடுத்துக்கொண்ட பொருள் பற்றிப் பேசி முடிந்தவுடன் என்னைத் தனியாகச் சந்தித்து, தங்களுக்கு ஓய்வு இருக்கும்போது வீட்டிற்கு வர இயலுமா, என்று கேட்டார். ஒரு வாரம் கழித்து வருவதாக வாக்களித்திருந்தபடி சென்றிருந்தேன். அதுவும் நான் தனியாகச்

செல்லாமல் என் உழுவலன்பர் திரு. **P.** வீரராகவலு அவர்களோடு சென்றிருந்தேன்.

புன்னகையோடு வரவேற்று பல செய்திகளை எங்களிடம் பேசிக்கொண்டிருந்தார். அடிக்கடி கொள்கைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார். நான் சென்னையிலிருக்கும்போது எங்களை அழைப்பதும் அவ்வப்போது நடக்கும் அரசியல் விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதும் வாரத்தில் இரண்டு முறை என்று சொல்ல முடியாவிட்டாலும் மாதத்திற்கு இரண்டு மூன்று முறைகள் என்ற அளவிலாவது சந்திப்புகள் நடக்கும்.

நான் சார்ந்திருக்கின்ற கழக நண்பர்கள் சட்டசபைக்கு வந்ததை பெருமிதத்தோடு பாராட்டிப் பேசியதோடு இன்னும் சிலர் வந்திருக்கலாம் என்றாலும் புதிய முயற்சி பரவாயில்லை என்று ஆறுதல் கூறுவார். திரு. **காமராசருக்குப்** போட்டிப் போடாமல் விட்டதில் தி. மு. கழகத்தின் பெருந் தன்மையை அடிக்கடி பாராட்டிக் கொண்டு வந்தார். சில நேரங்களில் தர்க்கம் உச்ச நிலையடைந்துவிடும். என்றாலும் சிறித்துக்கொண்டே அமைதியாக விளக்கம் தருவார்.

அவரிடம் நீண்ட நாட்கள் தொடர்ந்து பேசியதிலிருந்து அவர் ஒரு சிறந்த அரசியல்வாதி என்பதோடு அதற்கு மேலாகவே சீர்திருத்த வாதியாகவும் காணப்பட்டார். அவர் சொல்லிய உண்மைகள் பல இதில் இடம் பெற முடியவில்லை. ஏனெனில் அந்தக் கருத்துக்கள் இதில் இடம் பெறுமானல் சர்ச்சைக்கு உரியதாக இருக்கும். அவர் சொல்லியவைகள் அவ்வளவும் உண்மைதானு என்று கேட்டுத் தெரிந்துகொள்வதற்கு அவர் இன்றில்லையாகையால் அவைகளை எல்லாம் நீக்கவேண்டியதாயிற்று. ஏனெனில் அவரது வாழ்க்கை வரலாற்றை நானே எழுத வேண்டுமென்று கருதி என்னிடம் அவர் 5-ம் வயதிலிருந்து 1957 அவர் இறுதி நாள் வரையிலும் சேகரித்து வைத்

திருந்த ரிக்கார்டுகள் அவ்வளவையும் என்னிடம் தந்து எழுதும்படிச் செய்து, அவர் வேண்டுகோளுக்கிணங்கி நான் எழுதிய இந்த வரலாற்றின் கையெழுத்துப் பிரதி முக்கால் பகுதியை அவரே படித்துப் பார்த்து சில விடங்களில் திருத்தம் செய்து கொடுத்தார். ஏனெனில் அவர் இறந்த பிறகு அவர் சொல்லாதவற்றை யெல்லாம் சேர்த்து எழுதிவிட்டான் என்று சிலர் சந்தேகப்படாமலிருக்க சில பல விடங்களில் அவர் கைப்பட திருத்தப்பட்டக் கையேட்டுப் பிரதி இருக்கிறது.

இதை மனமுவந்து வெளியிட்ட நண்பர் **P. வீரராகவலு** அவர்களுக்கும் எனக்கும் இருந்த ஒரே எண்ணம் அவர் உயிரோடிருக்கும் போதே அச்சிடப்பட்ட பிரதியை அவரிடம் சேர்த்துவிட வேண்டுமென்று எவ்வளவோ முயற்சித்து முதல் பாரம் அச்சில் ஓடிக் கொண்டிருக்கும் போதுதான் அவருக்கு எதிர்பாராத நிலை ஏற்பட்டு விட்டது. நாங்களும் அந்த அதிர்ச்சியால் செயலற்று நின்றுவிட்டோம்.

எந்தக் கொள்கையிலே இருந்தாலும் சிறந்த தியாகிகள் சரியாக அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறார்களா என்பதை டாக்டர் நாயுடு அவர்களின் அரசியல் சேவையையும், அவர் சமுதாயம், மதம், கடவுள் என்பவைகளைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களையும் ஊன்றிப் பார்க்கின்றபோது எல்லாத் துறையிலேயும் மிகத் தீவிரவாதியாக முன்னணியிலே நின்றார் என்பது அவர் ஆங்காங்கே ஆற்றிய சொற்பொழிவுகளிலேயும் அவர் சொந்த நடவடிக்கைகளிலேயும் தெட்டெனவிளங்குகிறது.

அந்த ஒரு முதல்தரமான அப்பழுக்கற்ற கொள்கை ஒன்று அவரிடம் இருந்தது என்ற காரணம் ஒன்றே இதை நாம் எழுத ஒப்புக் கொண்டதற்குக் காரணமாயமைந்தது.

உறையிலிட்ட வாளின் பளபளப்பு வெளியே தெரியாதென்ற தன்மையிலேதான் அவரைப் பற்றிய எல்லா

செய்திகளையும் தெரிந்துகொள்ளாத வரையிலும் அவரைப்பற்றி ஒரு தெளிவான முடிவுக்கு வரமுடியாத வர்களாவதில் வியப்பில்லை.

எவ்வளவோ எழுத்தாளர்கள் அவர் சார்ந்தக்கட்சி யிலிருந்தாலும், ஒரு திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டனுகிய என்னை எழுதும்படிக் கேட்டதில் நான் பெருமைப் படுவதோடு என் கடமை என்றும் உணர்ந் தேன். என்னைப் போலவே எனது நண்பர் **P. வீரராகவலு** அவர்களும் தன்க்கிருந்த பல வேலைகளுக்கிடையே இதை வெளியிடுவது தன் நீங்காக் கடமையெனக் கருதி எவ்விதக் கைம்மாறும் கருதாமல் இதை அச்சேற்றி டாக்டர் நாயுடு அவர்களின் கல்லறைக்கு தன் அன்பு காணிக்கையாக்கு கிருர்.

" இளைஞனிடத்திலே சிறிதளவு முதுமையிருக்க வேண்டும். அதுபோலவே முதியவரிடத்தில் சிறிதளவு இளமை யிருக்கவேண்டும். இதன்படி நடப்பவர்கள் வயதில் முதியவர்களானுலும் இளைஞர்களாகவே இருக்கி ருர்கள் " என்ருன் சிசிரோ.

அதன்படியே டாக்டர் நாயுடு அவர்கள் 70 வயதான முதியவர்தான் என்ருலும் கொள்கையைப் பொருத்தவரை யிலும் இளைஞராகவே காணப்பட்டார்.

பிறர் படும் துன்பத்தைக் கண்டு கடல் அளவு கண்ணீர் சிந்துபவனைவிட பிறர் சிந்தும் கண்ணீரிலே ஒரே ஒரு துளியையாவது துடைப்பவனே தலைசிறந்த புகழுக்கு உரியவன். அவன் பெயர் வாழ்க என்ற முறையில் டாக்டர் நாயுடு அவர்கள் எவ்வளவோ பேருடைய கண்ணீரைத் துடைத்திருப்பார். அந்த நல்ல உள்ளம் கொண்டவர்கள், நன்றியைக் கொல்லாதவர்கள் இன்னும் பலர் இருப்பார் களல்லவா? அவர்களோடு சேர்ந்து வாழ்க! அவர் புகழ் வாழ்க என்று வாழ்த்துவோமாக!

# பதிப்புரை

CONNEMARA PUBLIC LIBRARY
1 JUL 1958
MADRAS

அரசியல் மேதையும், எனது ஆருயிர் நண்பருமான உயர் திரு. **டாக்டர் பி. வரதராசுலு** (நாயுடு) அவர்களின் திடீர் முடிவை நானும் ஏனைய நண்பர்களும் எதிர்பார்க்கவே இல்லை. வானம் மின்னி மறைவதைப்போல் அவர் வாழ்நாள் முடிந்துவிட்டது. அவரிடம் பல கேட்டுத் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசையின் தொடர் சங்கிலி திடீரென்று அறுந்துவிட்டது.

அத்தகு மேதைக்கு நாமாற்றும் கடன் யாதானு முளதா என்று சிந்தித்து அவரது விருப்பத்திற்கிணங்க எனது உழுவலன்பர் திரு. **சி. பி. சிற்றரசு** அவர்கள் எழுதித்தந்த டாக்டர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை என் சக்திக்கெட்டிய அளவில் வெளியிடுவதன்றி வேறு எந்தவகையாலும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள இயலவில்லை.

திரு. சிற்றரசு அவர்கள் தனக்கு இயற்கையாக அமைந்திருக்கும் நகைச்சுவையை கலந்தே பல சிக்கலான கேள்விகளைக் கேட்பதும், அந்த கேள்விகளுக்கெல்லாம் டாக்டர் அமைதியாக சிரித்துக்கொண்டே தரும் பதிலும் எனக்கு தெவிட்டாத இன்பமாக அமைந்திருந்தது பல நாட்கள்.

கலங்கரை விளக்கம் கரையிலேதான் இருக்கின்ற தென்றாலும், கடல்மிதக்கும் மரக்கலங்களுக்கு பயன் படுவதைப்போல், அவர் காங்கிரசிலேதான் இருந்தார் என்றாலும் அறிவில்லாத பலருக்கு அவர் ஓர் ஒப்பற்ற கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்திருக்கின்றார் என்பதை சராசரி நீதி உள்ளம் படைத்த யாவரும் ஒப்புக்கொள்ளவே செய்வார்கள்.

அவர் இருக்கும்போதே இதைச் செய்துமுடித்து அவர் பார்வைக்கு வைக்கவேண்டுமென்று கருதியிருந்தோம். ஆனால் எனக்கிருந்த பல வேலைகளும் திரு. சிற்றரசு அவர்களுக்கிருந்த இயக்கப் பணியும் நாங்கள் நினைத்த வண்ணம் அவர் கையிலே கொடுக்க முடியாமல் அவருடைய கல்லறைக்குக் காணிக்கையாக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்காக வருந்தாமலிருக்க முடியவில்லை.

எனினும், திரு. சிற்றரசு அவர்களின் எழுத்தில் அளவுகடந்த ஆசை கொண்டிருந்தார் என்பதை அவர் பலமுறை வெளிப்படையாகப் பாராட்டியதிலிருந்து தெரிந்து வந்தது.

அதற்கிணங்கவே திரு. சிற்றரசு அவர்களும் தன்னிடம் டாக்டர் அவர்களால் ஒப்படைக்கப்பட்டிருந்த பல குறிப்புகளைப் புரட்டிப்பார்த்து வாழ்க்கை வரலாற்றை உருவாக்கித் தந்ததற்காக எங்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வணக்கம்!

(Sd.) P. **வீரராகவலு**

(ஆசிரியர்: 'ஆரம்பக்கல்வி')

16–10–57,
சென்னை.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
சென்னை-1.

## தோற்றுவாய்

அகிலம், தோன்றிய அந் நாள் தொடங்கி இந் நாள் வரை எண்ணத் தொலையாத பல கோடி மக்களை ஈன்றிருக்கின்றது. அதை இன்னும் செய்துகொண்டே இருக்கின்றது. செய்துகொண்டே இருக்கும். எப்போது அகிலம் முடியும், எப்போது கதிரவன் காணமற் போவான், எப்போது சந்திரன் மறைந்து போவான், எப்போது உடுக்கள் வான வெளியிலிருந்து உதிர்ந்தே போகும், எப்போது உலகின் கடைசி மகனே, மகளோ தோன்றி அவர்கள் வாழ்க்கையும் முடிந்து உலகெலாம் இருள் சூழ்ந்து எங்கும் அழிவை யுண்டாக்கிச் சலனமற்ற நிலை தோன்றும்? இவைகளுக்கெல்லாம் விடை இதுவரை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

### *பேதங்கள்*

இப்படித் தோற்றுவிக்கப்பட்ட மக்கள், அவர்கள் தோன்றிய நிலத்தின் தட்ப வெப்ப நிலைக்கேற்ப உருவத்தால், நிறத்தால், நாகரிகத்தால், பழக்க வழக்கத்தால், மொழியால், நடை நொடி பாவனையால் வேறுபட்டுக் காணப்படுகிறார்கள். இயற்கையே மனிதனின் தோற்றத்தை மாற்றியிருக்கும் போது நாம் ஏன் சிலரைச் சாதியால் பிரிக்கக்கூடாது என்று நினைக்கும் சிலருடைய செயற்கை விதிகளுக்கும், இயற்கை நியதிக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் பெரும் போர்க்களத்திலே குற்றமற்ற மக்கள் போர் வீரர்களாக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

MADRAS

அவர்களிலே மிகப் பெரும்பாலோருக்கு இந்தப் போர் ஏன் நடைபெறுகிறது என்றுகூடத் தெரியாது. தளபதி இடும் கட்டளைக்குப் போர்வீரன் உடனே அடிபணிந்து விடுவதைப் போலவே பிறப்பால் தம்மை உயர்ந்தவர்கள் என்று நினைக்கின்றவர்கள் சிலர் இடும் கட்டளைக்கு மக்களில் பெரும்பாலோர் அடிபணிந்து விடுகிறார்கள். அந்த சஞ்சல மனத்தினர் சிலர் குற்றக் கூண்டிலே ஏற்றப்படுகிறார்கள், கொடுமையாகத் தண்டிக்கப்படுகிறார்கள், குற்றம் செய்தவர் யாரோ குருதி சிந்துபவர் யாரோ என்ற அளவோடு குவலயம் தலை குனிந்து நிற்கிறது. பணிய வைத்தவன், பணிந்தவன் என்ற பாகு பாடு பலி பீடத்திற்கு இல்லை.

ஆனால், போர்க்கள விதிகளுக்கும், மனித சமூக வளர்ச்சி விதிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை அவர்கள் உணருவதே இல்லை. ஆனால் ஒரு மனிதன் தன் பேராற்றலால் இயற்கையின் சக்திகளை வென்றுவிட முடியும் என்று நினைக்கின்றான். அந்த முறையில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் வென்றிருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் பெரும் பெரும் உற்பாதங்களையும் ஜலப் பிரளயங்களையும் நாம் வென்று விட்டோமா என்றால், இல்லை. அதையே அடிப்படையாக வைத்து சமூகத்தை நாம் திருத்தவே முடியாது என்று பலர் நினைக்கின்றார்கள்.

### எண்ண மாறுதல்

மனிதர்கள் பொதுவாகவே தங்களுக்குள்ள பாமரத் தன்மையால் வாழ்நாள் நீண்டதென்றும், அதில் பிரயாணம் செய்யும் வாழ்க்கை ஓடம் ஓட்டைகளே இல்லாத

தென்றும், அந்த ஓடத்தைத் தான் செலுத்தும் வழியே சரியான வழியென்றும், வாழ்வின் அந்திய காலமெனும் கலங்கரை விளக்கம் தங்கள் பார்வைக்கே எட்டவில்லை என்றும் நினைக்கிறார்கள். இப்படிப் பலர். ஆனால் இன்னும் பலர் ஏன் வாழ்கிறோம், எதற்காக வாழ்கிறோம், யாருக்காக வாழ்கிறோம் என்ற குறிக்கோளே இல்லாத வர்கள். இந்த இருதரத்தாருக்கும் மேலானவர்களே இவர்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கிறார்கள்.

## *நான்கு வழிகள்*

மக்களைத் திருத்துவதற்குள்ள வழிகள் நான்கு. எழுதித் திருத்துவது, பேசித் திருத்துவது, நடந்துகாட்டித் திருத்துவது, அதட்டி அச்சுறுத்தித் திருத்துவது. பெரும் பாலோர் படித்துள்ள நாட்டில் எழுதித் திருத்தலாம், சிந்திக்கத் தெரிந்து செவி மடுப்போர் உள்ள நாட்டில் பேசித் திருத்தலாம். எழுதவோ சிந்திக்கவோ தெரியாத நாட்டில் நடந்து காட்டித் திருத்தலாம். நான்காவது முறையால் வெற்றி கிடைப்பதில்லை. ஆனால் அறிவுத் துறையிலே குழவிப் பருவத்திலே இருக்கும் சமூகத்தைப் பலவிடங்களில் அடித்துத் திருத்தியிருக்கிறார்கள். ஆனால் அந்த முறை மிகமிக அனாகரிகமானதென்று இன்றைய சமூகம் அதைக் கைவிட்டுவிட்டது.

எழுதப் படிக்கத் தெரிந்த மேனாடுகளில் எழுதி எழுதியே திருத்தியிருக்கின்றார்கள். சிந்திக்கத் தெரிந்த கிரேக்கத்தை சாக்ரடீஸ் பேசிப் பேசியே திருத்தினான். எழுதவோ படிக்கவோ சிந்திக்கவோ அதிகமாகத் தெரி யாத நம் நாட்டை காந்தியார் வாழ்ந்து காட்டியே திருத்த முயற்சித்தார். எனினும் அவர் எண்ணிய எண்ணம்

ஈடேறுவதற்குள் முடிந்துவிட்டார். அம் மாபெரிய பேதையின் பரிதாபமான முடிவு மக்கள் உள்ளத்தை என்னவெல்லாமோ செய்துவிட்டது.

அவருக்குப்பின் நாட்டிலுள்ள நல்லோர்கள் தங்கள் தூய வாழ்க்கையால் மற்றவர்களைத் திருத்த முயன்றார்கள். இவர் இதைச் செய்ய வேண்டும் என்று நாட்டார்கள் கேட்க வாயெடுக்குமுன், இவர் இதைச் செய்து முடித்து விட்டார், என்று சொல்வதற்கேற்ற வகையில் தங்கள் கடமையைச் செய்து முடித்து விடுகின்றார்கள்.

அத்தகு இலக்கணங்களுக்கு இலக்கான துணிவும், துணிந்தபின் செயலாற்றும் திறனும், வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற விருப்பு வெறுப்பற்ற நிலையும், சமயமறிந்து தன்னடக்கத்தோடு உதவி செய்யும் விரிந்த உள்ளமும், நாடு கேடுறும்போது பச்சை ரத்தத்தையும் பரிமாறும் வீரமும், எந்தக் கொள்கைக்காரர்களும், எந்தச் சமய உணர்வு கொண்டவர்களும், எந்த இனத்தார்களும் மதிக்கத்தகுந்த ஒரு மாபெரிய வீரரை மையமாகக் கொண்டு எழுகிறது இந்நூல். அந்த மனிதாபிமானியாம் உயர்திரு டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்களைப் பற்றியதுதான் இது.

ஒரு மனிதன் தன் துக்கத்துக்காக அதிகம் அழக் கற்றுக் கொண்டால், பிறர் துக்கத்துக்காகப் புலம்பாமல் போய் விடுவான், என்று கிரேக்க நாட்டுப் பேரறிஞன் சாக்ரடீஸ்சொன்னதைப்போல், டாக்டர் நாயுடு அவர்கள் தன் சொந்த துக்கங்களுக்காகக் கவலைப்படத் தெரியாதவர். அந்த ஒன்றினாலேயே, அவர் பிறர் அடையும் வேதனை களுக்காக அதிகத் துக்கப்பட்டார். அவர் அதற்கான

பரிகாரத்தை உடனே தேடாவிட்டால் எதையோ இழந்து விட்டவர்போலவே காணப்பட்டார். அவருக்கு அறிமுக மானவர்களைவிட அறிமுகமாகாதவர்களை எளிதில் எண்ணி விடலாம். அவ்வளவு பேர்களோடு பழகி, அவ்வளவு பேர்களுடைய குணுதிசயங்களை, கொள்கைகளைத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார்.

தனக்காகவே வாழவேண்டும் என்ற மக்கள் மிகப் பலர் பிறக்கும் நாட்டில், பிறர்க்காகவே வாழவேண்டும் என்பவர்களை, பைத்தியங்கள் என்று தூற்றும் அளவுக்கு மடமை வளர்ந்திருக்கும் நாடுகள் ஏராளம். அதில் நம்நாடு முதலிடம் பெற்றிருக்கின்றதென்றால் மிகையாகாது. ஒன்றுமே செய்யாமலிருந்தால் பார், பார்! அவன் சுய நலத்தை, என்று சொல்லும். ஏதாவது செய்ய முற்பட் டாலோ, உம், இதில் அவருக்கு ஒன்றுமில்லாமலா செய் கிறார், என்று கேலிபேசும். "செய்ய வருகிறீர்களா ?" என்று அழைத்தாலோ, கள பலி கொடுக்க ஆட்களை அழைக்கிறார், என்று தூற்றும்; தானே களத்தில் குதித் தாலோ ஏதோ பதவிக்காக இப்படிச் செய்கிறார் என்று பரிகசிக்கும். இத்தனை சோதனைகளைத் தாண்டி ஒருவர் வெகு நாட்கள் பொதுநலத்துக்குழைத்து வருகின்றார் என்றால் ஆச்சரியந்தான்.

குறிப்பாக நாட்டுக் குழைத்தநல்லோர்கள் அனைவரும் நாடு முழுதும் அறிமுகமாவது கடினம். அதிலும் தென் னாட்டுத் தலைவர்கள் அகில இந்தியாவுக்கும் அறிமுக மாவது என்பது அதைவிட மகாக் கடினம். அந்த வகையிலும் யாராலும் இருட்டடிப்பு செய்ய முடியாமல் நாடு முழுவதிலும் தன் தியாகம் ஒன்றினாலேயே அறிமுக மானவர் டாக்டர் நாயுடு அவர்கள்.

இளமையில் நாட்டு விடுதலைக்காகச் சுடர்விட்டெரிந்த அந்த செஞ்சுடர்க் கோபுரம் இன்று நீறுபூத்த நெருப்பெனக் காட்சியளிக்கின்றது. அன்றும் இன்றும், கொண்ட கொள்கையில் கோணுது, கண்ட சீலத்தைக் கைவிடாது இருக்கும் இவருடைய வாழ்க்கை வரலாறு அடுத்துத் தொடருகிறது.

மல்லிகை மணம் மட்டிலும் கொண்டதல்ல, தலைவலியைப் போக்கும் குணமும் அதனிடத்தில் உண்டு என்பதைப்போல இவருடைய அரசியல் வாழ்வில் மணம் மட்டிலும் வீசவில்லை, தாயக விடுதலையின் வீரப் பண்பும் அடங்கியிருந்தது என்பதை நினைவில் வைத்துக்கொண்டே இப்பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கத் தொடங்குவோமாக:—

## போர்

1914—1918 முதல் உலகப் போர். ஆம், அந்த நேரம்தான் இந்தியாவின் இருள் நீங்கக் கீழ்த்திசையில் செவ்விறம் தோன்றுகிறது. இந்தியாவின் தேவை என்ன? என்ற கேள்வி மேஜையிலிருந்து மேட்டுக் குடிகளுக்கு எட்டிய நேரம்; அது பாமர மக்கள் கவனத்திற்கெட்ட எத்தனையாண்டுகள் ஆயிற்றென்பதே இந்திய சுதந்தரத்தின் நீண்டதோர் தொடர்கதை.

பதினெட்டாவது நூற்றூண்டிலேயே பல்வேறு நாடுகள் விடுதலை பெற்றுவிட்டன என்று வரலாறு சொல்லிவிட்டது. எனினும் இந்தியா தன் சுதந்தர முழக்கத்தை 19-வது நூற்றூண்டில்தான் முழக்கியது. இந்தியத் தாய்க்கு .வெள்ளைய ஏகாதிபத்தியத்தால் இடப்பட்டி

ருக்கும் விலங்கு காலச் சுடரால் தானுகவே கரைந்துவிடப் போவதில்லை, அல்லது கடற்காற்றுல் அது தேய்ந்து தேய்ந்து அருகிவிடப் போவதுமில்லை. ஒன்று, அதை யாராவது அகற்றவேண்டும், அல்லது நாமே கொஞ்சம் கொஞ்சமாக நெக்கி நெக்கிப் பிளக்கவேண்டும். அது வரையில் பூட்டப்பட்ட கைகளுக்கு விமோசனமில்லை. அந்த நிலையில்தான் இருந்தது இந்தியா.

## *யாரை எதிர்த்து?*

16-வது நூற்றுண்டின் தொடக்கத்தில் ஆட்டுத் தோலை யடுக்கிவைக்க இடம் கேட்டு 18-வது நூற்றுண் டின் தொடக்கத்திலேயே நாட்டுக்கு நாயகர்களாய்விட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்து 'பகுதிப் பணத்தையும் கட்டமாட்டோம், பணிந்து போகவுமாட்டோம்,' என்று வேங்கைகளென வரிப்புலிகளெனப் பாய்ந்த பாஞ்சாலங் குறிச்சி பாளையக்காரத் தலைவர்களும், வீர கட்டபொம்மன் பாண்டித்துரை, துரை சிங்கம், பாதர்வெள்ளை, ஊமைத் துரை போன்ற மகா வீரர்களை உள்நாட்டுக் கயவர்கள் காட்டிக்கொடுக்க தூக்கிலேற்றிக் கொன்ற கொடுமதி யாளர்களை எதிர்த்து, எது நடந்தாலும் அவன் செயல், எம்மாலாவது ஒன்றுமில்லை என்று தன்னிலை மறந்த மக்களையே கோடி கோடியாகக் கொண்ட இந்நாட்டில் சுதந்தரச் சுடரைக் கொளுத்துவதென்பது எவ்வளவு பயங்கரமானது என்பதை அந்த ஆதிகால வரலாறுகள் செப்புகின்றன.

செல்வத்தைக் காட்டிச் சிலரை, செங்கண்ணை உருட்டிச் சிலரை, எரியீட்டிக் காட்டி சிலரை, இன்பத்தை எடுத்துச் சொல்லி சிலரை, துன்பத்தை எடுத்துச் சொல்லி

சிலரை, துப்பாக்கியைக் காட்டி சிலரை ஏமாற்றியிருக்கிறது அகிலம். ஆனால் ஏமாற்றுவோர் அதிகமில்லாமலே ஏமாந்தவரைக் கோடிக் கோடியாகக் கொண்டது நம் நாடு. அதை நல்வழிப் படுத்த, நாகரிகப் பாதையிலே அழைத்துவர, விடுதலை வேட்கையையுண்டாக்க, அதைத் தணிக்கும் மார்க்கத்தையும் எடுத்துக்காட்ட பலர் தேவைப்பட்டார்கள். உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கும் பேராற்றல் படைத்தவர்கள் பலர் தேவைப்பட்டார்கள். சொல்லோடு நில்லாமல் செயலாலும் மக்களை இழுக்கும் செயலேர் உழவர்கள் பலர் தேவைப்பட்டார்கள். சிறைக்கஞ்சாச் சிங்கங்கள், சித்திரவதையைத் தன் மித்திரன் எனக் கட்டித்தழுவும் கர்மவீரர்கள் பலர் தேவைப்பட்டார்கள். தூக்கில் மாண்டு துடிப்பதாயினும், தாயின் கைவிலங்குகள் தூள் தூளாக வேண்டும் என்ற தூய நெஞ்சினர் பலர் தேவைப்பட்டார்கள். 19-வது நூற்றுண்டின் உதய காலத்திலே ஒரு சிலரே தோன்றினுர்கள். அவர்களிலே தென்னகத் திலகமாய் விளங்கியவர் டாக்டர் P. வரதராஜுலு அவர்கள். என்று விடுதலையின் முதல் சங்கநாதம் முழங்கியதோ அந்த சங்க நாதத்தை முழக்கியவர்களிலே முன்னணியில் நின்றுர் இவர்.

### *நாய்க்கர், நாயுடு, முதலியார்*

நாய்க்கர், நாயுடு, முதலியார் என்று தென்னுட்டு விடுதலை வீரர்கள் மூவரைக் குறிப்பிடுவதுண்டு. தற்பெருமையற்ற உண்மையைச் சொல்லவேண்டுமானுல், நாய்க்கரையும், முதலியாரையும் நாயுடுதான் அரசியலுக்கு இழுத்து வந்தார் என்று சுதந்தர வரலாறு செப்புகிறது.

"பொன்னாற் பிரயோசனம் பொன் படைத்தாருக்குண்டு. பொன் 'தன்னால் பிரயோசனம் பொன்னுக்கு அங்கு ஏது உண்டு அத்தன்மையைப்போல்," என்ற பழமொழி ஒன்றுண்டு. அதேபோல் டாக்டர் நாயுடு அவர்களால் நாடு நன்மை பெற்றது. நாட்டால் நாயுடு நன்மை பெற்றது நாடு சுதந்தரம் அடைந்துவிட்டதே என்ற ஒரே ஒரு சந்தோஷந்தான்.

## *பொதுப்பணி என்றால்...*

இன்றைய பொதுப்பணியைவிட அன்றைய பொதுப் பணி, அது அரசியலைப் பொருத்ததாயிருந்தாலும், சீர் திருத்தத்தைப் பொருத்ததாயிருந்தாலும் மரண விளையாட் டாகவே இருந்தது. படித்தவர்களுக்காக என்ன செய்தீர் கள்? பாமரர் உள்ளங்களைத் தொடுவதற்காக என்ன முறையைக் கையாண்டீர்கள்? செயல் வீரர்களுக்கு நீங்கள் செய்துகாட்டிய செயல் என்ன? என்ற வினாக்கள் அவ்வளவுக்கும் இவருடைய அரசியல் வாழ் விலே விடைகளிருக்கின்றன.

படித்தவர்களுக்காகப் பத்திரிகை நடத்தினோம். பாமரர்களுக்காக மேடையிலே பிரசங்கம் செய்தோம். செயல் வீரர்களுக்காகச் சிறை சென்று காட்டினோம். என்ற எல்லாவித விடைகளையும் தந்திருக்கிறது இவரது வாழ்க்கை. அத்தகு மேதையின் பிறப்பிடம் யாதென நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? மேலே செல்வோம்.

## தோற்றம்

சேலம் மாவட்டத்திலுள்ள இராசிபுரம் என்ற ஊரில் 1887-ம் ஆண்டு ஜூன் திங்கள் 4-ஆம் நாள் பிறந்தார்.

தந்தை திரு. பெருமாள் நாயுடு, தாய் திருமதி குப்பம்மாள். எட்டாவது வயதிலே தந்தையையும் பன்னிரண்டாவது வயதிலே தாயையும் இழந்துவிட்டார். பெருவாரியாக எல்லா அறிஞர்களின் நிலையே இப்படித்தான் இருந் திருக்கிறது. நாட்டுக்கு நல்லவன் தோன்றிவிட்டான், நமக்கென்ன வேலை என்று பெற்றோர்கள் போய்விடுகிறார் களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அதன் காரணமாகவே அடுத்த மாவட்டமாகிய கோவை மாவட்டத்திலுள்ள உடுமலைப்பேட்டையில் ஓரளவுக்கே படித்தார். படிப்பின் எல்லையை எட்டிப் பிடிப்பதற்குள் குறிப்பாகத் தேசிய இயக்கமும், சிறப்பாக வங்காளப் பிரி வினைச் சட்டமும் இவரை இழுத்துக் கொண்டன.

மாணவப் பருவத்திலேயே மாணவர்களை ஒன்று சேர்த்து விதேசி உடைகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். கொளுத்தியது அன்னிய உடைகளைத்தான் என்றாலும், அன்னிய ஏகாதிபத்தியத்தின் முகத்தில் கொள்ளி வைத்த தைப் போன்றதல்லவா அந்தச் செயல்? எந்த நாட்டுக் கொடி இங்கே பறந்துகொண்டிருந்ததோ, எந்த நாட்டு அதிகாரம் இங்கே ஆணவ நடை போட்டுக்கொண்டிருந் ததோ, எந்த நாட்டுச் சட்டங்கள் இங்கே தம் கோரக் கை களை விரித்துக்கொண்டிருந்தனவோ, எந்த நாட்டுத் துப் பாக்கிகள் இந்த அடிமை நாட்டுக் கோட்டைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தனவோ, அவைகளுக்கெதிராக, அதே ஐரோப்பிய சர்க்காரின் கண்ணுக்கு முன்னால், அவர்கள் தாயகத்தில் உற்பத்தியாகி, அவர்களுடைய இன மக்க ளுக்கு நல்வாழ்வு அளித்துவந்த லங்காஷயர் மில்களின் துணிகளைக் கொளுத்துவதென்றால் சீறிய சிங்கம் அறி

வுற்றுத் தீ விழித்து, வேறி பயிர்ப் பொங்க வேப்பாடும் போன்று தரி. மூறி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டது சிங்கம், என்ற நிலையில் சர்க்கார் சீறியது. கல்விக் கூடம் கவலைக் கூடமாக மாறியது. அலை மோதிக் கிரை மோதிக் கொண்டிருந்த ஆங்கில ஏகாதிபத்தியக் கடலில் புயல் உருவெடுத்துவிட்டது. அது எந்த எந்தக் கலங்கரை விளக் கங்களைத் தாக்கித் தகர்த்தெறியுமோ தெரியாது—என்ற நிலை அன்று.

முதலில் அவர்கள், போர் புரிந்து நாட்டைப் பிடித் திருந்தால் இந்தியாவின் வீரத்தை ஓரளவுக்காவது புரிந்து கொண்டிருப்பார்கள். ஆதியில் சீப்பும் சோப்பும் கண் ணுடியும் விற்க வந்தவர்கள், வந்தவர்கள் எந்த நாட்டினரா யிருந்தாலும் வாழ இடங்கொடுக்கும் தாராள சிந்தை யரின் மெய்ப்பாட்டுணர்ச்சியைத் தவருகக் கணக்குப் போட்டார்கள் வெள்ளையர்கள். இனி எக்காலத்திலுமே இந்தியாவில் சுதந்தரச் சூரியன் உதயமாக மாட்டான் என்று கல்கத்தா இருட்டறை (Calcutta Black Hole) யைக் கொண்டே முடிவு கட்டிவிட்டார்கள்.

## *வீரம் பெரிதா—விவேகம் பெரிதா?*

இந்த இரண்டையும் இரட்டைக் குழந்தைகள் என்றுகூடச் சொல்ல முடியாது. ஏனெனில் வீரம் பயன் படவேண்டிய இடத்தில் விவேகமும், விவேகம் பயன்பட வேண்டிய இடத்தில் வீரமும் பயன்படுவதில்லை. இந்த இரண்டும் தனித் தன்மையுடையன. இரண்டையும் ஒரு சேரப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படுவதில்லை. ஆனால் திடும்பிரவேசமாக இரண்டையும் ஒன்ருக இணைத்துப் பயன்படுத்தும்போது அதை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அகிலத்தில் எந்தச் சக்திக்கும் இருந்ததில்லை என்

பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கியது நம் நாட்டின் சுதந்தரப் போர்தான். வெள்ளையர்கள் இதுவரை வென்ற நாடுகளில் அவர்கள் இரண்டையும் ஒன்றாக ஒரே நேரத்தில் பயன்படுத்தியதே இல்லை. முதலில் விவேகத்தைப் பயன்படுத்தி உள்ளே நுழைவார்கள். பிறகு வீரத்தைக் காட்டி வேரூன்றி விடுவார்கள். இதுதான் அவர்கள் கையாண்ட முறை. அத்தகு மனப் போக்குடையவர்களை எதிர்ப்பதற்கு விவேகமும் வீரமும் ஒரு முகமாகப் பயன் பட்டன. அந்தப் பேருதவியை அளிக்க வல்ல வீரர்களும் இருந்தார்கள், விவேகிகளும் இருந்தார்கள். அதில் இன்னும் பெரிய வியப்பு என்னவென்றால், யார் வீரர்களாக இருந்தார்களோ அவர்கள் விவேகிகளாகவும் இருந்தார்கள். யார் விவேகிகளாக இருந்தார்களோ அவர்கள் வீரர்களாகவும் இருந்தார்கள். அந்தப்பெரும் படையின் தளகர்த்தர்களிலே சிறந்த தென்னாட்டுத் தளகர்த்தராக இருந்தார் இவர்.

எந்தச் சூழ்நிலைகளாலும் உந்தித் தள்ளப்படாமல் தனக்குத் தானே நினைத்துத் தானே போராட்டத்தில் குதித்து, பிறரையும் தூண்டி அவர்களையும் சுதந்தர வேட்கை கொள்ளச் செய்த நிலை இவருடைய பள்ளிப் பருவத்திலேயே அதாவது 5–வது படிவம் படிக்கும் போதே தொடர்கிறது.

## வெள்ளையரைத் தாக்கிய உடுமலை

கோவைக்கும் திண்டுக்கல்லுக்கும் இடையே கோவையிலிருந்து சுமார் 50 மைல் தொலைவிலுள்ள ஷ உடுமலைப்பேட்டையிலிருந்த உயர்நிலைப் பள்ளியில் 5–வது படிவம் படித்துக்கொண்டிருக்கும்போது அதாவது 1907

-ஆம் ஆண்டு, மாணவர்களைச் சேர்த்து 'முன்னேற்றச் சங்கம்' (Progressive Association) என்ற பேரால் ஒரு சங்கத்தை அமைத்து அதில் அன்றைய அரசியல் நிலைமைகளைப் பற்றிச் சொற்போர் நடத்துவதும், சில நேரங்களில் பெரியவர்களை அழைத்து ஏதாவது முக்கியமான பொருள்களைப்பற்றிப் பேசச் செய்து, அவற்றிலுள்ள உண்மைகளை மாணவர்களுக்கு உணர்த்துவதுமான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார். அன்று, மாணவர்கள் அரசியலிலே கலந்துகொள்ளக் கூடாதென்ற சட்டம் இருந்ததால் ஷ ஏற்பாடுகளனைத்தும் அம்பலத்தில் நிகழாமல் அறையிலேயே நிகழ்ந்துகொண்டிருந்தது.

## முதல் அழைப்பு

ஒருநாள் அந்த ஊரிலிருந்த பிரபல வழக்கறிஞர் திரு. அப்பாவு பிள்ளையவர்களை அழைத்து, 'யோக்கியமா யிருப்பதே நல்ல உபாயம்' (Honesty is the best policy) என்ற பொருளில் பேசச் செய்திருந்தார்கள். அவர் பேசிக்கொண்டே வரும்போது, நம்மை வெள்ளையன் தந்திரமாக ஆளுகிறான் என்பதற்கு உதாரணம், இன்று எனக்குப் பேசத் தந்திருக்கிற பொருளிலேயே இருக்கிறது. ஏனெனில், 'Honesty is the best policy' யோக்கியமாயிருப்பதே நல்ல உபாயம் என்றானே தவிர, 'Honesty is the best principle,' யோக்கியமாயிருப்பது நல்ல கொள்கை என்று சொல்லவில்லை. Policy என்பது உபாயம், அதற்குப் பதில் Principle, கொள்கை என்றிருக்கக் கூடாதா என்றார். இதற்குள் அப்போது இவரோடு படித்துக்கொண்டிருந்தவரான திரு. R. K. பலிஜா என்பவர் கூட்டம் நடந்துகொண்டிருந்த கடையின் பல

கைகளை ஒவ்வொன்றாக மூடினார். அதனுள்ளே பேசிக் கொண்டிருந்த வக்கீல், மாணவர்கள், மற்றோர் தமிழ்ப் பண்டிதர் திரு. சிவகுருநாதம் பிள்ளை ஆகிய அனைவரும் அகப்பூட்டுக்கொண்டார்கள். தமிழ்ப் பண்டிதர் உள்ளே இருந்தபடியே, ஐயோ, குய்யோ என்று கத்தினார். வெளியே இருந்த R. K. பலிஜா அவர்கள் கூச்சல் பொறுக்க முடியாமல் கதவுகளைத் திறந்து விட்டுவிட்டார்.

வெளியே வந்த தமிழ்ப் பண்டிதர் சிவகுருநாதம் பிள்ளையவர்கள் நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய் விஷயங்களைச் சொல்லிவிட்டார்.

## போலீஸ் வருகை

போலீஸ்காரர்கள் உடனே கூட்டம் நடந்துகொண்டிருந்த இடத்திற்கு வந்தார்கள். அப்போது வெள்ளையரை எதிர்த்துப் பேசுகின்ற இடமே வெடி குண்டு செய்கின்ற இடம் என்று நினைத்த நேரமல்லவா அது. ஆகவே போலீஸ்காரர்கள் இந்தப் பரபரப்பைக் கொண்டதில் ஆச்சரியமில்லை. அழைப்பு வந்துவிட்டது மாணவர்களுக்கு. ஆம், அதுதான் சர்க்காரின் முதல் அழைப்பு கண்ணியமான குடும்பங்களிலே பிறந்த கௌரவமான மாணவர்கள் எழுச்சியின் கால் கோள் விழாவெனப் பூரிப்போடு ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். அழைத்துச் செல்லப்பட்ட மாணவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுத் திருப்பியனுப்பப் பட்டார்கள்.

தமிழ்ப் பண்டிதர் கோபத்திற்கு என்ன காரணம் என்பதற்குப் பல நிகழ்ச்சிகள் உண்டு. அதில் ஒன்றை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம். அக்காலத் தமிழ்ப்

பண்டிதர்களிலே ஒரு சிலர் வகுப்புகளிலே என்ன கேள்வி களைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள் என்பதைக் கவனிப் போம். பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, வையகம் போற்றும் வள்ளுவன் குறள் ஆகிய ஏதாவதொன்றில் கேள்விகள் கேட்டிருக் கலாம், அல்லது படிக்கும் மாணவர்களின் பருவத் திற்கும் பாடத்திற்கும் ஏற்ற கேள்விகளைக் கேட்டிருக் கலாம். அதை எல்லாம் விட்டு விட்டு, தலை சொட்டை யாவதற்கு என்ன காரணம்? (அவருக்கு சொட்டைத் தலை) என்றார். சொட்டைத் தலைப் பருவத்திற்கு வராத மாணவர்களைப் பார்த்து, சொட்டைத் தலையாயிருக்கும் தமிழ்ப் பண்டிதர், சொட்டைத் தலையைப்பற்றிக் கேள்வி கள் கேட்டிருக்கக் கூடாது. எப்படியோ கேட்டுவிட் டார் தமிழ்ப் பண்டிதர். கொஞ்ச நேரம் வகுப்பின் எந்த மூலையிலிருந்தும் பதில் வரவில்லை. மாணவ வரதராஜுலு எழுந்து நின்றார் கம்பீரமாக. "ஐயா! மூளை வறண்டு போவதனால்தான் தலை சொட்டையாய் விடுகின்றது" என்று பதில் அளித்தார். வகுப்பில் ஒரே ஆரவாரம், எக்காளக் கூச்சல். ஒரே அமளி. இப்படியே பல அனு வசியமான கேள்விகள், ஆணித்தரமான பதில்கள். இந்தப் போக்கிலேதான் தமிழ்ப் பண்டிதருக்கும், மாணவர்களுக் கும் வெகு தூரம் இடைவெளி விட்டுப்போய்விட்டது அந்த நாளில்.

## முற்றுப் புள்ளி

இந்த நிலையிலே 8-வது வயதில் தாயையும், 12-வது வயதில் தந்தையையும் இழந்துவிட்ட இவர், படிப்பை

10 (மெட்ரிகுலேஷன்) ஆவதோடு முடிக்க வேண்டியதாயிற்று. உடுமலையில் படிப்பை முடித்துக்கொண்டு கோவையில் படிக்கும்போதுதான் R. K. சண்முகம் அவர்கள் இவர் உடன் மாணவராக இருந்தார்.

மேற்கொண்டு படிக்க முடியாத நிலையிலே பத்தாவதோடு படிப்பை முடித்துக்கொண்டு, வைத்திய முறையைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவாவின் காரணமாக மருத்துவத் தொழில் துறையை கற்க வேண்டியவரானார். விடுதலை முழக்கத்தால் மக்களின் உள்ளத்தில் ஊறிப் போன அடிமை நோய்க்கு மருந்தும், பஞ்சத்தால் பசியால் ஏற்படுகிற பிணிக்குத் தக்கதோர் மருந்தும் கொடுக்கவேண்டுமென்று நினைத்தார் போலும். அதனால் தான் இவரைத் தேசாபிமானமும், தொழில் நுட்ப அறிவும் ஒரு சேர இழுத்திருக்கின்றன.

## வைத்தியம் கற்றல்

சென்னையில் பர்மா மெடிகல் சர்விசுக்கு இரண்டு ஆண்டுகள் பயின்று, பிறகு கல்கத்தாவில் அமைக்கப்பட்டிருந்த தேசிய மருத்துவக் கல்லூரி (Calcutta National Medical College) யில் இரண்டு ஆண்டுகள் பயின்று பதிவு செய்யப்பெற்று, வைத்தியத் தொழிலில் ஈடுபட்டார்.

## திருப்பூர்—சேலம்

மருத்துவத் தொழிலை முதலில் திருப்பூரிலும், பிறகு சேலத்திலும் நடத்தினார். குணமடைந்த லட்சக் கணக்கான மக்களின் நல்லாசி காட்டுத் தீப்போல் பரவியது. செல்வமும் செல்வாக்கும் பேரும் புகழும் இமயமென உயர்ந்தன. நோய் நீங்குவதற்கு மருத்துவரால் தரப்படும்

மருந்து மாத்திரம் காரணமல்ல. நோயாளிகளிடம் பழகும் முறை, காலா காலத்தில் அவர்களைக் கவனிக்கவேண்டிய கடமை, இரவு பகல் எந்த நேரத்திலும் சலிப்பில்லாமல், முகம் கோணாமல், முணு முணுக்காமல், அவர்கள் குறையை உற்றுக் கேட்டுப் பரிகாரம் தேடும் பண்புகளும் ஒரு நோயாளி குணமடைவதற்கு அனுசரணையாகச் சேர்கின்றன. அந்த வகையில் டாக்டர் நாயுடு அவர்கள் கொஞ்சமும் பின்வாங்கியவரல்லர், ஏன்? கடைசி வரையிலும் எந்தக் கட்சிக்காரர்கள் வந்தாலும் வரவேற்று உபசரித்து' வந்த வேலைகளை உடனுக்குடன் கவனித்தனுப்பும் பெரும் பணியில் சளைக்காமல் ஈடுபட்டிருந்தார்.

## வருமானம்

தான் செய்து வந்த தொழிலில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 24,000 சம்பாதித்தார். அதனால் ரூ. 3,000 வருமான வரி செலுத்த வேண்டுமென்று அரசாங்கம் கேட்டிருந்தது. அதைத் தர மறுத்துவிட்டார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வேருன்றலைச் செய்ய இவர் சம்மதிக்கவில்லை. எப்போது மக்களுக்குச் சரியான பிரதிநிதித்துவம் சர்க்காரில் இல்லையோ அப்போது மக்களும் வரி செலுத்துவது கூடாது என்ற கொள்கையை வலியுறுத்தும் முகத்தான் தென்னாட்டில் முதன் முதலில் செய்து காட்டியவர் இவர்தான். 'தென்னாட்டில் பரிபூரணமான ஒத்துழையாமையைக் கடைப்பிடித்தவர் இவர்தான்,' என்று C. R. தாஸ் அவர்கள் எழுதியிருக்கின்றார்.

### பத்திரிகைகள்

படித்த மக்களிடையே நாட்டுணர்ச்சியைப் பரப்ப ஒரு பத்திரிகையும் இல்லாதிருந்த நேரம். அதுவும் வெறும் தமிழில் மாத்திரம் நடத்தினல் பயன்படுமா, மேலும் அன்று ஆந்திரம் இணைந்திருந்த தமிழகமாயிற்றே. அதோடு வெள்ளையர்களுக்கும் அவர்கள் நடத்தி வந்த சர்க்காருக்கும், நாம் யார்? நமது குறிக்கோள் எத்தகையது? என்று காட்டித் தீர வேண்டும். அதற்காக ஒரு ஆங்கிலப் பத்திரிகை, தெலுங்கு, தமிழ் ஆகிய மூன்று பத்திரிகைகளைத் தொடங்கினர்.

முதல் தொடங்கிய தமிழ் வாரப் பத்திரிகை பிரபஞ்ச மித்திரன். இது 1918-ல் தடை செய்யப்பட்டதனல், தமிழ் நாடு என்ற தினசரியும், இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற ஆங்கில தினசரியும், ஆந்திர பிரஜா என்ற தெலுங்கு தினசரியும் நடத்திக்கொண்டிருந்தார்.

### உதவி ஆசிரியர்கள்

லெப்டினண்ட் கவர்னராக இருந்த திரு. K. சந்தானம் அவர்கள், இன்றைய தினமணி ஆசிரியர் திரு. சிவராமன், சென்னை மாநில கல்வி உயர்தர அதிகாரி (Director of Public Instruction) திரு. சுந்தரவடிவேலு அவர்கள், இப்போது இலங்கையிலிருந்து வெளிவரும் வீர கேசரி என்ற பத்திரிகையின் ஆசிரியர் திரு. அரி அரன் அவர்கள், சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் சுதேசாபிமானி பத்திரிகையின் ஆசிரியர் திரு. சுப்ரமணிய ஐயர், தினசரி ஆசிரியர் திரு T. S. சொக்கலிங்கம், காந்தியின் வாழ்க்கை வரலாறுகளைத் தமிழில் எழுதிக்கொண்டிருக்கும் திரு. வெங்

கடராசுலு, திரு. ஸ்டாலின் சீநிவாசன், சென்னையி லிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் ஆந்திர பிரபா என்னும் பத்திரிகையின் ஆசிரியர் திரு. நர்லா வெங்க டேசுவர ராவ் ஆகியோர்கள் டாக்டர் நாயுடு அவர்களின் கீழ் உதவி ஆசிரியர்களாக வேலை பார்த்தவர்கள். அதோடு, இப்போது பிரெஞ்சு நாட்டில் இந்தியத் தூதுவராக இருக் கும் சர்த்தார் K. M. பணிக்கர் அவர்கள் டாக்டர் நடத்தி வந்த பத்திரிகைகளுக்கு லண்டன் நிருபராக இருந்திருக் கிறார். தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவ ஞானம் அவர்கள் அச்சுக் கோப்பவராக இருந்திருக் கின்றார்.

## ஒரே நேரத்தில் பல குண்டுகள்

செங்கோல் பெரிதென்றார் அரசர். சிலுவை பெரி தென்றார் பாதிரியார். இல்லை, இல்லை, செங்கோலை விட சிலுவையை விட என் பேனாவே பெரிதென்றான் வால் டேர். அதேபோல் செங்கோல் சிறந்ததென்றது, செங் கதிரோன் மறையாத எங்கள் ஆட்சி செல்லாத காலமே வராதென்று நினைத்தது ஏகாதிபத்தியம். இன்று உலகத் தின் பல இடங்களில் ஆங்கில ஆட்சி மறைந்துவிட்ட தென்றாலும், அதைப்பற்றி இன்னும் உலகம் பேசிக் கொண்டிருப்பதற்கே காரணம் அதன் பேனா எழுதிக் குவித்த எழுத்துக் குவியல்கள்தான் என்பதை டாக்டர் உணராதவரா என்ன? ஆகவே எழுதிக் குவிப்போம். நமக்குத் தெரிந்த மொழிகளில் எழுதிக் குவிப்போம், என்று எண்ணினார் அவர், வைரத்தை வைரத்தால் வெட்ட வேண்டும் என்பதும், முள்ளை முள்ளால் களையவேண்டும் என்பதும், இவருடைய அரசியல்

வாழ்வை மெய்ப்பிக்கும் வகையில் தீவிர எழுத்துச் சுடர்கள் நாயுடு அவர்களின் பத்திரிகை உலைக் களத்தி லிருந்து வெளிக் கிளம்பின. டாக்டராக இருந்த இவர், "எப்படி இத்தனை செய்தித் தாள்களை நடத் தும் பேராற்றல் பெற்றார் என்று நமக்கு வியப்பாகத் தோன்றுகிறதல்லவா? இங்கேதான், 'சுயநலமில்லாத விருப்பம் நிறைவேற்றப்படும்' என்ற முதுமொழி உண்மை தான் என்ற முடிவுக்கு வருகின்றோம். இந்த நிலையில் ஒரே நேரத்தில் ஒரே இடத்திலிருந்து மூன்று பீரங்கிகள் முழங்கியதைப் போலத் தமிழ் தெலுங்கு ஆங்கிலம் ஆகிய மூன்று பத்திரிகைகளும் முழங்கின. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அயல் நாட்டு அரிமா எழுந்து நின்று சுற் றிப் பார்க்கத் தொடங்கியது.

எழுத்துக்கள் எரியீட்டியெனத் தன்னைத் தாக்கு வதைக் கண்ட சர்க்கார் பத்திரிகையை நிறுத்த இயலா மல் ஆயிரம் ரூபாய் ஜாமீன் கேட்டது. கட்டவில்லை.

## மதுரை நகரமே பட்டாள மயம்

1918-ஆம் ஆண்டு டாக்டர் நாயுடு அவர்களைக் கைது செய்து மதுரையில் வழக்குத் தொடுத்திருக்கின்றார்கள். விசாரணை நாள் மதுரை மக்கள் திரண்டனர். 'டாக்டர் நாயுடுவை விடுதலை செய்,' 'தென்னாட்டுத் திலகரை விடுதலை செய்,' 'சிறந்த தேசாபிமானியை விடுதலை செய்,' 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிக,' 'அடக்கு முறை யாட்சி ஒழிக' 'ஆணவ சர்க்கார் ஒழிக' என்று கோஷமிட்டுக்கொண்டு தொண்டர்கள் பொதுமக்கள் தெருத் தெருவாகச் சுற்றினர். போலீஸ்காரர்கள், ரிசர்வ் போலீஸ்காரர்கள் போதாமல் பட்டாளம் தருவிக்கப்பட்

டது. அதுவும் போதாமல் பெங்களூரிலிருந்து இயந்திரப் பீரங்கிகள் தருவிக்கப்பட்டன. கூட்டத்தைக் கலைக்க எங்கும் தடியடி, துப்பாக்கிப் பிரயோகம். கலகத்தில் இரண்டு பேர் மாண்டனர். நீதி மன்றத்தின் முன்னால் பட்டாளம் காவல் புரிந்தது, நகர் முழுதும் துப்பாக்கி ஏந்திய பட்டாளம் ரோந்து வந்தது. சென்னைக் கடுத்த பெரிய நகரமாயிற்றே மதுரை எனும் அக் கூடல்மாநகரம், மக்கள் எழுச்சி வைகை யாற்றின் வெள்ளம்போல் இரைச்சலிட்டுக்கொண்டு ஓடுகிறது. நாயுடு அவர்களுக்கு என்ன தண்டனை கிடைக்குமோ, இதுவே அங்கிருந்தோர் கவலை. ஆயுள் தண்டனை விதித்துவிட்டால், அப்படி ஒரு சுத்த சுதந்தர வீரனைப் பெறுவது அரிதாயிற்றே, என்ன செய்வோம். நாடோடியாக வந்தவன் நாட்டாண்மை செய்கிறான். நாட்டில் பிறந்தவர்கள் நாயினுங் கேடாய் நடத்தப்படுகிறார்கள், காலம் கர்ம வீரர்களைக் கடுமையான சோதனைக்குள்ளாக்கி யிருக்கிறது. நிலைமையை நேர்படுத்தவே முடியாதா—என்றெல்லாம் நீர் மல்கி நிற்கின்றனர் நல்லோர்கள். நான்கு மாதங்கள் நடந்தது அந்த சரித்திரப் புகழ் வாய்ந்த வழக்கு. அந்த வழக்கை நடத்தியவர் திரு. சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார். என்றாலும் அந்த வழக்கின் தீர்ப்பு 18 மாதங்கள் கடுங்காவல் தண்டனை என்று முடிவு சொல்லி நீதி நெடுமூச்சோடு நின்றது. கிடைத்த தண்டனைப்படி கடுஞ் சிறையிலே தள்ளப்பட்டார். பிறகு அந்த வழக்கின் அப்பீல் சென்னை உயர்நீதி மன்றத்துக்கு வந்தது. அங்கேயும் திரு. சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் திறமையால் தண்டனை ரத்து செய்யப்பட்டு விடுதலையடைந்தார்.

ஷ் வழக்கை நடத்தி முடிக்க சர்க்காருக்கு எவ்வளவு செலவாயிற்றென்று திரு. C. R. ரெட்டி அவர்கள் லெஜிஸ்லேடிவ் 'கௌன்சில் கூட்டத்தில் கேட்ட கேள்விக்கு ரூபாய் நாற்பதினாயிரம் செலவாயிற்றென்று சர்க்கார் பதில் அளித்தது.

## இரண்டாவது முறை சிறைத் தண்டனை 9 மாதங்கள்—1921 அக்டோபரில்

தமிழ்நாடு பத்திரிகையில் சட்ட விரோதமான கட்டுரைகள் எழுதினார் என்ற காரணத்துக்காக சேலம் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் 9 மாதங்கள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

## காந்தியாரின் நுழைவு

தென்னாப்பிரிக்கா சென்றிருந்த காந்தியார் அங்கே பல சட்டமறுப்புப் போராட்டங்களை நடத்திவிட்டு, குண்டடிக்கெல்லாம் தப்பி, ஒரு முறை தில்லையாடி வள்ளியம்மையாரால் காப்பாற்றப்பட்டு உயிர் தப்பி இந்தியா திரும்பினார். 1919–ஆம் ஆண்டில் காங்கிரசில் சேர்ந்தார். அவர் நேரடியாகப் போர்க்கொடியை உயர்த்திய ஆண்டும் அதுதான். அதற்கு முந்திய ஆண்டே அதாவது 1918-லேயே தென்னாட்டின் சிறந்த தியாகியாக விளங்கிய டாக்டர் நாயுடு அவர்கள் 18 மாதங்கள் கடுங்காவல் தண்டனை அடைந்திருக்கின்றார் என்பது இங்கே குறிப்பிடத் தகுந்தது.

## மக்களின் அபிமானம்

வருமான வரி செலுத்த மறுத்த நாயுடுவின் மோட்டார்காரும் நிலமும் பறிமுதல் செய்யப்பட்டன. இவ

ருடைய காரை ஓட்டிக்கொண்டு போவதற்கு ஒரு ஆளும் முன் வரவில்லை. அன்று D. S. P. ஆக இருந்த வெள்ளைக்காரன் நயத்தாலும் பயத்தாலும் பலரைக் கெஞ்சிப் பார்த்தான். எனினும் காரை ஓட்ட யாரும் முன்வர வில்லை. கடைசியில் அந்த வெள்ளைக்கார அதிகாரி யாரும் தன்னை நெருங்காமல் சுற்றிலும் மிலிடரி வளையத்தைப் போட்டுக்கொண்டு மிகுந்த தொல்லை, தாமதம், எதிர்ப்புகள் இவற்றுக்கிடையே காரை ஓட்டிச் சிறையில் கொண்டு போய்ச் சேர்த்தான்.

## *தண்டனைக்குக் காரணம்*

கீழ்க் குறிப்பிட்டுள்ளபடி கட்டுரை ஒன்று எழுதினர்: "ஒரு அமைதியான் சிறந்ததொரு ஆஸ்ரமத்தைக் கட்டி அதில் வைத்துப் போற்றிப் புகழவேண்டிய ஒரு மேலான ஆத்மாவை (காந்தியாரை), தன் வாழ்க்கையிலேயே அமைதியையும் அன்பையும் ஒற்றுமையையும் குறிப்பாக உலகத்திற்கும் சிறப்பாக இந்திய நாட்டுக்கும் போதித்த ஓர் ஒப்புயர்வற்ற உத்தமனை, தன் கொடுமை நிறைந்த கொடுங்கோலாட்சியிலும் இப்படி ஒரு உத்தமன் பிறந்திருக்கின்றானே என்று பெருமைப் படுவதற்குப் பதிலாக சாதாரண ஒரு கிரிமினல் குற்றவாளியைப் போல் கருதி இருட் சிறையில் தள்ளியிருக்கும் கருணையற்ற சர்க்காரோடு நான் ஒத்துழைக்க மாட்டேன் என்பதன் அறிகுறியாக நான் வரி செலுத்துவதை அறவே நிறுத்திவிட்டேன். மற்றவர்கள் என்னைப் பின்பற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளவில்லை. அவரவர்களுடைய நியாய சிந்தை எந்த அளவுக்கு இடங் கொடுக்கிறதோ அந்த அளவுக்கு அவரவர்கள் உசிதம்போல் நடந்துகொள்ளலாம்

என்று தெரிவித்துக்கொண்டு, என்னைப் பொறுத்த வரை சரியாகவோ தவருகவோ இத்தகு கொடுமை நிறைந்த சர்க்காருக்கு வரி செலுத்தப் போவதில்லை என்பதை உங்கள் நோட்டீசுக்குப் பதிலாகத் தந்து, மேற்கொண்டு உங்களால் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமோ அதை நீங்கள் தாராளமாகச் செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்;" இப்படி எழுதியதற்குத்தான் நாடு பூராவிலும் வரி கொடா இயக்கம் காட்டுத் தீப் போல் பரவியது. எங்கும் போலீஸ், சொத்துக்கள் பறிமுதல், வீடுகள் ஜப்தி, ஏலம், எடுப்பாரில்லாத நிலை, கொந்தளிப்பு எல்லாம்.

## இவர் எழுதிய நூல்கள்

இராணு பிரதாப சிங்கு, இராமதீர்த்தர் எழுதிய, 'வெற்றியின் இரகசியங்கள்' என்ற நூலைத் தமிழில் மொழி பெயர்த்தார். ஹென்றி போர்டு அவர்களின் வாழ்க்கை வரலாறு —இதை அவருடைய உரிமை வாங்கி வெளியிட்டார். அந் நாள் முதற் கொண்டு இந் நாள் வரை ஒரு உண்மையான தேசீய வாதியின் கொள்கைகளும் கோட்பாடுகளும் எப்படி இருக்கவேண்டுமோ அப்படியேதான் இருக்கின்றன அவரது சொற்பொழிவில். சமூக ஏற்றத் தாழ்வுகள், பொருளாதார பேதங்கள், ஜாதி முறைகள் என்னும் இழிவுகள், தீண்டாமை அண்டாமை எனும் அறியாமை அவ்வளவையும் சாடி நிற்கும் இவரது சொற்பொழிவு. இன்னருக்காக இதை எல்லாம் விட்டுவிட்டுப் பேசவேண்டும், இன்ன தலைவருக்காக இன்னின்ன உண்மைகளை மறைத்துவிடவேண்டும் என்ற வித்தியாசமோ, பாரபட்சமோ, முகஸ்துதியோ இருப்ப

தில்லை இவருடைய பேச்சில். ஆவேச மிக்க பேச்சாளி என்றோ, அனல் கக்கும் பேச்சாளியென்றோ இவரைச் சொல்ல முடியாதென்றாலும் படித்தவர்கள் முதல் பாமரர் வரை கேட்டு ரசித்து உடனே செயல்படும் நிலையிலே இருக்கும் இவர் பேச்சு. உண்மையைச் சொல்லிவிட்டால் மாத்திரம் போதாது நம் ஜனங்களுக்கு, அது உள்ளத்தைத் தொடும்படிச் சொல்லவேண்டும். ஒரு காலத்தில் அவர்கள் இருந்த மேன்மையை எடுத்துக் காட்டி இன்று அவர்கள் அடைந்திருக்கும் அவல நிலையை இடித்துக் கூறி, இழந்துவிட்ட வாழ்வைப் பெறுவதற்கான வழியையும் எடுத்துக் கொடுத்து, அதை அடைவதற்கான கஷ்ட நஷ்டங்களையும் சுட்டிக் காட்டித் தீரவேண்டும். அந்தக் கலையிலே மிகத் தேர்ச்சி பெற்றவர்களாலன்றி மற்றவர்களால் எளிதில் முடியாது. இவை எல்லாவற்றையும் விட தான் சொல்லியவண்ணம் நடந்து காட்டவேண்டும். அப்போதுதான் மக்கள் ஓரளவுக்காவது நம்பிப் பின்பற்றுவார்கள். அதன்படி எல்லாவற்றையும் செய்து காட்டியவர் இவர்.

## கொள்கையிலே மாற்றம்

1908-ல் சூரத்தில் நடந்த மாநாட்டில் காங்கிரஸ் கொள்கையிலே ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. அந்த ஆண்டுதான் பாலகங்காதர திலகர் காங்கிரசைக் கைப்பற்றினர் — தவறு. 1916ல்தான் கைப்பற்றினர்.

அதற்கு முன்பிருந்த காங்கிரஸ் கொள்கை, மிதவாதப் போக்குடையதாயிருந்தது. அதாவது, வெள்ளைக்காரர்கள் பார்த்துவந்த D. S. P. வேலைகள், கலெக்டர்

வேலைகள், I. C. S. படித்தவர்கள் பார்க்கும் உயர்தர உத்தியோகங்கள் ஆகியவற்றை ஏன் இந்தியர்கள் பார்க்கக் கூடாது என்ற நிலையிலேதான் இருந்தது. அந்த அளவுக்குக் கூட இந்தியர்கள் லாயக்கற்றவர்கள். அல்லது நம்பத் தகாதவர்கள் என்று ஏகாதிபத்தியம் நினைத்துக் கொண்டிருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் குறிப்பிடக் கூடிய பெரிய உத்தியோகங்களை எல்லாம் வெள்ளையரே பார்த்து வந்தனர். எப்படியாகிலும் அந்த உத்தியோகங்களை எல்லாம் பார்க்கவேண்டுமென்ற ஒரே நோக்கந்தான் காங்கிரசுக்கு இருந்து வந்தது.

அதையும் பெரும் புரட்சியின் மூலமோ கிளர்ச்சியின் மூலமோ, உள்நாட்டுக் கலகங்களின் மூலமோ, ஒத்துழையாமையின் மூலமோ பெறுவதாக அவர்கள் திட்டம் அமைத்திருக்கவில்லை. சாந்தமே இன்னதென்றறியாமல் சண்டித்தனத்தின் மூலமும் அடக்குமுறையின் மூலமும் சர்க்காரை நடத்திக் கொண்டிருக்கின்ற ஏகாதிபத்தியத்திற்கு நன்றியும் விசுவாசமும் உள்ளவர்களாய், ராஜ விசுவாசப் பிரமாணத்தோடு டீ உத்தியோகங்களைக் கெஞ்சிக் கேட்டு வாங்கிக் கொள்வது என்ற முறையிலே தான் அன்றைய காங்கிரஸ் இருந்தது.

**திலகரின் நுழைவு** திலகர் 1889ல் பம்பாயின் நடந்த கூட்டத்தில் அறிமுகமானார்.

தவறு (1908-ல் பாலகங்காதர திலகர் காங்கிரசில் காலடி எடுத்துவைத்தார்.) அவர் நுழைவுக்கு முன் மழையில் நிற்கும் எருமை போலிருந்த ஏகாதிபத்தியம், மின்னலால் தாக்கப்பட்ட மனிதன் நிலையடைந்தது. ஏனெனில் திலகர்தான், வெள்ளைய ஏகாதிபத்தியத்தை இந்திய

மண்ணிலிருந்து வேரோடு களைய வேண்டுமென்று கர்ஜித்தார். ஆனால் அவர் 1920-ல் இறந்து போனார்.

அவர் மறைவிற்குப்பின் அவர் பேராலேயே அதாவது திலகர் நிதி என்ற பேராலேயே காந்தியார் ஒருகோடி ரூபாய் திரட்டினர்.

## வ. உ. சிதம்பரனர்

குழப்பமில்லாத மனமுடையவர். எதிலும் தீவிரப் போக்கும் தெளிந்த குணமுமுடையவராக இருந்தாலும் சில நேரங்களிலே கட்டுக் கடங்காத உணர்ச்சிவசப்பட்டு விடுவார். எதிலும் முன்னணியிலே நின்று செயலாற்றும் துடி துடிப்பான எண்ண முடையவர். சில நேரங்களில் சட்டென நிதானத்தை இழந்துவிடும் இயற்கை சுபாவ முடையவர். அந்த நிலை அந்தக்காலப் போராட்டத்தில் சிலருக்குத் தேவைப்பட்டது. ஏனெனில் போர்க்களத்தில் எல்லார்க்குமே சிந்திக்கும் உரிமையை யளிப்பதில்லை. காரணம், போர்க்களத்தில் எல்லோருமே சிந்திக்கத் தொடங்கி விட்டால் போரின் தராதரமே மாறிவிடும். வெற்றி தோல்விகளை வெகுதூரம் கொண்டுபோய் விட்டாலும் விட்டு விடும். ஆகவேதான் பல்லாயிர உயிர்களையும் பலம் மிகுந்த கோட்டைகளையும், மக்கள் சொத்து சுதந்தரம் ஆகிய எல்லாவற்றையும் காப்பாற்றும் பொறுப்பை ஒரு சிலரிடமே ஒப்படைக்கப்படுகிறது. அத்தகு படை வரிசையில் கைகாட்டிய பக்கம் கனல் கக்கும் பீரங்கி போலிருந்தார் கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனர் அவர்கள். அவர் கைது செய்யப்பட்டார்.

*பாரதியார்*

பேராற்றல் படைத்த மாவீரர் சிதம்பரனுர் கைது செய்யப்பட்டார் என்றறிந்தவுடன் கவி சுப்ரமணிய பாரதியார் ஆங்கில சட்டங்களே அணுகமுடியாத புதுவைக்கு ஓடிவிட்டார். ஒரு சமயம் அந்த பிரெஞ்சுப் பகுதியிலிருந்தபடியே உணர்ச்சி மிகுந்த கவிகளை எழுதி அவற்றின்மூலம் மக்களைத் தட்டி எழுப்பலாம் என்று நினைத்தார் போலும். அவர்தானு இப்படிப் பிற்காலத்தில் 'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி,' என்று பாடியிருக்கின்ருர் என்று நம்மை நினைக்கச் செய்கிறது. சிதம்பரனுரைப் பிடித்துச் சிறையில் தள்ளியதைப்போல் பாரதியாரையும் தள்ளியிருந்தால் வீர கருத்துக்கள் நிறைந்த தேசிய கீதங்கள் வெளிவராமலும் போயிருக்க லாம். அந்த முறையில் அவர் தப்பித்தோடியதும் ஒரு நன்மைக்குத்தான் என்று கொள்ளவேண்டியிருக்கின்றது. 1908-ல் டாக்டர் நாயுடு அவர்கள் பாரதியாரோடு, புதுவையில் சிலநாள் தங்கியிருந்து, சுதந்தரம் வாங்கியே தீருவது என்ற வாக்குறுதியில் ரத்தக் கையெழுத்துப் போட்டிருக்கின்ருர். பாரதியாரிடம் எல்லையற்ற அன்பு கொண்டவர் நாயுடு அவர்கள்.

## குருகுல அமைப்பு

நெல்லை மாவட்டத்திலுள்ள சேர்மாதேவி என்றஊரில் குருகுலம் என்ற ஒன்று அமைத்து, அதில் இனப்பாகுபாடில்லாமல் எல்லாப் பிள்ளைகளையும் சேர்த்து, கல்வி, தேசாபிமானம், ஒழுக்கம் ஒழுங்கு, அரசியல், பொருளியல், சமூகவியல் ஆகிய

வற்றைப் போதிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்டது அந்தக் குருகுலம். அதன் வளர்ச்சியிலே குறிப்பாகப் பொதுமக்களும் சிறப்பாகக் காங்கிரஸ் கட்சியும் ஆதரவு காட்டியிருந்தது. அதன் காரணமாகவே பொதுமக்களும் செல்வந்தர்களும் கொடுத்த ஏராளமான நன்கொடை போக, காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து மாத்திரம் ரூ. 5000–நன்கொடையாக அளித்தார்கள். அதன் நிர்வாகப் பொறுப்பைக் காலஞ்சென்ற வ, வெ. சுப்ரமணிய ஐயரிடம் ஒப்படைத்திருந்தார்கள்.

### சாதி வேற்றுமை

இனவேற்றுமை, சாதி வேற்றுமை இல்லாமல் எல்லா மாணவர்களையும் ஒரே மாதிரி நடத்தவேண்டுமென்ற குறிக்கோளால் அமைக்கப்பட்ட அந்த சேர்மாதேவி குருகுலத்தில் உயர்சாதி எண்ணம் தலைகாட்டத் தொடங்கி விட்டது அதாவது பிராம்மணப் பிள்ளைகளுக்கு காயத்ரி மந்திரங்களையும், மற்றப் பிள்ளைகளுக்குப் பாசுரங்கள், தேவாரம், திருவாசகம் போன்றவைகளையும் கற்றுக் கொடுக்கத் தொடங்கினர்கள். ஆண்டவன் வழிபாட்டிலேயே அநர்த்தம் தொடங்கிவிட்டது. மேலும் சாப்பிடவும் பிராம்மணப்பிள்ளைகளுக்கும் மற்றப் பிள்ளைகளுக்கும் தனித்தனியிடம் ஒதுக்கப்பட்டுவிட்டது. சமயம் கிடைக்கும் போதெல்லாம் எப்படியாகிலும் தன் சாதிக்கு உயர்வு தேடிக்கொள்ள வேண்டுமென்று நினைக்கின்ற சனதனத் தன்மையிலே இருந்து, தேசிய அபிலாஷையின் முன்னால் எல்லாரும் சமத்துவமாகக் கைகோத்து நிற்பார்கள் என்று அன்றைய தேசத் தலைவர்கள், சீர்திருத்த வாதிகள் நினைத்ததில் ஆச்சரியமில்லை. அதிலும், தன்னை ஒரு பழுத்த

சனாதனி என்று சொல்லிக் கொள்வதைக் காட்டிலும், தேசத் தொண்டன் என்று சொல்லிக் கொள்வதிலே நூற்றுக்கு நூறு பெருமைப்பட்டுக்கொண்டிருந்த வ.வெ. சுப்ரமணிய ஐயர், இப்படி கட்டுக் கோப்புக் குலைந்து குப்புறவிழவிருக்கும் சனாதனத்திற்கு தேசியத்தின் பேரால், பொது மக்கள் பணத்தால், அதுவும் ஒரு அகில இந்திய தேசிய இயக்கமான காங்கிரசின் ஆதரவால் புதுமெருகு கொடுக்க முன்வந்து சுற்றுச் சார்புகளையும், சூழ்நிலைகளையும், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்டுள்ள விழிப்புகளையும் கொஞ்சங்கூட மதிக்காமல் இப்படி ஒரு பத்தாம்பசலித்தனத்தில் இறங்கிவிட்டாரே என்று மனம் வருந்தினர் பல தலைவர்கள். வருந்தியதோடு நின்று விட்டால் நிலைமை என்னாகும். யாராவது ஒருவர் தைரியமாக முன்வந்து அதைக் கண்டித்துத் தீரவேண்டும், அந்தச் செயல் கட்சிக்குள்ளிருக்கும் கட்டுப்பாட்டைக் கலைக்குமே என்று பின்னடைந்து விட்டால் நாளுக்கு நாள் கட்சி உருக்குலைந்து இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து விட்டால் அது எவ்வளவு பெரிய நட்டம் என்று உணர்ந்த டாக்டர் நாயுடு அவர்கள்தான் முதன் முதலில் அந்தக் குருகுலக் கொடுமையைக் கண்டிக்க முன் வந்தார். மேலும் அவர் அப்போது (1924) தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும், அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கத்தினராகவும் இருந்தார். இவர் கண்டிக்க முன்வந்ததுதான் தாமதம். கும்பகோணம், மாயவரம், தஞ்சை, மன்னார்குடி போன்ற ஊர்களிலிருந்த பிராம்மணர்கள் கொதித்தெழுந்தனர். தேசியப் போர்வையிலிருந்த பிராம்மணர்கள் எல்லாம் தங்கள் உண்மை உருவத்தைக் காட்டத் தலைப்பட்டனர்.

நாயுடு அவர்கள் பேச இருந்த கூட்டத்தைக் கலைத்துவிட வேண்டுமென்று சிலர் சதித்திட்டம் தயார் செய்து ஏது மறியாதவர்களையும், இன சனாதனப் பித்துப்பிடித்த பிராம்மணர்களையும் ஏவிக் கலகம் செய்யத் தொடங்கினார் கள். என்றாலும் கூட்டம் தொடங்கியாய் விட்டது.

## *விசித்திரமான கேள்வியும் வேடிக்கையான பதிலும்*

கூட்டத்தில் இவர் பேச எழுந்தவுடன், ஒரு பிராம் மணர் எழுந்து, 'நாயுடு அவர்களே! ஒரு கேள்வி' என்றார். கேட்கலாம் என்றார் நாயுடு.

கேள்வி : பிராம்மணர்களும் தமிழர்களும் சமம் என்கிறீர்களே, ஐந்து விரல்களும் ஒன்றாயிருக்கின்றனவா?

பதில் : இல்லை, ஏற்றத் தாழ்வாகத்தானிருக் கின்றன. உணவை அள்ளி எடுப்பதற்காக, பேனா பிடித்து எழுதுவதற்காக, இன்னும் பலவித வசதிகளுக்காக கை விரல்கள் குட்டையாகவும் நெட்டையாகவும் இருக்கின்றன. ஆனால் நீங்கள் சொல்வதைப் போல் ஒருவிரல் மற்றொரு விரலைத் தொடமாட்டேன் என்று சொல்வதில்லை. இந்த விரல் தொட்டதை நான் சாப்பிடமாட்டேன் என்று வாய் சொல்வதில்லை. அந்த புத்திகூட சனாதனிக்கு இல்லையே என்று கன்னத்தில் அறைந்த மாதிரி பதில் சொன்னார். அவ்வளவுதான் கூட் டத்தில் ஒரே ஆரவாரம், கைதட்டல்-இதைக் கேட்ட வைதீகர்களுக்கு ஒரே ஆத்திரம், அவமானம் எல்லாம் கலந்து கலகமாக உருவெடுத்தது. கலவரம் செய்யத் தொடங்கினார்கள். அவ்வளவுதான், அடுத்து ஐந்து

நிமிடத்தில் கலகம் செய்த பிராம்மணர்கள் எங்கே ஓடி மறைந்தார்கள் , என்று தெரியவில்லை. கலகத்தைத் தூண்டிய ஒருவர் ஒன்றும் அறியாதவர்போல மேடை பக்கத்திலேயே வந்து உட்கார்ந்துவிட்டார். கலகம் செய்த அவ்வளவு பேருக்கும் அடி. இதன் எதிரொலி தஞ்சை மாவட்டம் முழுதிலும் கேட்டது. குருகுலத்தை முன் நிறுத்திப் படமெடுத்தாடிய பாம்பு விஷப்பல் உடைபட்டு ஓடி மறைந்தது.

எத்தனையோ உருவங்களில் உள் நுழைந்து நாட்டைக் குட்டிச்சுவராக்கிக் கொண்டிருந்த சனாதனத்தின் முகமூடியைக் கிழித்தெறிந்து அதன் உண்மையான கோர சொரூபத்தை நாட்டுக்குக் காட்டியவர் நாயுடு அவர்கள்.

காலத்திற்கேற்றவாறு நடந்துகொள்பவர்களும் அநேகர் அதே சமூகத்தில் இருக்கத்தான் செய்தார்கள். அவர்களிலே டாக்டர் நாயுடு அவர்களால் கடைசி வரையிலும் மதிக்கப்பட்டவர் திரு. S. சீனிவாச ஐயங்கார் அவர்கள்.

'குளிர்ந்த நீரிலும் சில நேரம் வெப்பம் தோன்றுவதுண்டு. சிங்கத்தின் உடலிலும் சிலநேரம் குளிர்ச்சியான ரத்தம் ஓடுவதுண்டு,' என்ற பழமொழிக் கொப்ப, சனாதனக் கோட்டையிலும் ஓரிரு சீர்திருத்தவாதிகள் இருந்தார்கள் என்பதற்கு உதாரண மனிதராக திரு. S. சீநிவாச ஐயங்கார் அவர்கள் இருந்தார்கள்.

அரசியல் மேதைகள், பொருளாதார நிபுணர்கள், சமூகப் புரட்சிக்காரர்கள் என்றெல்லாம் மேலுக்குத் தங்களை மார்தட்டிச் சொல்லிக் கொண்டிருந்த வைதீகர்

களின் உள்ளத்தில் மறைந்து கிடந்த நஞ்சுக் கொள்கை கள் ஊடுருவி வெளியே வரவேண்டிய சந்தர்ப்பத்தைக் குருகுலப் போராட்டம் ஆக்கித் தந்துவிட்டது. நந்த வனத்தில் சில நச்சுப் பாம்புகள் இருப்பதைப்போல நாட்டு விடுதலைப் போர் முகாமில் சில நாச்சக்காரர்கள் இருக்கத்தான் செய்தார்கள். அவர்களை அடையாளம் கண்டுபிடித்து வெளியே கொண்டுவந்து நிறுத்திய பணியில் தமிழர்களே வெற்றி பெற்றார்கள். ஏனெனில் மேற்படி கிளர்ச்சியை கவனிக்கும் அளவுக்கு மேலிடத் தின் கவனத்தை இழுத்துவிட்டன. இங்குள்ள சனாதனிகள் காங்கிரஸ் மேலிடத்திற்கு அடித்த தந்திகள், "மானம் போச்சு, எங்கள் மங்காத கீர்த்தி போச்சு, இங்கே ஒரு ராவணன் (நாயுடு) தோன்றிவிட்டான், உடனே கவனிக்க" என்றெல்லாம் அடித்த தந்திகள் மலைபோல் குவிந்து விட்டனவாம் வடக்கே.

## நீதி வெளிச்சத்திற்கு வந்தது

கல்கத்தா நகரில், நாணயமும் நேர்மையுமிக்கவர் என்று இன்றளவும் வரலாறு பேசும் வங்கத் திலகம் தேசபக்த சித்தரஞ்சனதாசர் மாளிகையிலே-காந்தியார்-அனிபெசன்ட் அம்மையார்—ஜவஹர்லால் நேரு இவர்கள் முன்னிலையில் நாயுடு (1925) விளக்கம் தந்தார் விளக்கத் தின் சாரம் கீழே தரப்படுகிறது.

பிராம்மணர்கள் நுழைவால் எத்தனை வல்லரசுகள் வீழ்ந்துவிட்டன என்பதற்கான அசைக்க முடியாத ஆதாரங்களைக் கொண்டுவந்தார். அதில் குறிப்பாக,—கனிஷ்க சாம்ராஜ்யம் பிராம்மணர்களால் வீழ்ந்துவிட் டதன் உண்மையை எடுத்துச் சொல்லும்போது, நேரு

அவர்கள் குறுக்கிட்டு, இந்த ஆதாரங்கள் எல்லாம் எதிலே இருக்கின்றன என்று கேள்வி கேட்டார். சரித்திரப் பேராசிரியர் ராமச்சந்திர தத்தர் அவர்கள் எழுதிய 'கனிஷ்கர் வரலாறு' என்ற நூலில் இருக்கிறது என்று பதிலளித்தார் நாயுடு. அதை நேரு அவர்கள் உடனே தன் குறிப்பேட்டில் குறித்துக் கொண்டார்.

அப்போது அகில இந்திய காங்கிரசின் தலைவராக காந்தியாரும், தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவராக டாக்டர் நாயுடுவும் இருந்தார்கள் என்று மேலே குறிப்பிட்டிருக்கிறோம்.

குருகுல எதிர்ப்புப் போராட்ட சம்பந்தமாக மேலிடத்தில் நடக்கும் விசாரணையில் நாயுடு அவர்களுக்கு ஏதோ பெரிய தண்டனை கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். என்ன கிடைத்தது என்பதைப் பாருங்கள். குருகுலப் போராட்டத்தின் உண்மைகளைத் தெரிந்து கொண்ட காந்தியார், இந்து பத்திரிக்கையில்,

'You are perfectly right. I find nothing wrong in your conduct, as President of Tamilnad Congress regards Guru kulam Controverse, you go ahead. I shall not interfere', என்று எழுதினர்.

'தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் என்ற முறையிலே தாங்கள் குருகுலப் பிரச்சினையிலே நடந்து கொண்டது எவ்வகையிலும் தவறில்லை என்று காண்கிறேன். நீங்கள் மேலே செல்லலாம், நான் தலையிடுவதில்லை.'

இப்படி காந்தியார் எழுதியவுடன் ஆத்திரமடைந்த திருவாளர்கள், சக்கரவர்த்தி ராசகோபாலாச்சாரியார், Dr. T. S. S. ராசன், டாக்டர் சாமிநாத சாஸ்திரி ஆகியோர் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து விலகி விட்டார்கள். நாயுடு அவர்கள் தமிழ் நாட்டு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராயிருக்கும் வரையில் அவர்கள் காங்கிரசுக்குள் வரவே இல்லை. அதன்பிறகு குருகுலம் மூடப்பட்டது.

## *வெற்றியில் துக்கம்*

குருகுல வீழ்ச்சியின் வெற்றியைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போதே பிரஸ்தாப குருகுலத்தின் நிர்வாகியான வ. வெ. சு. ஐயர் குற்றாலம் நீர்வீழ்ச்சியில் தவறி விழுந்து இறந்து விட்டார் என்ற தந்திச்செய்தி கிடைத்தது. எந்த நபர் குருகுலத்தின் சமத்துவ நோக்கத்திற்கு விரோதமாக இருந்தாரோ-யார் படிப்படியாக மறைந்து வந்துகொண்டிருந்த வகுப்புவாதத்திற்கு மீண்டும் புத்துயிரளித்து அதை அரியாசனத்திலேற்ற முனைந்தாரோ அந்த வ. வெ. சு. ஐயரின் தகாத போக்கினைக் கண்டித்துக் கொண்டிருந்த கூட்டத்திலேயே அவருக்கு அனுதாபத் தீர்மானம் போட்டுக் கூட்டம் கலைந்தது. அவர் கல்லறையோடு அந்த ஏற்பாடும் மறைந்தது.

அதன்பிறகும் குருகுலப் பிரச்சினையை முன்வைத்து பிராம்மணர் பிராம்மணரல்லாதார் சண்டையைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்று பெரியார் விரும்பினார். ஆனால் அது டாக்டர் நாயுடு அவர்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஏன், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத்

தவறைச் செய்துகொண்டுவரும் சமூகம் குருகுலத்தில் செய்ததுதான் கடைசி தவறென்றோ, இனி எப்போதுமே அவர்கள் தவறே செய்ய மாட்டார்கள் என்றோ நினைப்பது தவறு. ஆகவே பிரஸ்தாப கருத்து வேற்றுமைகளுக்குக் காரணமாயிருந்த, குருகுல கர்த்தாவானவர் இறந்தபிறகு, அந்தப் பிணத்தை வைத்தழும் பேதமை நமக்குவேண்டாம் என்ற பெருந்தன்மையால் அதை நிறுத்திவிட்டார்.

## *தீர்மானம்*

எதிர்பாராத விதமாக குருகுலத்தில் ஏற்பட்ட வகுப்பு வாத கலவரங்களுக்குப் பிறகு ஜாதி வித்தியாசங்கள் கட்சியிலே இருக்கக் கூடாதென்ற காரணத்தால், திருச்சி யில் இவர் தலைமையில் நடந்த காங்கிரஸ் 'ஜெனரல்பாடி' கூட்டத்தில், திரு, ராமநாதன் அவர்கள், 'காங்கிரஸ் மகா சபை இந்தியாவின் ஏகோபித்த பிரதிநிதி ஸ்தாபனம் ஆகையால் அதில் ஜாதி வித்தியாசங்கள் இருக்கக்கூடா' தென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானத்தை தலைவர் அனுமதிக்கக் கூடாதென்று அங் கிருந்த பிராம்மண மெம்பர்கள் வாதாடினார்கள் என்ருலும் ஷ தீர்மானத்தைத் தலைவர் அனுமதிக்க வேண்டுமென்று பலர் வேண்டினர். தீர்மானத்தை அனுமதித்தார். நீண்ட விவாதத்திற்குப் பிறகு தீர்மானம் நிறைவேறிவிட்டது. அதில் M. K. ஆச்சாரி என்ற ஒரே ஒரு பிராம்மணர் மட்டும் வெளியேறி விட்டார். மற்ற பிராம்மணர்களனை வரும் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அதிலிருந்தே வகுப்பு அடிப்படையில் சனதனிகளுக்கு மனக்குழப்பம் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது.

அதுமுதற்கொண்டே இவர் கலியுக ராவணன் என்று தூற்றப்பட்டார். எவ்வளவு வசைமாரிகள் பொழிய முடியுமோ அவ்வளவு பொழிந்து பார்த்துவிட்டார்கள். அதன்பிறகு பம்பாயில் நடந்த செயற்கமிட்டி (Working Committee) தேர்தலில் சக்கரவர்த்தி ராசகோபாலாச்சாரி யாரும் இவரும் போட்டியிட்டார்கள். முடிவு தெரியா முன்னமே நாயுடு சேலம் சென்றுவிட்டார். என்றாலும் ராசகோபாலாச்சாரியாருக்கு 150 ஓட்டுகளும், இவருக்கு 450 ஓட்டுகளும் கிடைத்தன. இதைக் கொண்டே வளர்ந்துவரும் சமூக வளர்ச்சிக்கு யார் ஆக்கம் தேடு கிறார்கள், யார் அழிவைத் தேடுகிறார்கள் என்பது தெற் றென விளங்கியது, தென்னகத்தில் இருந்த சில சனாதனி கள் டாக்டர் நாயுடு அவர்களைக் கண்டித்தார்களே தவிர, சித்தரஞ்சனதாஸ், சுபாஷ் சந்திரபோஸ், M. R. ஜெயகர் போன்றார்கள் உண்மையான ஜனநாயகத் தத்துவங்களின் காவலன் டாக்டர் நாயுடுதான் என்று அடிக்கடி பாராட்டி னார்கள்.

## சைமன் கமிஷன் பகிஷ்காரம்

1929-ல் சைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்தபோது 'நமது நாட்டின் சுதந்தர எழுச்சியைக் காட்டவும், அதன் கௌரவத்தைக் காப்பாற்றவும் சைமன் கமிஷனைப் பகிஷ் கரிப்பது என்பது நமது மகத்தான காங்கிரஸ் கட்சியின் நோக்கங்களில் ஒன்றென நினைக்காமல், ஒவ்வொரு மனித னுடைய நீங்காத தேசீய கடமை என்றெண்ண வேண்டும்,' என்று எழுதி மக்களை ஊக்கிவிட்டார்.

## தொழிலாளர்களுக்காக

தொழிலாளர்களுக்காகப் போராடும் சிறந்த வழக்கறிஞர் போலிருந்தார். அதன் காரணமாகவே நாகப் பட்டணத்திலிருந்த ரயில்வே தொழிலாளர்கள் நலன்களுக்காக 1917-ல் ஒரு யூனியனை அமைத்து அவர்களுக்காகப் போராடினார். (இப்போது பொன்மலையிலிருக்கும் ரயில்வே தொழிற்சாலை அப்போது நாகப்பட்டணத்திலிருந்தது.)

## சிறைச்சாலைச் சீர்திருத்தம்

சிறையில் அரசியல் கைதிகள் மிகக் கேவலமாக நடத்தப்படுவதைக் கண்டித்து, தான் நடத்தி வந்த பத்திரிகைகளில் காரசாரமான கட்டுரைகளைத் தீட்டி மக்கள் ஆதரவைத் திரட்டினார். அதோடு நில்லாமல் சென்னை கவர்னரிடமும், சிறையதிகாரிகளிடமும் அடிக்கடி வாதாடிப் போதிய அளவுக்குச் சீர்திருத்தம் செய்தார்.

## இந்து மகா சபையில் நுழைவு 1940—45

ஜின்னு பாகிஸ்தான் கேட்காமலிருந்தால், அதற்கான முதல் மூன்று கேள்விகளை 14 கேள்விகளாக மாற்றுமலிருந்தால் இவர் இந்து மகாசபையில் சேர்ந்திருக்க மாட்டார். இன்றைய பாகிஸ்தான், இந்தியாவைப் பற்றி என்ன நினைக்கிறதோ அதை முன்கூட்டியே தெரிந்துகொண்டவர் இவர். இந்தியாவை அது எப்படி நடத்தும் என்பதை மிகுந்த தீர்க்க தரிசனத்தோடு அன்று சொன்னவரும் இவர்தான்.

## பதிலுக்குப் பதில்

'பாகிஸ்தான் கொடுக்காவிட்டால் மற்ற, முஸ்லிம் நாடுகளைச் சேர்த்துக்கொண்டு இந்தியாவை அழித்து விடுவோம்' என்று கலிக்குஜமான் லண்டனிலே பேசினர்.

அதற்குப் பதில் கொடுக்கும் வகையில் மற்ற முஸ்லிம் நாடுகளைச் சேர்த்துக்கொண்டு இந்தியாவைத் தாக்கினல் நாங்களும் முஸ்லிமல்லாத நாடுகளான சைஞ, ஜப்பான், பர்மா, ரஷ்யா போன்ற நாடுகளைச் சேர்த்துக் கொண்டு உங்கள் எதிர்ப்பைத் தகர்த்தெறிவோம்,' என்று பதில் சொன்னவர் இவர். பாகிஸ்தான் கூச்சல் எழுந்த வுடனே இந்து-முஸ்லிம் கலவரங்கள் ஆங்காங்கே தோன்றி விட்டன. இந்துக்கள் மைனரிடிகளாக உள்ள பகுதிகளில் முஸ்லிம்கள் தொல்லை கொடுப்பதும், முஸ்லீம்கள் மைனரிடியாக உள்ள இடங்களில் இந்துக்கள் தொல்லை கொடுப்பதுமான நிலையுண்டாய்விட்டது. இனத்தால் மதத்தால் ஒன்றுபட்டிருக்கும் முஸ்லீம்களிடம் இன ஒற்றுமையோ மத ஒற்றுமையோ இல்லாத இந்துக்கள் அதிகத்தொல்லைப் பட்டார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. சேலம் வேலூர் திருவண்ணமலை போன்ற ஊர்களில் நடந்த கலவரங்களையே தென்னட்டுக்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

மிகப் பெரிய தலைவர்களுள் ஏற்பட்ட அரசியல் கருத்து வேற்றுமைக்கு வீணக பாமர மக்கள் பலியாக வேண்டி வந்தது. அதைத் தடுக்கும் நோக்கத்தோடு இவர் இந்து மகா சபையில் சேரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இனவேற்றுமை யில்லாமல் எந்த மக்களுக்காகச் சுதந்தரம் கேட்கிறோமோ, அந்த மக்களே ஒருவருக் கொருவர் அடித்துக்கொண்டு அழிந்து விடுவார்களானால் பிறகு யாருக்காகச் சுதந்தரப் போர் நடத்துவது?

ஒரு வீட்டின் கிரய பத்திரம் எழுதிக் கொண்டிருக்கும்போது, அந்த வீடே தீப்பிடித்துக் கொள்ளுமானால் முதலில் தீயை அணைப்பதா அல்லது பத்திரத்தைக் கிழித்தெறிவதா என்ற பிரச்னைக்கு எப்படி முடிவு காண்போம்? முதலில் தீயை அணைப்போம், பிறகு பத்திரத்தை எழுதிக் கொள்வோம். அதைப் போன்ற முடிவிலேதான், இந்து மகா சபை ஒன்றுதான் முஸ்லீம் லீக்கை எதிர்த்து நிற்கும் ஆற்றலுடையது என்ற காரணத்தால் இந்து மகா சபையில் சேரவேண்டியவரானார்.

இதைத் தெளிந்த அரசியல் தந்திரம் என்று போற்றினோரும் உண்டு, ஆக்க வேலையில்லாத டாக்டர் அழிவு வேலையைத் தொடங்கிவிட்டார் என்று தூற்றினோரு முண்டு. பொதுவாக காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் மனம் வருந்தத்தான் செய்தார்கள். ஐந்தாண்டுகள் இந்து மகா சபையின் பொதுக் காரியதரிசியாக இருந்து நாடு முழுவதிலும் சுமார் 6000 மைல்கள் சுற்றி ஆயிரக் கணக்கான கிளை ஸ்தாபனங்களை உருவாக்கினார். அப்போது இந்து மகா சபையின் தலைவராக இருந்தவர் விநாயக தாமோதர சாவர்க்கார் அவர்கள்.

இவர் இந்து மகா சபையிலிருந்தபோதும் காங்கிரசைக் கைநழுவ விடவில்லை. காங்கிரசுக்கும் சர்க்காருக்கும் சமாதானம் ஏற்படுமா என்ற எண்ணத்தோடும் ஏக்கத்

தோடும் நின்று விடாமல் அதற்கான தூது முயற்சியிலே ஈடுபட்டிருந்தார்.

அதைப்பற்றி கராச்சியிலிருந்து 24-10-1944-ல் வெளிவந்த கராச்சி டெய்லி என்ற பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்திருப்பதைப் பாருங்கள்:—

"ஒவ்வொரு நீதியின் முகப்பிலிருந்தும் ஆராயவேண்டு மானால் டாக்டர் நாயுடு அவர்கள் சிறந்த தேச பக்தர் என்பதை மறுக்க முடியாது. பல ஆண்டுகளுக்கு முன்பே அவர் காங்கிரசில் சேர்ந்தவர். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும், காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டிலும், காங்கிரஸ் நிதி நிர்வாகத்திலும் பல ஆண்டு கள் அங்கம் வகித்திருக்கின்றார்."

ஐந்தாண்டுகள் இவர் இந்து மகா சபையில் சேவை செய்திருக்கின்றார். அகில இந்திய இந்து மகா சபையின் துணைத்தலைவராக 1942 முதல் 1944 வரை இருந்திருக் கின்றார். இந்த ஆண்டுகளில் பல்வேறுபட்ட அரசியல் தலைவர்களைச் சந்தித்து, இருட்டடிப்பு செய்யப்பட்டிருக் கும் இந்திய சுதந்திரக் கதவுகளைத் திறந்துவிட முடியுமா என்று முயற்சி செய்திருக்கின்றார்.

காந்தியாருக்கும் வைஸ்ராயுக்கும் இடையே தூது சென்று பன்முறை முயன்றும், போர் முடியும் வரை எந்தவிதமான முடிவுக்கும் வர இயலாதென்று கண்டிப் பாகச் சொல்லிவிட்டது சர்க்கார் (அப்போது இரண்டா வது உலகப் போர் நடந்து கொண்டிருந்தது.) ஆகவே யுத்தம் முடியும் வரையிலும் ஒன்றும் செய்ய முடியாத நிலையிலிருந்தார்கள் தலைவர்கள்.

### காந்தியாரின் மனவேதனை

பலமுறை சிறை சென்றும், பலமுறை உண்ணாவிரதமிருந்தும் இரக்கமற்ற வெள்ளைய ஏகாதிபத்தியம் இறங்கி வராததைக்கண்ட காந்தியார், 'டாக்டர் நாயுடு அவர்களே! நம்மால் இயன்ற அளவு எல்லா வகையிலும் முயற்சி செய்து பார்த்தாய்விட்டது. தோல்வியைத்தான் கண்டோம். நமது சத்திய சோதனையை சர்க்கார் மதிக்கவில்லை. பொங்கிவரும் புத்துணர்ச்சியைக் கேலி செய்யும் அளவுக்கு அவர்கள் நிலை போய்விட்டது. நான் வைத்துக் கொண்டிருக்கின்ற கடைசீ ஆயுதத்தைத் பயன் படுத்தப் போகிறேன். இப்போது நடந்து கொண்டிருக்கும் இரண்டாவது உலக மகா யுத்தம் எப்போது நிற்கும் என்பதற்கான அறிகுறிகளே தென்படவில்லை. அந்த பயங்கரமான அழிவை நோக்கி வல்லரசுகள் போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே இனி நாம் தாமதித்துப் பயனில்லை,' என்ருர். அதற்கு நாயுடு அவர்கள். போர் நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் வெள்ளையனை விரட்ட முற்பட்டால் இதையே சாக்காகக்கொண்டு, ஜப்பான் காரனே, ஜர்மன் காரனே உள்ளே நுழைந்து விட்டால் என்ன செய்வது என்ற கேள்வி ஒன்றை 1941-ல் கேட்டார். அதற்குக் காந்தியார், 'நிச்சயமாக அந்த நிலை ஏற்படாது. ஏனெனில், ஜப்பான்காரன் உள்ளே நுழைவதை ஜர்மன்காரன் சகிக்கமாட்டான். அதைப்போலவே ஜர்மன்காரன் உள்ளே நுழைவதை ஜப்பான்காரன் சகிக்க மாட்டான் எல்லாவற்றிற்கு மேலாக மேற்படி இரண்டு பேரில் யார் உள்ளே நுழைவதையும் வெள்ளைக்காரன் சகித்துக் கொள்ளமாட்டான்.

அந்த பலம் பொருந்திய வல்லரசுகள் கையில் இந்தியாவை ஒப்படைத்துவிட்டுப் பின்னால் தோல்விப்படுவதைவிட, இந்தியா இந்தியர்களிடமே இருந்து போகட்டும் என்று தான் நினைப்பான், ஆகவே நாடு முழுவதிலும் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம்,' என்றார். அதுதான் 1941 ஆகஸ்டு போர்.

1919-லிருந்து எவ்வளவோ உள் நாட்டு நிலைமைகளை சமாளித்த ஏகாதிபத்தியம் 1941 ஆகஸ்டு கலவரத்தை சமாளிக்க முடியாமல் திண்டாடியது. இந்த இடத்திலே காந்தியாருக்கு எவ்வளவு தீர்க்கதரிசனம் இருந்தது என்பதைப் பாருங்கள்.

## *தீர சிகாமணி*

டாக்டர் நாயுடு அவர்கள் காங்கிரசிலே இருந்தாலும், அதன் அகிம்சா தத்துவங்களைக் கட்சியின் கோட்பாடுகளுக்காக ஒப்புக்கொண்டாரேயன்றி, உள்ளூர அவருக்கிருந்த தனிப்பட்ட எண்ணமெல்லாம் வாலிபர்களுக்கு இராணுவப் பயிற்சியளிக்க வேண்டும் என்பதுதான். இதற்குக் காரணம் இல்லாமலில்லை. பலம் பொருந்திய வெள்ளைய ஏகாதிபத்தியத்தோடு போரிட ஆயுதமில்லாமல் நாம் அகிம்சையால் போரிடலாம். ஆனால் வெள்ளையர் ஆட்சி நீங்கி, சுதந்தரம் வந்த பிறகு வெளி நாட்டுப் படையெடுப்புக்களைச் சமாளித்து நிற்க நம் நாட்டு மக்களுக்கு போர்ப் பயிற்சி வேண்டாமா? அதனால் வேலையோடு வேலையாக வாலிபர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று கருதி இராணுவத்தில் பலரைச் சேர்த்தும், அதிலுள்ள பல உயர்தர உத்தியோகங்களைப் பெற்றுத் தந்துமிருக்கின்றார். அதோடு யுத்தம் நடந்து கொண்டி

ருந்தபோது தலைவர்கள் எல்லாம் சிறையிலிருந்ததால் வெளியே பாகிஸ்தான் பிரிவினை எதிர்ப் பிரசாரத்தையும் செய்து கொண்டிருந்தார். அதனாலேயே இவருக்கு தீர சிகாமணி என்ற பட்டம் ஹிந்து தர்ம மகா மண்டலத்தினரால் வழங்கப்பட்டது.

## மீண்டும் காங்கிரஸில்

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்துவிட்டது. காங்கிரஸ் தலைவர்களை மேலும் சிறையிலடைத்து வைத்திருப்பது தவறு என்றுணர்ந்தது. இந்தத் தாராளமான முடிவு ஏகாதிபத்தியத்திற்கு இயற்கையாக ஏற்பட்டு விடவில்லை. எங்கும் பொங்கி எழுந்த மக்களின் சுதந்திர ஜ்வாலையில் ஏகாதிபத்திய சின்னங்கள் எரிந்து விடுமோ என்ற அச்சம் தோன்றிவிட்டது. அதுவரை அதன் ஆதிக்கத்திலிருந்த பல்வேறு பகுதிகளிலே கிளம்பாத அளவுக்கு விடுதலை வேட்கை கிளம்பிவிட்டது. இதை யுணர்ந்த சர்க்கார் மெள்ளத் தன் இரும்புப் பிடிகளைத் தளர்த்தத் தொடங்கியது. சர்க்கார் ஒரு பக்கம் காங்கிரசைத் தாக்கிக் கொண்டிருந்த நேரம், இந்து மகா சபைக்காரர்களும் பல விடங்களில் காங்கிரஸ் தலைவர்களைத் தாக்கினார்கள். இந்த வேண்டாத செயல் டாக்டர் நாயுடு அவர்கள் மனதை வெகுவாகப் பாதித்தது. இந்து மகா சபையின் உண்மையான குறிக்கோளை மறந்து இந்திய குடும்பத்திலேயே கலகம் விளைவதை இவர் விரும்பவே இல்லை. அதனால் மறுபடியும் இவர் காங்கிரசில் சேர்ந்துவிட்டார். சுமார் நாற்பது ஆண்டுகளாக காங்கிரசில் உழைத்துவருபவருக்குத் தன் கண் முன்னாலேயே தன் கட்சியின் தலைவர்கள் சில பல விடங்களில் தாக்கப்படுவதைக் கண்டு மனம்

கலங்கினர். ஒன்றின் உண்மைத் தத்துவங்களை உணராத பாமர மக்களிடம் அரசியல் நுட்பங்களை அதிவிரைவில் நுழைய வைப்பதென்பது அசாத்தியமான தென்றும், அதே நேரத்தில் அபாயத்தைக் கொடுக்கக் கூடிய தென்றும் உணர்ந்தார். கோலோச்சுபவர்களை விரட்டும் பணியிலிருந்து நாடு கொடுமையின் கூடாரமாக மாறுவதை எண்ணி 1945 மார்ச்சு மாதம் இந்து மகா சபையிலிருந்து விலகி அந்த ஆண்டு டிசம்பரிலேயே காங்கிரஸில் சேர்ந்து விட்டார்.

## *பதவி வேட்டை இல்லை*

பதவி வேட்டையை எப்போதுமே வெறுத்து வந்தார். இவருடைய ஒரே நோக்கம், நாடு, இழந்து விட்ட உரிமையை மீண்டும் பெற்று பொருளாதாரம், கலை, நாகரீகம், சீர்திருத்தம் ஆகிய எல்லா வகையாலும் முன்னேற்ற மடைய வேண்டும் என்பதுதான். இவருடைய இந்தக் கொள்கையை நாட்டின் அரும்பெரும் தலைவர்கள் பல படப் பராட்டியிருக்கின்றூர்கள். அதற்கு உதாரணமாக இரண்டொரு நிகழ்ச்சிகளைத் தருவோம்.

காங்கிரஸ் போக்கில் சில மாறுதல் செய்ய வேண்டுமென்று C. R. தாஸ் விரும்பினர். அதாவது சுயராஜ்ய கட்சி என்ற ஒன்றை அமைத்து அதன் மூலம் பதவிகளைப் பிடிப்பது என்பது. அந்த முறையைக் கலந்து பேச, பொது மாநாடு ஒன்று கல்கத்தாவில் 1925-ல் கூடுவதென்று ஏற்பாடாயிருந்தது. அதற்கு திரு. A. ரங்கசாமி ஐயங்கார் (ஹிந்து ஆசிரியர்) மூலம் இவருக்கு ஒரு அழைப்பை யனுப்பியிருந்தார், அது வருமாறு :—

திரு. டாக்டர் அவர்களுக்கு! நான் C. R. தாஸ் அவர்களை சிம்லாவில் சந்தித்துவிட்டுத் திரும்பி விட்டேன். அவரிடம் நீண்ட நேரம் பல விஷயங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தேன். குறிப்பாக சென்னையின் நிலைமையைப் பற்றியும் சிறப்பாக சுயராஜ்ய கட்சியைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம். அதில் தாங்கள் தலைமை தாங்கிச் சேவை செய்ய வேண்டுமென்று என்மூலம் தங்களை C. R. தாஸ் அவர்கள் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றார். இன்றுள்ள காங்கிரஸ் மகா சபையின் நோக்கங்கள் சிலவற்றைத் திருத்த கல்கத்தாவில் கூடுவதாக உத்தேசித்திருக்கும் மாநாட்டில் தாங்கள் பங்குபெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

(ஒப்பம்) A. ரங்கசாமி ஐயங்கார்.

இந்த அழைப்பை ஏற்க மறுத்துவிட்டார். ஏனெனில் வெள்ளைய ஏகாதிபத்தியம் இந்திய மண்ணில் இருக்கும் வரையிலும், தான் ஒரு உண்மையான காங்கிரஸ் ஊழியனாக இருக்கும் வரையிலும், ராஜ விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்துவிட்டுப் பதவி ஏற்றுக் கொள்வதைத்தான் விரும்பவில்லை, என்று பதிலளித்து விட்டார்.

## இரண்டாவது நிகழ்ச்சி

ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சி நடந்து கொண்டிருந்த நேரம். பானகல் அரசர் முதலமைச்சராக இருந்தார். ஜஸ்டிஸ் கட்சியிலிருப்போர் சிலரையும், டாக்டர் நாயுடு அவர்களையும் சேர்த்து ஒரு கூட்டு மந்திரி சபை அமைக்க வேண்டுமென்று பானகல் அரசர் விரும்பினார். அதற்காக

இவரைத் தன் வீட்டிற்கு அழைத்து திரு. K. V. ரெட்டி நாயுடு, பஞ்சல சுப்ரமணிய செட்டியார் ஆகிய இருவர் முன்னிலையில் கருத்தை வெளியிட்டார். ஒத்துழையாமை இயக்கத்தில் தனக்கு எவ்வளவுதான் நம்பிக்கை குறைந்து விட்டாலும் காங்கிரசை பலவீனப் படுத்தும் முயற்சியிலே ஈடுபடுவதோ, கூட்டு மந்திரிசபையில் ஒரு மந்திரியாக அமர்ந்திருப்பதோ முடியாதென்று மறுத்துவிட்டார். அதோடு விடவில்லை இவரை அடுத்து சுயராஜ்ய கட்சி யின் தலைவராயிருந்த S. சீனிவாச ஐயங்கார் சேலத்திற்கு வந்து, சென்னை சட்டசபை நுழைவையும் சுயராஜ்ய கட்சியின் தலைமையையும் ஒப்புக் கொள்ளும்படி திரு. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், முத்துரங்க முதலியார், அப்துல் அமீத்கான் ஆகியோரின் முன்னிலை யில் வேண்டினர். அப்போதும் மறுத்துவிட்டார்.

## மூன்றாவது நிகழ்ச்சி

சென்னை கவர்னராக இருந்த சர். ஸ்டான்லி, லண்டனில் நடக்கவிருக்கும் வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென்று அழைத்தார். காந்தியார் கலந்து கொள்ளாமல் வட்டமேஜை மாநாடு பயன்தராது. அவர் (காந்தியார்) கலந்து கொள்வாரானால் என்னைப் போன்றவர்கள் கலந்து கொள்ளவேண்டிய அவசியமே இல்லை. ஆகவே காந்தியாரைப் பின்னே தள்ளி, நான் முன்னேவர விரும்பவில்லை, என்று சொல்லி அந்த அழைப்பையும் ஏற்க மறுத்துவிட்டார். பிறகு காந்தியார் அழைக்கப்பட்டு வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ளும் படிச் செய்தார்.

இப்படிப் பலமுறை தனக்கு வந்த அழைப்புக்களை ஏற்க மறுத்து, தான் சார்ந்த கட்சியின் கீர்த்தியைக் குன்ருமல் பார்த்திருக்கின்ருர். அன்னிய கொடிக்கு வணக்கம் செய்வதோ, அன்னிய ஆட்சியில் வேலை பார்ப்பதோ தன் சொந்த பண்புக்கும் பகுத்தறிவுக்கும் ஏற்றதல்லவென்று கண்டிப்பாக இருந்திருக்கின்ருர்.

## பேச்சுத் திறமை

தமிழ்பேசும் நல்லுலகத்தில், இவர் தாய்மொழி தெலுங்காயிருந்தும் அருமையான தமிழ்ச் சொற்ருெடர் இவர் பேச்சில் இடம்பெறும். அவைகள் புரிந்து கொள்ள முடியாத கடினமான சொற்களாக இரா. இவர் பேச்சின் நயம் இசையார்வத்தில் மயங்கிக் கிடக்கும் மக்களின் நிலையையுண்டாக்கும். ஒரு சமயம் இவர் 6 மணி நேரம் பேச ஏற்பட்டபோது ஜனங்கள் அந்த 6 மணி நேரமும் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்து இவர் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள் என்ருல் அதைவிட நற்சாட்சிப் பத்திரம் என்ன வேண்டும். இவருடைய சொற்பொழிவென்ருல் குதூகலத்தில் ஆழ்ந்துவிடும் மக்கள் இருபதினுயிரம் முப்பதினுயிரமாகக் கூடுவதால், ஒலி பெருக்கியில்லாத அந்த நாளில் எல்லாருக்கும் கேட்கும்படி பேசினுர் என்பதற்குப் பதிலாக, இவர் மேலிருக்கும் அளவற்ற அன்பின் காரணமாக எல்லாரும் நிசப்தமாக உட்கார்ந்து எல்லாருக்கும் கேட்கும் படியான வசதியைத் தேடித்தந்தார்கள் என்பதுதான் உண்மை. சராசரி உயரமும் உடல் கட்டும் பெற்றவராகையால் விரைவில் களைத்துப் போவதோ வேதனையால் சலித்துப் போவதோ இல்லை. தான் சொல்லும் ஆழ்ந்த அரசியல் கருத்துக்கள்

மக்கள் உள்ளத்தில் பதிந்துவிட வேண்டிய அளவுக்கு மாத்திரம் பேசமாட்டார்; அவர்களைத் தன் கருத்துக் கப்பலில் ஏற்றிக்கொண்டு வந்துவிடுவதைப் போலிருக்கும். செஞ்சொல்லால் சொற்போர் நடத்தும் சீரிய சொற் செல்வர் என்றே மக்கள் வாழ்த்திக் கொண்டு போவார்கள். உண்மை, தர்க்கம், சூடேறிய சொற்கள், உறுதி, இடையிடையே நகைச்சுவை எல்லாம் கலந்திருக்கும் இவர் பேச்சில், மக்கள் கேட்டவுடனே மறந்துவிடாமல் என்றும் அவர்கள் உள்ளத்தில் நிழல் படமென காட்சியளித்துக் கொண்டிருக்கும் இவர்தரும் கருத்துக்கள்.

தடைபடாமல் மலையுச்சியிலிருந்து அடிவாரம் நோக்கி ஓடிவரும் நீர் அருவிபோல், தட்டுத் தடங்கல் இல்லாமல் சொற்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஓடிவந்து கொண்டே இருக்கும். இடையறாத நோக்கங்களோடு ஊடாடிக் கொண்டிருக்கும் தலைவர்கள் சொற்பொழிவுகளில் எவ்வளவு சூல் கொண்ட கருத்துக்கள் மின்னுமோ அவ்வளவும் இவர் பேச்சில் இடம் பெறும். சுருக்கமான உதாரணங்களால் பெரிய விஷயங்களை விளக்கும் முறையிலே மிகக் கைதேர்ந்தவர். இவர் பேசுகிறார் என்றால் அன்று அந்த ஊரில் ஒரு மகத்தான பிரசங்கத் திருவிழா என்று பொருள். எதிரிகளுக்கு இடி, சனாதனிகளுக்குச் சூடு, விடுதலை விரும்பிகளுக்கு விருந்து, தர்க்க வாதிகளுக்கு சிந்தனை, ஆட்சிக்கு அறைகூவல், துன்பப்படுவோர்க்கு ஆறுதல், செயல் வீரர்களுக்கு அழைப்பு, எல்லாம் கலந்திருக்கும் இவரது பேச்சில், பேச்சும் ஒரு இசையைப் போலத்தான் என்ற முறையில், வீரம்,

விவேகம், வாதம் போன்ற பகுதிகள் வரும்போது அதற்கேற்ற வகையில் சொற்களின் ஒலி குறைந்தும் மிகுந்தும் காணப்படும். இவர் பேசி முடித்துக் கீழே இறங்கியவுடன், இவரை நேரில் பார்க்காதவர்கள், இவர்தானு இப்படிப் பேசினுர் என்று எண்ணத் தோன்றும். அவ்வளவு அமைதியாகக் காணப்படுவார். சிறிய குகையிலிருந்து பெருங்காட்டையாளும் சிங்கம் போல் காணப்பட்டார். சரிந்து போன சாம்ராஜ்யங்களின் சரித்திர ஆதாரங்களை மேடையில் பேசும் போதும், தனியாகப் பேசும் போதும் அடிக்கடி சுட்டிக் காட்டிக் கொண்டே வருவார். கேட்பதற்கு இனிமையாகவும் தெவிட்டாமலும் இருக்கும்.

## *பத்திரிகைகளின் பாராட்டுரைகள்*

ஸ்டேட்ஸ்மென் பத்திரிகை (கல்கத்தா) :

'டாக்டர் நாயுடு பிராம்மணரல்லாதாராதலால், அவருக்கு அநேக கஷ்டங்கள் நேரலாம். ஆனுலும் அவருடைய அறிவும் தெளிவும் ஒழுங்கானவையாகும்.'

மதராஸ் மெயில் :

'தமிழ் நாட்டில், டாக்டர். P. வரதராசுலு நாயுடுவின் பெயரை அறியாத தமிழரே இருக்க முடியாது. தமிழர் ஒவ்வொருவர் வீட்டிலும் அவர் பெயர் சர்வ சாதரணமாக வழங்கக் கேட்டிருக்கலாம். தென்னிந்தியத் தேசியத் தலைவர்களில் அவர் ஒருவர். வங்காளப் பிரிவினையின் போது (1906) இந்தியா முழுதும் கிளர்ச்சி யேற்பட்ட காலத்திலும் தேச முழுதும், 'சுதேசி'க் கிளர்ச்சி ஏற்பட்ட காலத்திலும் டாக்டர் நாயுடு தேசியத் துறையி

விறங்கினுர். அன்று முதல் இன்று வரை இடை விடாது அவர் தேசத் தொண்டு செய்து வருகிருர். டாக்டர் நாயுடு தனது மனதில் பட்டதைப் பட்டவர்த்தனமாகப் பேசக்கூடியவர். தனக்கு எது சிறந்ததெனப் பட்டதோ அதையே கைக்கொள்பவர். தனது கொள்கைகளை விட்டுக் கொடுக்கமாட்டார். அவர் ஒரு சிறந்த அரசியல் வாதி, தொழிலாளர் தலைவருமாவார்.'

## டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகை

'டாக்டர் நாயுடு அவர்கள் தமது பத்திரிகையின் மூலம் வர்த்தகர்களுக்கு அரிய சேவை புரிந்துள்ளார். 'தமிழ் நாடு'வில் விளம்பரம் செய்த பல வர்த்தகர்கள் மிக்க அனுகூலமடைந்துள்ளனர். சில வருஷ காலத்துக்கு முன்பு வரை விளம்பரமானது வெள்ளை வர்த்தகர்களது ஏகபோக உரிமை போலிருந்தது. பத்திரிகையில் விளம்பரம் செய்வதின் பலனை இப்பொழுது இந்திய வர்த்தகர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். அதனுல் அவர்களுக்கு ஏராள லாபம் கிடைக்கிறது. விளம்பரத்தின் பலனை இந்திய வர்த்தகர்கள் உணரும்படிச் செய்யத் தூண்டுகோலாகவிருந்தவர் டாக்டர் வரதராசுலு நாயுடுவே.'

## தென்னுப்பிரிக்க இந்தியர் பாராட்டு

தென்னுப்பிரிக்க இந்தியர் பெடரேஷன் (நெடால் பிராஞ்சு) காரியதரிசியான ஸ்ரீ. என். எ. நாயுடு :—

'தென்னுப்பிரிக்க இந்தியருக்காக 'தமிழ் நாடு,' செய்து வரும் ஒப்பற்ற சேவைகளுக்காக வந்தனம் கூறும்படி எனது பெடரேஷன் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறது.'

78116 V2:51y7M87 3/J7

**சர். கே. வி ரெட்டியார் கருத்து:**

'இந்தியாவிலுள்ள தமிழருக்கும், பிற நாடுகளில் சென்றுள்ள 'தமிழருக்கும், 'தமிழ் நாடு' பத்திரிகை செய்து வந்திருக்கும் சிறந்தசேவை பாராட்டத்தக்கதாகும். தமிழரிடையே தன்மான உணர்ச்சியை உண்டுபண்ணி, அரசியல் அறிவை ஊட்டி, தேசம் முன்னேற்றமடையத் தாங்கள் பெரிதும் வேலை செய்து வந்திருக்கிறீர்கள். பிறருடைய தயை, தாட்சண்யம், எதிர்ப்பு இவைகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல், தாங்கள் நடுநிலைமையுடன் தமிழரின் முன்னேற்றத்திற்காகவே வேலை செய்து வந்திருக்கிறீர்கள். பொறுப்பு வாய்ந்த பெரும் பதவிகளை வகித்து வரும் தாங்கள் சிறந்த வழி காட்டியாக இருக்கிறீர்கள். உங்களுடைய நேர்மையும், களங்கமற்ற தேச பக்தியும், ஒருக்காலும் மறக்க முடியாது.

சென்னை சர்க்கார் முதன் மந்திரி திவான்பகதூர் B. முனுசாமி நாயுடு :—

'டாக்டர் நாயுடுவின் பெருமை பற்றி அனைவரும் நன்கு அறிவார்கள். தேசிய விஷயங்களை பாமர ஜனங்களுக்கு முதன் முதலில் போதித்து வந்தவர் டாக்டர் வரதராசுலுவேயாவார். தேசிய இயக்கத்தை நிதானமாகக் கொண்டு வருவது மிகவும் கஷ்டமான காரியம். நாம் மனதில் நினைப்பதை வெளியில் தைரியமாகச் சொல்லத் துணிவதில்லை. ஆனால் டாக்டர் அப்பேர்ப்பட்டவரல்லர். தான் நியாயம் என எதை மனதில் நினைக்கிறாரோ அதன் படி நடக்க அவர் எப்போதும் முன் வருவார். அதனால் என்ன கஷ்டங்கள் ஏற்படினும் அவைகளைப் பொறுத்துக்கொள்ளும் சுபாவம் உடையவர். சிறிது காலமாக

காங்கிரசை விட்டு நீங்கினரேயொழிய, அதன் கொள்கை களுக்கு இப்போதும் பாடுபட்டு வருகிறார். பத்திரிகை உலகத்திற்கு அவர் செய்திருக்கும் தொண்டு அளவற்ற தாகும்.'

*பொப்பிலி ராஜா* (முதல் மந்திரி) :

'டாக்டர் நாயுடு ஒரு சிறந்த ஆசிரியரும், தேசிய வாதியுமாவார். த்யை தாட்சண்யமின்றி நேர்மையாக நடப்பவர்.'

இப்படி இன்னும் பல பிரமுகர்கள், ஜில்லா போர்டு கள், கலெக்டர்கள், முனிசிபாலிட்டிகள், வர்த்தக சங்கங் கள் 'தமிழ் நாடு' பத்திரிகையின் சேவையைப் பாராட்டி இருக்கின்றன.

## *நஷ்டம் 42,016-6-6*

பத்திரிகைத் தொழிலில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் சர்க்கார் அடக்கு முறைகள் போக பணத்தால் ஏற்பட்ட நஷ்டம் மேலே காட்டியிருக்கும் தொகை. வேறு வழி யில்லாமல் மேற்கொண்டும் நடத்த முடியாமல் கீழ்வரு மாறு 1936 செப்டம்பர் 26-ம் நாள் மனதைக் கலக்கும் தலையங்கம் தீட்டி இருக்கின்றார் :

'1906-ஆம் ஆண்டில் எனது 19-வது வயதில், இந் திய தேசிய இயக்கத்தில் நான் ஈடுபட்டேன். 1908-ஆம் ஆண்டு புதுச்சேரிக்குச் சென்று, தேசியத் தமிழ்க் கவி சுப்ரமணிய பாரதியாரின் ஆசிர்வாதத்தைப் பெற்றேன். 1916-ஆம் ஆண்டில் தீவிரமாக தேசிய போராட்டத்தில் இறங்கிய பிறகு, தமிழ் மக்களைத் தட்டியெழுப்பத் தமிழ்ப் பத்திரிகையொன்று நடத்தவேண்டுமென்ற எண்ணம்

எனக்குண்டாயிற்று. இன்றைச்குச் சரியாக 20 ஆண்டு களுக்கு முன் அதாவது 1916-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ந் தேதி ஆங்கிலம்—தமிழ் ஆகிய இரு மொழி களிலும், வாராந்திரப் பத்திரிகைகளை நடத்த எனக்கு அனுமதி வேண்டுமென்று கோயமுத்தூர் ஜில்லா கலெக் டரிடம் கேட்டேன். அனுமதி கிடைக்கவில்லை. இரண் டொரு மாதங்களாக வேறு முயற்சிகள் செய்து சென்னை யில் கஷ்ட திசையிலிருந்த 'பிரபஞ்ச மித்திரன்' பத்திரி கையை 1916-ல் வாங்கி அதை தேசிய முறையில் நடத்தி வந்தேன். 1918-ஆம் ஆண்டு நான் சிறைப்பட்ட பிறகு, பிரபஞ்ச மித்திரன் பத்திரிகையை ஆயிரம் ரூபாய் ஜாமீன் கேட்டு சர்க்கார் அடக்கிவிட்டனர். 1919-ஆம் ஆண்டுக் கடைசியில் "தமிழ் நாடு" பத்திரிகையை ஆரம்பித்தேன் என்பதை யாவரும் அறிவார்கள். ஆகையால் அடுத்த டிசம்பர் மாதம் வந்தால், பத்திரிகை சேவையில் நான் ஈடுபட்டு, சரியாக இருபது ஆண்டுகளாகின்றன. பாரத சக்தியின் அருளையும் தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்று இருபது ஆண்டுகளாக தமிழ்ப் பத்திரிகை சிறப் புடன் வெற்றிகரமாக நடத்தி வந்திருப்பதைக் குறித்து உண்மையில் என் மனம் பூரிப்படைகிறது. 'தமிழ் நாடு' தோன்றியது முதல் இன்று வரையில் ஒரே ஒரு நாள் மட்டும் பத்திரிகை வெளிவராமல் நின்றது என்பதைக் கண்டு தமிழர் மனம் மகிழ்ச்சியடையுமென்பதில் சந்தேக மில்லை. பத்திரிகை நடத்துவதில் உள்ள கஷ்ட நஷ்டங் களை அனுபவத்தில் நன்கு அறிந்துகொண்டேன்.

டாக்டர் பெசன்டின் 'நியூ இந்தியா' மகாத்மா காந்தியின் 'யங் இந்தியா', சித்தரஞ்சன தாசருடைய

'பார்வர்டு', பண்டித மோதிலாலின் 'இண்டிபெண் டண்ட்டு,' லாலாலஜபதிராயின் 'வந்தே மாதரம்', சதா நந்தருடைய 'பிரிபிரஸ் ஜர்னல்' போன்ற பிரபல பத்திரி கைகளும், 'தேச பக்தன்', 'சுயராஜ்யா', 'இந்தியா', 'திராவிடன்' போன்ற பல்வேறு பத்திரிகைகளும் தோன்றி மறைந்து போனதை யாவரும் அறிவார்கள். மறைந்து போன இப்பத்திரிகைகளுக்கு ஏற்பட்ட பண நஷ்டம் லட்சக் கணக்கென்பதை, நாம் விளக்கவேண்டிய தில்லை. 'தமிழ் நாடு' பத்திரிகை தப்பிப் பிழைத்துவிட்ட தெனினும், சென்ற இருபதாண்டுகளாக இதை நடத்தி வரும் விஷயத்தில் எனக்கு எவ்வளவு கஷ்ட நஷ்டங் களும் கவலைகளும் இருந்திருக்க வேண்டும் என்பதை நண்பர்கள் அறிந்துகொள்ளலாம்.'

'தமிழ் நாடு' தினசரியாக மாறிய முதல் மூன்று ஆண்டுகளில் மட்டும் முப்பதினாயிரம் ரூபாய் நஷ்டம் ஏற் பட்டது. 18 ஆண்டுகளில் மொத்த நஷ்டம் ரூ. 42016-6-6 ஆகின்றது. சென்ற சில காலமாக பத்திரிகைக்கு நஷ் டம் உண்டாகவில்லையாயினும், ஆரம்பத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய முடியவில்லை. நாற்பதினாயிரம் நஷ்டத்தை ஈடு செய்துகொள்ள வேண்டுமென்ற கவலை எனக்குமில்லை, எனது நண்பர்களுக்கும் கிடையாது. ஆயுளும், ஆரோக்கியமும், ஆண்டவன் எனக்குக் கொடுத்தருளும் பட்சத்தில், கஷ்ட நஷ்டங்களைப் பொருட்படுத்தாது இன்னும் பத்து ஆண்டுகளுக்கு 'தமிழ் நாடு' நடத்துவதற்கான ஆதரவு எனக்கிருக்கின்ற தென் பதைத் தமிழ் நாட்டினர் நன்கறிந்திருக்கின்றார்கள். தேசத்திற்காக நான் மேல் போட்டுக்கொண்ட இப்பத்திரி

கைங்கர்ய நடத்துவதற்கு, ஆதி முதல் இதுவரையில், பொது ஜனங்களிடத்தில், பங்காகவோ, தானமாகவோ பணம் வாங்கவில்லை. பத்து ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய சில நண்பர்களிடத்திலிருந்து 'தமிழ் நாடு' லிமிடெட் என்ற பிரைவேட் கம்பெனிக்கு ஏழாயிரத்து அறுநூறு ரூபாய் வரையிலும் பங்காகப் பெற்றதைத் தவிர, மற்றவர்களுடைய பணம் இதில் ஒன்றுமே கிடையாது. பொது ஜனங்களுடைய பணத்தைப் பங்காகப் பெறுமல் உறுதியான தேசிய கொள்கையுடன் தென்னுட்டில் வளர்ந்த பத்திரிகைகளில் 'தமிழ் நாடு' முதன்மை பெற்றதாகும். இப்பத்திரிகையை நசுக்கிவிட ஒரு சிலர் அடிக்கடி செய்து வந்த, செய்து வரும் கொடுமைகளைக் கருதும்போதுதான் எனது மனம் சிறிது கலக்கமடைகிறது.

அடுத்த ஆண்டு பிறந்தால் எனக்கு வயது 50 ஆகிறது. மீதியுள்ள எனது ஆயுளில் சில ஆண்டுகள் பழையபடி தீவிரமான சமய சமூக அரசியல் துறைகளில் கழிக்கவேண்டுமென்ற எண்ணம் எனக்குண்டாயிருக்கின்றது. முப்பதாண்டுகளாக, நான் கற்றதும் கேட்டதும் பட்டதுமான என் அனுபவங்களை தமிழருக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற எனது ஆவல் எனக்குண்டாயிருக்கின்றது. பத்திரிகை மூலமாக நான் செய்யக் கருதிய கைங்கர்யத்தை என் சக்திக்கும் புத்திக்கும் எட்டிய வரையில் செய்து முடித்துவிட்டேன். அடுத்த டிசம்பர் மாதத்தில் 'தமிழ் நாடு' தினசரியை நிறுத்திவிட்டு. வாரப் பதிப்பை மட்டும் இக்காலத்திற்குரிய உயர்ந்த முறையில் நடத்தலாமென்று உத்தேசித்திருக்கிறேன். தமிழ் தினசரிகள் மலிந்து கிடக்கும் இக்காலத்தில், தந்திச் செய்திகளுக்

காக 'தமிழ் நாடு' பத்திரிகையை யாரும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. இரண்டு மாதங்களுக்குப் பிறகு தினசரி 'தமிழ் நாடு' நின்றுவிடுமென்ற செய்தியை இப்போதே அறிவித்துவிட்டதற்காக எனது அன்பர்கள் யாரும் என்மீது வருத்தப்படக் கூடாதென்று கேட்டுக் கொள்கிறேன். 'தமிழ் நாடு' நிர்வாகப் பொறுப்பி லிருந்து விலகிய பிறகும், அதை தினசரியாக நடத்த வேண்டுமென்ற கருத்தும் திட்டமும் வைத்துக்கொண் டுள்ள நண்பர்கள் முன்வந்திருக்கிறார்கள். பத்திரிகையை அவர்கள் நீடித்து நடத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டாகுமாயின் அவர்களிடத்தில் 'தமிழ் நாடு' பத்திரிகையை ஒப்படைக்க எனக்கு ஆட்சேபணையே இல்லை, அது எப்படியாயினும் சரி 'தமிழ் நாடு'வை நிறுத்திவிடுவது அல்லது பத்திரிகைப் பொறுப்பிலிருந்து நான் விலகிவிடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். யாருக்கும் முன் அறிக்கை செய்யாமல் தினசரியை, திடீ ரென்று நிறுத்திவிட்டேன் என்று, அன்பர்கள் என்மீது குற்றங் கூறாமல் இருக்கும் பொருட்டே, இரண்டு மாதங் களுக்கு முன்பே இதைப்பற்றி எழுதியிருக்கிறேன்.'

வணக்கம்

(ஒப்பம்) பெ. வரதராஜுலு.

## தொழிலாளர் சங்கங்களைப்பற்றி அவரது கருத்து

சென்னை ஆலைத் தொழிலாளர் சங்கத்துக் கெதிராக அமைக்கும் போட்டிச் சங்கத்தில் சேரும்படி வற்புறுத்தப் பட்டதைக் கண்டிக்குமுகத்தான் ஒரு பொதுக் கூட்டம் டாக்டர் நாயுடு அவர்கள் தலைமையில் நடந்தது.

அதில் அவர் குறிப்பிட்டதாவது :—

'புதிய சங்கத்தை நிறுவுவதில் கவலை கொண்ட சில நண்பர்களும், ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கும் இந்த சங்கத்தைச் சேர்ந்த சில நண்பர்களும் என்னிடம் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

அரசியல்வாதி அல்லாதவன்தான் தொழிற் சங்கங் களில் ஈடுபட வேண்டுமென்ற கருத்தைக் கொண்டவன் நான். சர்க்காருக்கு ஆகாதவர்களில் நானும் ஒருவன் என் போன்றவர்கள் மூலம் உங்களுக்கு எவ்விதத் தொல் லையும் வரக்கூடாது. நான் ஒரு ஆண்டுக்கு முன் வில கிக்கொண்டதற்குக் காரணம் அதுதான். ஆனால் சட்ட சபையில் உங்கள் விஷயமாகக் கேள்வி பிறந்ததால் நிலை மையை ஆராய இங்கு வந்தேன். முதலாளிகளுக்குக் கெட்ட எண்ணம் கற்பிக்க நான் இங்கு வரவில்லை. உங் களுக்கு நன்மை செய்ய ஒரு கமிட்டி கூட அவர்கள் ஏற் படுத்தியிருக்கிறார்கள். அதனை நான் மனப்பூர்வமாக ஒப் புக்கொள்கிறேன். உங்களுக்கு முதலாளிகளிடம் பகை யில்லை. ஆனால் உங்கள் நலத்தின் நிமித்தம் நீங்கள் கட் டுப்பாடாக வாழவேண்டியவர்கள். பணக்காரனுக்குப் பசியின் கஷ்டம் தெரியாது. முதலாளிகளுக்கு உங்கள் கஷ்டம் தெரியாது. நான் இங்கு வந்துகொண்டிருக்கை

யில் வழியில் ஒரு கள்ளுக்கடை வாசலில், காசியில் பிராம் மணர்கள் குடித்துக்கொண்டிருப்பதைப் போல் குடித்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். சர்க்காருக்கு மக்கள் மேல் அபிமானமில்லை. அதே போல் முதலாளிகளும் மதியிழந்து சில காரியங்களைச் செய்கிறார்கள். காங்கிரஸ் காரர்களும் மற்றவர்களும் தங்கள் கட்சிக்கு இருப்பதாக புதிய சங்க அபிமானிகள் சொல்லுகிறார்களாம். உங்க ளிடம் அதைச் சொல்லி ஏன் உங்களைத் திருத்தக் கூடாது. சென்னைத் தொழிலாளர் சங்கம் என்றிருப்பதைசென்னை மில் தொழிலாளர் சங்கம் என்று பெயர் வைத்துக்கொள் வது நல்லது என்று நினைக்கின்றேன். புதிய சங்கத்தை நிறுவ விரும்புகிறவர்கள் இதைப் போன்ற பகிரங்கக் கூட்டத்தைக் கூட்டாமல் ஆலைக்குள்ளேயே கூட்டி சில விதிகளை ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்துவது அர்த்த மில்லாத செயல் என்று கண்டிக்கிறேன். வெளியாரின் உதவி உங்களுக்குத் தற்காலம் தேவைதான். ஆனால், வெளியார் உங்களுக்கு புத்தி சொல்ல வேண்டுமேயன்றி சங்கத்தின் தலைவர் முதலிய பதவிகளை வகிக்கக் கூடாது. சர்க்காருக்கு ஆகாதவர்கள் உங்களுக்கு எவ்வளவு அனு கூலமானவர்களாக இருந்தாலும் உங்களிலிருந்து விலகி யிருப்பதுதான் நல்லதென்று கருதுகிறேன். புதிய சங் கத்தைச் சேர்ந்தவர்களை நீங்கள் கூப்பிட்டு, அவர்களோடு நீங்கள் ஒரு சமரசத்துக்கு வரவேண்டும். இரு தரப்பிலும் ஒரு பஞ்சாயத்துக் கூட்டி ஒரு சமரசத்துக்கு வரவேண் டும். புதிய சங்கத்தைச் சேர்ந்தவர்களின் நடவடிக்கை களைப் பார்த்து உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருப்ப தாகத் தெரிகிறது. ஆனால் நீங்கள் அவர்களை அரவணைத் துக்கொண்டுதான் செல்லவேண்டும். இல்லையானால்,

இந்தப் போட்டிப் பூசல் மூலம் முதலாளிகள் கை ஓங்கி விடும். புதிய சங்கத்தை அவர்கள் பதிவு செய்து சர்க்காரும் அதை ஒப்புக்கொண்டால் பிறகு உங்களுக்கு என்ன நன்மை? ஆகையால் நீங்கள் சங்க விதிகளையும் புதிய சங்க விதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்து ஒரு சமரச முடிவுக்கு வருவது நல்லது. காங்கிரஸ் கட்சி சுயராச்சியத்திற்காகப் பாடுபட்டுக்கொண்டு வருகிறது. சுயராச்சியம் வந்தால் உங்களுக்கு நன்மைதான். ஆனால் பூரா வசதியும் உங்களுக்குக் கிடைத்துவிடாது. ஆகையால் நீங்கள் தனியாகத் தனிக் கட்சியாக இருப்பதுதான் நல்லது. காங்கிரஸ் உங்களை எங்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் என்று என்னால் சொல்ல முடியாது. நீங்கள் தனிப்பட்ட முறையில் பற்பல தேசிய இயக்கங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம், ஆனால் உங்கள் சங்கத்தின் நன்மையைப் பொருத்த வரையிலும் நீங்கள் தனியாக இருப்பதுதான் நல்லதென்று கருதுகின்றேன்.'

---

சேலத்தில் 1926-ல் நடந்த தமிழ் நாடு தாழ்த்தப்பட்டவர்கள் மாநாடு முடிந்த பின் பத்திரிகைகளிலே வெளிவந்த செய்தியைக் கொண்டே டாக்டர் நாயுடு அவர்களுக்கும் வைதீகத்திற்கும் சமுதாயத் துறையிலே உரிமையைப் பெறுவது எப்படி என்பதைப் பற்றி ஏற்பட்ட வாக்குவாதத்தின் நிலையை கீழே குறிப்பிட்ட சுதேச மித்திரன் தெரிவிக்கிறது. ஒருவருடைய உண்மையான உள்ளத்தைத் தெரிந்து கொள்வதற்கு இந்த நல்ல வாய்ப்பு நமக்குத் துணையாக நிற்கிறது.

சுதேசமித்திரன், 28–10–1926.

# தெய்வத்தோடு யுத்தம்

'நாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள், ஆகையால் எங்களுக்குச் சில சர்க்கார் உத்தியோகங்கள் வேண்டும்' என்று கேட்பதும், தன்னம்பிக்கை அல்லது சுயப்பிரயாசையில்லாமல் இருப்பதும் சாசுவதமான பொருளாதார விடுதலையளிக்கக்கூடிய ஏதாவதொரு தொழிலைக் கற்காமல் காலம் தள்ளுவதும் கூடாதென்று திரு. இராசகோபாலாச்சாரியார் சொன்னார். தைரியம், அகிம்சை, அன்பு, தேச பக்தி ஆகிய குணங்கள் அவர்களுக்கு ஏற்படும் வண்ணமும் அவர் பேசினார். ஆனால், தமிழ் நாடு தேசியக் கட்சித் தலைவர் டாக்டர் நாயுடுவுக்கு அதெல்லாம் பிடிக்கவில்லை. தாழ்ந்தவர்கள் முன்னேறுவதற்கு அவர் ஒரு 'சுலபமான,' வழி சொன்னார்— "அன்பால் ஒன்றும் ஆகாது, புத்தராலேயே ஒன்றும் ஆகவில்லை, பழைய சாஸ்திரம், நூல், புராணம் முதலியவற்றை நம்பாதீர்கள். தெய்வத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். தெய்வத்தோடு யுத்தம் செய்யுங்கள். ஜாதியைக் குறை கூறுவது துவேஷமல்ல, வைக்கம் சண்டையைத் தொடர்ந்து நடத்துங்கள். வகுப்பு வாரி பிரதிநிதித்வம் இல்லாமல் ஒவ்வொரு சாதியாருக்கும் இத்தனை ஸ்தானங்கள் என்று நிர்னயம் செய்துவிடலாம்." இதுதான் அவருடைய மகோபதேசம். ஆனால் 'இது போகாத ஊருக்கு வழி. தெய்வம் வேண்டாம். சாஸ்திரம் வேண்டாம், அன்பு வேண்டாம்; சாதித் துவேஷமும் சண்டையும்தான் வேண்டும் என்று தாழ்த்தப்பட்டவர்களுக்குப் போதிப்பது ஒரு பொறுப்பேற்ற தலைவருக்கு அழகல்ல. சண்டையும் பூசலும் போட்டுப் பிறரைக் கீழே இழுக்காமல் மேலே போவதற்கு வழியில்லையா?

தாழ்த்தப்பட்டவர்களுக்கு நாஸ்திக உபதேசத்தால் நன்மை உண்டா? ஆத்திரமும் துவேஷமும் அவருடைய பிரசங்கத்தில் தென்படுகிறதே தவிர "தேசிய வாதம்," ஒன்றையுமே காணோம்.' இப்படி தலையங்கம் எழுதியிருந்த சுதேச மித்திரனுக்கு மறுபடியும் ஒரு தந்தியடித்தார் டாக்டர்.

அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது :—

'சேலம் பஞ்சமர் மாநாட்டில் நான் செய்த பிரசங்கத்தைப்பற்றி சுதேசமித்திரன் தலையங்கப் பத்தியில் கண்டித்து எழுதப்பட்டிருந்தது. ஆனால் நான் மறுபடியும் அதையே சொல்லுவேன். பிராம்மணர் சாஸ்திரங்கள் என்ன, மற்றும் பிறப்பினால் பிராம்மணர்கள் உயர்ந்தவர்கள், பஞ்சமர்கள் தாழ்ந்தவர்கள் என்ற அந்தஸ்து வேற்றுமையையும், பிறப்பினால் வெவ்வேறு விதமான உரிமைகள் ஏற்படுவதையும் அனுமதிக்கிற தெய்வங்களென்ன, ஆகிய வற்றை நான் எதிர்க்கவே தீர்மானம். 500 பஞ்சமர்கள் என்னுடைய விருந்தாளிகளாக இருந்து திரு. இராசகோபாலாச்சாரி உள்பட எங்களோடு தாராளமாகப் புழங்கவும் சாப்பிடவும் செய்தார்கள். நாங்கள் யாரும் குருடராய்ப் போய்விடவில்லை. ஈஸ்வரன் எல்லா மனிதர்களையும் சமமாக நடத்துகிறவர். அவரை நான் பூசிக்கிறேன். கிருஷ்ண பரமாத்மாவையே நான் வழித் துணையாகக் கொண்டிருக்கிறேன். சுய புத்தியுள்ள பிராம்மணரல்லாதாருக்கு விரோதமாக பிராம்மணப் பத்திரிகைகள் வேண்டுமென்று திருத்திக் கூறி, விஷயங்களை மறைத்து, இரகசியமாய்ப் போர் நடத்துவதால், பிராம்மணீயத்துக்கு விரோதமாக இன்னும் உக்ரமாக கலகம் செய்ய வேண்டுமென்று எங்களுக்குத் தோன்றுகிறது. அதைத் தயவு செய்து

தெரிந்துகொள்ளக்கடவீர். பிராம்மணீயத்தால் அவமானப்படுவதைக் காட்டிலும் நான் நரகத்திற்குப் போகத் தயார். இதைத் தயவு செய்து பிரசுரியுங்கள்.' என்று தந்தியடித்தார்.

## நீதிக் கட்சியைப்பற்றி அவர் பேசியிருப்பது

(19-3-1926.)

'காங்கிரஸ்காரர்கள் நீதிக் கட்சியைக்கடுமையாகவும் மோசமான மொழிகளாலும் தாக்குவதை உடனே நிறுத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன். சட்டசபையிலேயோ, காங்கிரஸ் பொதுக் கூட்டங்களிலேயோ, காங்கிரசை ஆதரித்து எழுதும் பத்திரிகைகளிலேயோ அத்தகு மோசமான நிலையை யுண்டாக்க வேண்டாமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

குருகுலப்போராட்டத்தின்போது எல்லாப்பார்ப்பனர்களும் ஒன்று சேர்ந்து தமிழர்களையும்-தமிழர் கட்சியையும் தாக்கிப் பேசினார்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன். நீதிக் கட்சியை ஈவிரக்கமில்லாமல் தாக்கிப் பேசப்பட்டபோது, நீதிக் கட்சியிலே இருந்தவர்களும், இல்லாதவர்களுமான எல்லாத் தமிழர்களும் வருத்தப்பட்டார்கள் என்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். நாட்டில் வருணாசிரமத்தின் பேரால் இழைக்கப்படும் கொடுமைகள் இருக்கும் வரை நீதிக் கட்சி இருந்தே தீர வேண்டும். அதை அழிப்பதற்கு பிராம்மணர்கள் செய்கிற முயற்சியை முறியடிக்க வேண்டும். யாராவது காங்

கிரஸ் போர்வையிலே இருந்துகொண்டு பார்ப்பனரல்லா தார் இயக்கமான் நீதிக் கட்சியை அழிக்க முற்பட்டால், காங்கிரஸ் தேர்தலிலே நிச்சயம் வெற்றி பெற முடியாது என்பதை நாம் எச்சரிக்கை செய்யவேண்டியவர்களாய் இருக்கிறோம்.'

19-7-1928-ல் நடந்த ரயில்வே வேலை நிறுத்தத்தைப் பற்றி அவர் தம் பத்திரிகையில் எழுதியிருக்கும் தலையங்கம்.

*சர்க்கார் தவறு*

'இதுவரை நமக்கு வெளியூர்களிலிருந்து கிடைத்தத் தந்திகளைப் பார்த்தால், ஏஜெண்டு எதிர்பார்த்ததற்கு மேல் வேலை நிறுத்தம் பலமாய் நடைபெற்றிருப்பதை அறியலாம். திருநெல்வேலி ஜில்லா முதல் சென்னை வரையில் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள். டிரைவர்கள் முதலிய ரயில் ஓட்டுபவர்களும் சேர்ந்துகொண்டபடியால் ஒன்றிரண்டு ஆங்கிலோ இந்தியர்களைக் கொண்டு ஓட்டுகிற ஒன்றிரண்டு ரயில்களைத் தவிர வேறு எதுவும் ஓடவில்லை. இன்று காலை 6 மணிக்கு சென்னைக்கு வரவேண்டிய போட் மெயில் 10½ மணிக்கே வந்தது. அதில் வந்தவர்களிடம் காரணத்தை விசாரித்ததில், ஒவ்வொரு ஸ்டேஷனிலும் 'கேட்' கதவுகளை அடைப்பது திறப்பது முதலான வேலைகளை டிரைவர்களே செய்யவேண்டியிருந்தபடியால் நேரமாயிற்றென்றும், எந்த ஸ்டேஷனிலும் ஒரு பிரயாணியைக் கூடக் காணவில்லையென்றும் சொன்னார்கள். சென்னையில் வண்டிக்குக் கொடி காட்டுகிற வேலையைக் கூட உயர்ந்த அதிகாரிகளே செய்ய நேரிட்

டது. ஒன்றிரண்டாய்ப் போகிற ரயில்களில் கூட ஏறு கிறவர்களைக் காணோம். திருச்செந்தூரிலிருந்து திருநெல் வேலிக்கு ஆங்கிலோ இந்தியரால் ஓட்டிக்கொண்டு வரப் பட்ட ரயிலில் ஒரே ஒரு பிரயாணிதான் இருந்தாராம். தொல்லை தொடங்கிவிட்டது. திருச்சியில் பெட்ரோல் விலை அதிகரித்துவிட்டதாம் பண்டங்களின் விலையும் அதிகரித்துவிட்டது, பஸ்களில் கட்டண உயர்வு. இத னால் 2 கோடி மக்கள் கஷ்டப்படவேண்டி வந்து விட்டது.'

———

பார்ப்பனரல்லாதார்தான் பார்ப்பனர் மேல் பகைத் துக்கொள்கிறார்கள். பார்ப்பனர்கள் அதற்கு எதிர் நட வடிக்கை ஒன்றுமே எடுப்பதில்லை என்பது உண்மை தானா என்பதைப் பாருங்கள்.

## *சுதேசமித்திரன் (12-1-1946)*

### பெரியகுளம் பிராம்மணர்கள் கூட்டம் பிராம்மணர்கள் பாங்குகள் ஏற்படுத்த யோசனை

பெரியகுளம் வக்கீல் திரு. பி. வி. சுப்ரமணிய ஐயர் தலைமை வகித்தார்.

சேலம் மாநாட்டில் யோசிப்பதற்காக அனுப்பப்பட்ட தீர்மானங்கள்,

பிராம்மண சமூகத்தினரின் சௌகரியத்திற்காகப் பிராம்மண பாங்கு ஒன்று ஏற்படுத்துவது. அதற்கு மூல தனம் பிராம்மண சமூகத்திலுள்ள எல்லாருமே கொடுக்க வேண்டும்.

யுத்தத்திலிருந்து திரும்பிவந்து வேலையில்லாமல் இருக்கப்போகும் பிராம்மண இளைஞர்களுக்கு வேலை தேடிக் கொடுக்க ஒரு பிராம்மண உத்தியோக பீரோ ஏற்படுத்துவது. பிராம்மண சமூகத்தினுள் தனவந்தராக உள்ள ஒருவரோ அல்லது பலரோ சேர்ந்து பெரிய பல தொழில்கள் ஆரம்பித்து அதில் பிராம்மண சாதி இளைஞர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். வேலையில்லாமலிருக்கும் பிராம்மணர்கள் ஏதாவது தொழில் செய்ய வேண்டுமென்றும், அப்படிப்பட்டவர்களுக்கு பிராம்மண பாங்கு அல்லது சங்கம் பொருளுதவி செய்யவேண்டும்.

சர்க்கார் உத்தியோகங்களில் சாதிக்கு இவ்வளவு என்று உத்தியோகம் கொடுக்கப்படும் வழக்கத்தை நிறுத்தவேண்டும். அவரவர்கள் திறமைக்குத் தகுந்தவாறு உத்தியோகம் கொடுக்கவேண்டும்.

பிராம்மண சிறுவர்களுக்குப் பள்ளிக்கூடங்களில் சம்ஸ்கிருதம் கட்டாயம் கற்றுக்கொடுக்க வேண்டும்.

சம்ஸ்கிருதம், வேதம் முதலானவைகள் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொள்ளக் கட்டாயம் வசதி செய்து தரவேண்டும்.

பிராம்மண சங்கம் அதற்காக ஒரு பத்திரிகை நடத்தவேண்டும்; மற்றும் பல செயல் முறைகளைப்பற்றி யோசிக்கப்பட்டது.

கூட்டத்தைக் கூட்டிய என். சுந்தரேச ஐயர் வந்தனோபசாரம் கூறியபின் கூட்டம் கலைந்தது.

### தங்கவாள் பரிசு

1947–ஜூன் திங்கள் 1-ம் நாள் இவரது 60-வது ஆண்டுவிழா சேலத்தில் கொண்டாடி ஒரு தங்க வாளைப்

பரிசாகத் தந்து பலர் வாழ்த்துரை வழங்கினார்கள். அந்தப் பாராட்டுதலுக்குக் கீழ் வருமாறு பதிலளித்திருக்கின்றார்.

'1907–ஆம் ஆண்டு புதுச்சேரியில் கவி சுப்பிரமணிய பாரதியார் வீட்டில் என் அரசியல் வாழ்வு தொடங்கியது. அப்போது என் உடம்பிலிருந்த ரத்தத்தை எடுத்து ஒரு வாக்குறுதி எடுத்துக்கொண்டேன். 'அன்றையதினம் பிரிட்டிஷ் ராசாங்கத்தை அழிந்தே தீரவேண்டுமென்று வைராக்கியம் செய்து கொண்டேன். அந்தக் கொள்கையிலிருந்து இதுநாள் வரையிலும் நான் நழுவியதே கிடையாது. அதுவே எனது ஒரே நோக்கமாகவும் இருந்திருக்கிறது.'

## பதவியை விரும்பி யிருந்தால்

'அன்று முதல் நான் பதவி மீது ஆசை வைத்ததில்லை. ஆசை யிருந்திருக்குமானால் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பே மந்திரிப் பதவியை வகித்திருக்கக் கூடும். எர்ஸ்கின் பிரபு சென்னை கவர்னராக இருந்த போது எனக்கு அழைப்பு அனுப்பி மந்திரிப்பதவியைஏற்குமாறு வேண்டிக் கொண்டார். இரண்டு மணி நேரத்தில் பதில் அளிப்பதாகச் சொல்லிவிட்டுவந்து முக்கியமான ஒருவரிடம் கலந்தாலோசித்து மீண்டும் கவர்னரைப் பார்த்து மற்ற மந்திரிகளையும் நியமிக்கும் அதிகாரம் எனக்களித்தால் நான் மந்திரிபதவி ஏற்றுக்கொள்வதாகச் சொன்னேன். அதை கவர்னர் ஒப்புக்கொள்ள மறுக்கவே நானும் மறுத்துவிட்டேன் எனக்கு வெறும் பதவிதான் குறிக்கோள் என்றால் நான் அப்படிச் சொல்லியிருக்கத் தேவை இல்லை.'

## வட்டமேசை மாநாட்டுக்கு வந்த அழைப்பு

'இரண்டாவதாக இலண்டனில் நடந்த வட்டமேசை மாநாட்டுக்கு அழைக்கப்பட்டேன் நான் அந்தப் பதவி

யையும் ஏற்றுக்கொள்ள மறுத்தேன். மகாத்மா காந்தி இல்லாமல் மாநாடு நடப்பதில் பிரயோசனமில்லை, அவர் இருந்தால் மற்றவர்கள் அதில் கலந்து கொள்ளத் தேவையில்லை, என்று சொல்லிவிட்டேன்.'

## ஆயுதபாணிகளாகுக

'எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தங்கவாள் பரிசாகக் கொடுக்கப்பட்டிருப்பது பற்றி ஒரு விதத்தில் மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால் அதில் அடங்கியிருக்கும் கருத்து மகத்தானது. சக்திதான் தேசத்தைக் காப்பாற்றும் என்று நம்புகிறேன். நான் இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகள் நமது நாடு சொல்லொணாத தொல்லைகள் அனுபவிக்க வேண்டி வரும். இன்று நமது நாட்டில் நடக்கும் சாதிமதச் சண்டைகளுக்கு பிரிட்டிஷாரே காரணஸ்தர்கள். அவர்கள் வேண்டுமென்றே இந்தச் சண்டைகளை வளர்த்து வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் இந்தியாவுக்கு வந்தபோது இந் நாட்டிலிருந்த கலவரத்தை மீண்டும் மூட்டிவிட்டுத்தான் போகவேண்டுமென்ற நோக்கத்துடன் வேலை செய்கிறார்கள். ஆகவே இந்தியா மீண்டும் 'ரத்தகளம்' ஆகுமென்பது தவிர்க்க முடியாதது. ஆகவே தருமத்தையும் நம் குடும்பத்தையும் பாதுகாக்க நாம் அனைவரும் ஆயுதபாணிகளாக வேண்டும்.'

## கல்வியைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்து

27-3-55-ல் சென்னையில் நடந்த, சென்னை மாநில எயிடட் பள்ளிகளின் ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் மாநாட்டுக்குத் தலைமை வகித்து அவர் ஆற்றிய

தலைமையுரையின் சுருக்கமும், 9-11-55ல் வேலூர் லட்சுமணசாமி டவுன் ஹாலில், நடந்த அதே இரண்டாவது மாநில மாநாட்டின் தலைமையுரையின் சுருக்கமும் இங்கே தரப்படுகிறது :—

"இந்த நாட்டின் குழந்தைகளுக்குக் கல்விப்பொருளை அள்ளி வழங்கும் அரும்பணியில் ஈடுபட்டுள்ள உங்களனைவருக்கும் என் அன்பார்ந்த வணக்கம்.

பேரறிஞர் புத்தர் தோன்றிய பிறகுதான் அவருடைய மதக்கோட்பாடுகளைப் பரப்பும் பணியில் ஈடுபட்ட புத்த சந்யாசிகள்தான் முதன் முதலாக இந்தியாவில் பொது மக்களுக்கெல்லாம் கல்வியைத் தருவது என்ற ஏற்பாட்டைத் தொடங்கி வைத்தார்கள். ஆனால் ஒன்று, புத்த மதத் துறவிகளால் அளிக்கப்பட்டு வந்த கல்வி மதக் கோட்பாடுகளையும் ஒழுக்க முறைகளையும் மட்டுமே வலியுறுத்துவதாக இருந்தது. அவர்களுடைய பள்ளிகளில் பெரும்பாலும் சமயச் சார்புடைய கருத்துக்கள் மட்டுமே இடம் பெறலாயின. ஆனால் இப்போதோ, கல்வி, விஞ்ஞானம், வரலாறு, நிலநூல், ஆட்சி முறை, கணக்கு, இலக்கியம் முதலிய பல்வேறு பொருள்களைப் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கிறது.

இந்தியாவில் இந்து அரசர்களின் ஆதிக்கமும், இந்து மதப் புரோகிதர்களின் செல்வாக்கும் தலை சிறந்து விளங்கிய காலத்தில் கல்வியானது, சில குறிப்பிட்ட மேல் சாதி மக்களுக்கு மட்டுமே சொந்தம் என்கிற நிலை இருந்து வந்தது. ஏனைய சாதிகளைச் சேர்ந்த மக்களுக்கெல்லாம் கல்வியின் இன்பத்தைப் பெறுகிற உரிமையே கிடையாது என்கிற அநீதி நிலை நாட்டப்பட்டு வந்தது. அந்தக்

காலத்தில். நல்ல வேளையாக அந்தக் கொடுமை அழிந்து விட்டது.

சில மேல் சாதிக்காரர்களின் தனியுடைமையாக இருந்தது, இப்போது அனைவருடைய பொது உடைமையாகிவிட்டது. முற்காலத்தில் நம் நாட்டில் தரப்பட்டு வந்த கல்வியோடு மட்டுமல்ல, இக்காலத்தில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தரப்பட்டு வருகிற கல்வி முறையோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் சரி, நம் நாட்டுக் கல்வி முறை குறைபாடு உடையதாகவே இருக்கிறது.

ஐரோப்பியக் கல்வி முறையில், மாணவர்கள் தத்தம் விருப்பத்திற்கும் திறமைக்கும் ஏற்றபடி எடுத்துப் பயில்வதற்காக, எண்ணற்ற வகையான பாட திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இங்கோ, பல்வேறு மாணவர்களின் விருப்பமும் திறமையும் எப்படியிருந்தாலும் சரி, ஏறத்தாழ ஒரே விதமான பாடத் திட்டத்தைத்தான் அவர்கள் எல்லோரும் பின்பற்ற வேண்டியிருக்கிறது. தங்களுக்குத் தோன்றிய புதிய முறைகளைப் புகுத்தவும், தங்களுக்குச் சரி என்று தோன்றுகிற வகையில் பணியாற்றவும், ஐரோப்பாவில் ஆசிரியர்களுக்கு உரிமையிருக்கிறது. இங்கே அது இல்லை.

அங்கெல்லாம் மாணவர்கள் தங்களுடைய தனிப்பட்ட திறமைகளையும் விருப்பங்களையும் கருத்துக்களையும் தெரிவிப்பதற்குத் தேவையான வாய்ப்புகள் ஏராளமாக அளிக்கப்படுகின்றன. இங்கே அப்படி எவனாவது ஒரு மாணவன் தன் திறமையைக் காட்ட முன்வந்தால், அவனை அடங்காப்பிடாரி என்று அதட்டி மூலையிலே தள்ளிவிடுகிறோம்.

நம் நாட்டுக் கல்விமுறை, குறைபாடுகள் அற்றதாக மாற்றியமைக்கப்படவேண்டுமானல் தலை சிறந்த அறிவாளிகள் ஆசிரியத் தொழிலில் ஈடுபடுகிருர்கள் என்று சொல்லத்தக்க நிலையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு ஆசிரியர்களுக்கு இப்போதிருப்பதை விட அதிக ஊதியம் தரப்படவேண்டும். கண்ணியமான ஊதியமும், கணிசமான செல்வாக்கும் படைத்ததாக ஆசிரியத் தொழில் மாற்றப்பட்டால்தான் திறமை மிகுந்தவர்கள் அந்தத் தொழிலுக்கு வருவர். கல்வியின் தரமும் அப்போதுதான் உயர முடியும்.

ஆசிரியர்களின் நிலையை உயர்த்த வேண்டியது எவ்வளவு அவசியமோ, அதே அளவுக்கு, கல்வித் துறையில் அரசாங்கத்தின் தலையீடு அடிக்கடி நேரிடாதபடி பார்த்துக் கொள்வதும் அவசியமாகும். நான் அழுத்தம் திருத்தமாகவே சொல்கிறேன். கல்வித் துறையானது தனிப்பட்ட நிர்வாகங்களின் பொறுப்பில் இருக்க வேண்டுமே தவிர, அரசாங்கத்தின் நேரடி ஆதிக்கத்தில் நிச்சயமாக இருக்கக்கூடாது. இது, ஜனநாயக நாடு. ஆளும் கட்சிகள் அடிக்கடி மாறக்கூடிய நிலை இங்கே உண்டு. ஒவ்வோர் கட்சிக்கும் ஒவ்வோர் வகையான கல்விக் கொள்கை இருக்கக்கூடும். இந்த நிலையில், அரசாங்க ஆதிக்கத்தில் கல்வித் துறை இருக்குமானல், அந்தத் துறையில் அடிக்கடி மாறுதல்கள் ஏற்பட்டு குழப்பம்தானே உண்டாகும். ஆகவே மேல் நாடுகளில் இருப்பதைப் போன்ற கல்விச் சபைகளை ஏற்படுத்திக், கல்வித்துறையைப் பற்றிய முழுப் பொறுப்பையும் அவற்றிடம் ஒப்படைக்கலாம். அந்தக் குழுக்களின் பணியையும் முறையையும் வரையறுக்கும்

சில விரிவான சட்ட திட்டங்களை மட்டும் அரசாங்கத்தார் வகுத்துவிட்டு, மற்றப்படி முழு சுதந்தரத்தை அந்தக் குழுக்களுக்கு அளித்துவிடலாம்.

ஆரம்பக் கல்வியைப் பற்றிச் சில வார்த்தைகள்: தொடக்க வகுப்புகளில் சின்னஞ் சிறு குழந்தைகளே பயில்வதால், அந்த வகுப்புகளில், எழுதுவது, படிப்பது, கணக்குப் போடுவது ஆகிய மூன்றை மட்டுமே கற்றுக் கொடுத்தால் போதும் என்று நான் கருதுகிறேன்.

பள்ளிக்கூடங்களில் மதக் கல்வி தேவையில்லை. சமுதாயத்தில் எப்படிப் பழகுவது என்பதை விளக்கிக் காட்டும் ஒழுக்கக் கல்வியை (Moral Instruction) மட்டும் போதித்தால் போதும்.

கட்டாய ஆரம்பக் கல்வி நாடு முழுவதிலும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவேண்டும். தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டாலும் சரி, அரசாங்கத்தால் நடத்தப்பட்டாலும்சரி, 14 வயது வரையுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வியும், இலவச பகல் உணவும் கொடுக்க வேண்டும். குழந்தை நல விடுதிகள் (Child Welfare Centres) ஆங்காங்கே ஏற்படுத்த வேண்டும். குழந்தை மருத்துவ மனைகள் (Child Clinics) நாடெங்கும் நிறுவப்பட வேண்டும்.

சிறிய வகுப்புகளில் பெண்களே அதிக அளவில் ஆசிரியர்களாக நியமிக்கப்படவேண்டும். சிறு குழந்தைகளுக்குத் தேவையான தாய்மை அன்பும், பொறுமையும், நிதான உணர்ச்சியும் அவர்களிடமே அதிகமாக இருக்கின்றன.

பற்பல மாணவர்களின் வெவ்வேறு தன்மைகளுக்கும் ஏற்றதாக இருக்கும் வகையில் கல்வித்திட்டம் பல வகையினதாகவும் விரிவானதாகவும் மாற்றி அமைக்கப்படவேண்டும்.

போதுமான கட்டிட வசதியும், தேவையான பண்டங்களும் கருவிகளும் பள்ளிக்கூடங்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

ரயில்வே, தபால்துறை ஊழியர்களுக்குத் தரப்படும் பல்வேறு விசேஷ உரிமைகளும் வசதிகளும் ஆசிரியர்களுக்குத் தரப்படவேண்டும்.

வேறு வழியில்லை என்றுலொழிய, ஆசிரியர்களையும் தலைமை ஆசிரியர்களையும் ஊர் விட்டு ஊர்மாற்றக் கூடாது. அவர்களை அடிக்கடி மாற்றுவதால் குழந்தைகளின் கட்டுப்பாட்டு உணர்ச்சி குலைந்து விடுகிறது.

இவற்றிற்கெல்லாம் பணம் ஏது என்ற கேள்வி எழுகிறது. மத்திய அரசாங்கமும்-மாகாண அரசாங்கமும் அவற்றின் பொது வருமானத்திலிருந்து இன்னமும் சற்று அதிகமான தொகையைக் கல்விக்காக ஒதுக்கலாம்.

உங்களுக்கிருக்கின்ற பல குறைபாடுகளை நான் உணர்ந்திருக்கிறேன். சென்ற ஆறு மாத காலமாக நஷ்ட ஈடுவரவில்லையே என்ற வருத்தம் ஒரு புறம். நியாயமான அளவு நஷ்ட ஈட்டிற்கு ஏற்பாடு செய்யாமல் மிகக் குறைந்த அளவுதான் தரமுடியும் என்று கல்வி இலாகாவின் செப்டம்பர் மாத உத்திரவு ஒன்று தெரிவிக்கிறதே என்கிற வேதனை ஒரு புறம். இந்த அளவு நஷ்டயீடு கூடத் தேவையில்லை என்று அழகப்பா கமிட்டியின்

அறிக்கை அறிவிக்கிறதே என்கிற கோபம் மற்ருேர் புறம். எயிடட் நிர்வாகிகள் எல்லாராலும் பாராட்டப்படக் கூடிய அளவில் மிகச் சிறந்த பணியாற்றியிருந்துங்கூட அழகப்பா கமிட்டியினர் சில வார்த்தைகள்கூடக் கூற வில்லையே என்கிற துயரம் வேருேர் புறம். இவ்வாருன எண்ணங்கள் உங்கள் நெஞ்சத்தில் வீசிக் கொண்டிருப்பது எனக்கு நன்ருகத் தெரியும்.

உங்களுடைய பிரச்னைகளை ஒப்புக்கொண்டு தீர வேண்டிய அரசாங்கத்திற்கு விளக்கமாக எடுத்துச் சொல்லுகிற கடமையை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

முதலமைச்சர் கனம் காமராசர் ஆரம்பக்கல்வியின் முன்னேற்றத்தில் மிகுந்த ஆர்வமும் பற்றுதலும் கொண்டிருக்கிருர் என்பது நீங்கள் அறிந்ததே. இங்குள்ள எல்லாச் சிறுவர் சிறுமியரும் கல்வி கற்க வேண்டியதற்கான எல்லாவிதமான வசதியைத் தேடித்தர வேண்டியது தன் கடமை என்றுணர்கிருர். அதற்காகவே அவர் 8-வது வரையில் ஏழைப் பிள்ளைகள் அனைவர்க்கும் இலவசக் கல்வி என்ற உத்திரவைப் பிறப்பித்தார். 4, 5, 6-வது படிவங்களிலும் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியை அளிக்க இயலுமா என்பதை அவர் தீவிரமாக ஆராய்ந்து வருகிருர்.

கனம் காமராசரால் கொண்டுவரப்பட்ட இவ்வளவு சிறந்த ஏற்பாட்டால் உங்களுக்குச் சில சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ருல் அதற்குக் காரணம் கல்வி இலாகாவின் நடைமுறையே என்று நான் கருதுகிறேன். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் எவ்வளவு பிற்போக்கான முறையில் நடந்து வந்ததோ அதே முறையில்தான் கல்வி

இலாகா இன்னமும் நடந்துவருகிறது. ஒரு புதிய உற்சாகம்,—ஒரு வரவேற்கத்தக்க மாறுதல்—சுதந்தர சகாப்தத்திற்கு ஏற்ற சுறுசுறுப்பான நடைமுறை—எதையுமே நம் கல்வி இலாகாவில் காண முடியவில்லை. அதற்காக நான் வருந்துவதோடு நில்லாமல் என்னாலியன்ற எல்லா உதவிகளையும் செய்கிறேன் என்று உறுதி கூறிக்கொண்டு என் தலைமையுரையை முடிக்கின்றேன். வணக்கம்.''

## குலக்கல்வித் திட்டம்.

பழைய பத்தாம் பசலி வருணாசிரம திட்டத்தைப் புதிய முறையில் திணிக்க முயற்சித்த ஆச்சாரியாரின் சதி.

புதிய மொந்தையில் பழைய கள். காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள் 80 பேர்களுடைய எதிர்ப்பு. நாடெங்கும் கண்டனம். சகல கட்சிகளின் சீற்றம்.

கண்மூடிக் கல்வித் திட்டத்தைக் கல்லறைக்கு அனுப்பிய வீரர் டாக்டர்.

''சர்க்காரால் கொண்டுவரப்பட்ட வேறு எந்த மோசமான திட்டத்திற்கும் இவ்வளவு எதிர்ப்பு இருந்ததில்லை. காரணம், ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்ட வருணாசிரம கல்வித் திட்டம் மிகப் பழைய காலத்தில் சாணக்கியன் ஆட்டிப் படைத்த நவநந்தர்கள் முடிவை விட மிக மோசமானதென எண்ணினார்கள் மக்கள். தந்தை செய்த வேலையை மக்கள் செய்யவேண்டும். ஓர் ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஒரு விவசாயிக்கு நான்கு மக்கள் இருந்தால் அந்த நான்கு மக்களும் அந்த ஓர் ஏக்கரையே நம்பிச் சாகவேண்டுமா என்று கேட்டது நாடு. தந்தை செய்த வேலை, அந்தத் தந்தை, அவன் தந்தை, அந்தத் தந்தைக்குத்

தந்தை இப்படி, கொடிவழி பிடித்துக்கொண்டே போவதானல் இந்தக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்த ஆச்சாரியாரின் தந்தையார், பிரபல கிரிமினல் வக்கீலாகவும், வைஸ்ராயாகவும், மந்திரியாகவுமா வேலை பார்த்தார் என்று கேட்டது நாடு. போற்றுதலுக்குரிய விஞ்ஞானிகளின் தந்தைமார்களோ, தனயன்மார்களோ விஞ்ஞானிகள்தானு? அப்படியானல் ஐந்தாம் ஜார்ஜ் ஆண்டார், அவர் மகன் ஆளட்டும்; அதுதான் முறை என்று சும்மா இருந்துவிடலாமா? ஆச்சாரியாரை வருந்தி அழைத்துத்தான் அரசு கட்டிலிலே அமர்த்தினர்கள்; அந்தத் தைரியத்தின் காரணமாகவே தாம் நினைத்த எதையும் செய்யலாம் என்று முடிவு கட்டிக் களத்தில் குதித்துவிட்டார். புகைந்துகொண்டிருக்கும் எரிமலை வெடிக்கப்போகும் நேரம் நெருங்கிவிட்டது என்பதை உணராமல் போய்விட்டார். தமிழர்களின் தன் மானத்தைக் கேலி செய்வதைப் போன்றிருந்தது. பகுத்தறிவைப் பரிகசிக்கும் நிலையிலே இருந்தது, அவருடைய எதேச்சாதிகாரப் போக்கு.

நேரடியாகவே டாக்டர் நாயுடு அவர்களுக்கும் ஆச்சாரியாருக்கும் வாய்ச்சண்டை ஏற்பட்டது. ஆச்சாரியாருக்கு எதிராக புகார் மனுவில் கையெழுத்திட்ட 80 எம். எல். ஏ.-க்கள் மீது—பணத்தாசை பிடித்தவர்கள், பதவி ஆசை பிடித்தவர்கள், ஜாதிப் பித்துப் பிடித்தவர்கள் மடத்தனம், முதல் கையெழுத்துப் போட்ட டாக்டரை, 'மடத்தனத்தின் நடு நாயகம்' என்றெல்லாம் திட்டினர்.

இதற்கு டாக்டர் நாயுடு நல்ல முறையில் சொன்ன பதில், 'ஜாதிப் பித்து பிடித்தவர் நீரா—நானு? பதவி ஆசை இல்லையென்ருல் நீர் எப்படி கவர்னரானீர்? எப்படி

கவர்னர் ஜனரலாக வந்தீர்? எப்படி டெல்லியில் மந்திரி யானீர்? எப்படி சென்னைக்கு முதன் மந்திரியாக வந்தீர் ? உமக்குப் பணத்தாசை இல்லையென்றால் நீர் ஏன் இரட்டைச் சம்பளம் (மாதம் 2500 ரூபாய்) வாங்குகிறீர்? என்றெல்லாம் சூடு கொடுத்தார்.

இதனாலேயே டாக்டர்மேல் ஒரு கிரிமினல் வழக்குத் தொடுக்கப் போவதாகவும் முதலில் பயமுறுத்திப் பிறகு அதைச் செய்தும் பார்த்துவிட்டார்.

## எதிர்ப்பு உருவானது எப்படி ?

ஆச்சாரியார் இந்தக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வரப் போவதாக இந்துவில் வெளியான செய்தி இதோ:—

### Ele., Schools in State

### Modified Scheme to be extended

### Enforcement in Urban Areas

Madras Feb. 2.

The Government of Madras have dicided to extend the modified scheme of elementary education to municipal areas also from the next academic year.

The Scheme to thus to come into operation from June next throughout the state.

It is learnt that the decision will apply to Madras City Corporation also.

—சுதேசமித்திரன்

# புது ஆரம்பக்கல்வித் திட்டம்

அடுத்த ஜூன் முதல் சென்னை உட்பட நகரங்களுக்கு விஸ்தரிப்பு.

சென்னை, பிப்ரவரி 3.

ஜூன் மாதத்தில் கோடைகால விடுமுறைக்குப் பிறகு பள்ளிக்கூடங்கள் திறக்கப்படும்போது புது ஆரம்பக் கல்வித் திட்டத்தை நகரங்களிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கும் விஸ்தரிக்க சர்க்கார் முடிவு செய்துள்ளனர். சென்னைக் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்கள் உட்பட எல்லா முனிசிபல் பள்ளிக்கூடங்களிலும் எல்லா நகரப் பள்ளிக்கூடங்களிலும் இத்திட்டம் அமுல் நடத்தப்படும். பிரஸ்தாப முடிவு சம்மந்தமாக அதை அமுல் நடத்தும் முறையைப் பற்றி இப்பொழுது பரிசீலனை நடப்பதாகத் தெரிகிறது.

புது ஆரம்பக்கல்வித் திட்டம் ஏற்கெனவே கிராமங்களில் அமுலில் இருந்து வருகிறது.

எப்படியோ ஒரே ஒரு ஓட்டு மெஜாரிட்டியால் குலக் கல்வித்திட்டம் நிறைவேறிவிட்டது. இனி, அதை மட்டிலும் ஒழிக்க சட்டங்கள் இடந்தரவில்லை. ஆகவே அந்த மந்திரி சபையையே ஒழித்தாலன்றி அந்தக்கல்வித் திட்டத்தை ஒழிக்க முடியாது. உளுத்துப்போன கிளைகளை ஒழிக்க அடிமரத்தை வெட்டித் தீரவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

இதை ஜாடை மாடையாகவும் ஆச்சாரியார் இருந்த மதுரைப் பொதுக்கூட்ட மேடையிலேயே திரு. காமராசர்

பேசும் போது, 'வயதானவர்கள் பதவியிலிருந்து விலகி, இளைஞர்கள் கையில் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பது தான் நல்லது, என்றும் குறிப்பிட்டார். நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் லட்சக்கணக்கான கடிதங்கள் மலை போல் குவிந்தன. எங்கள் சொரணை கெடவில்லை யென தீக்கனல் கக்கினர் பலர். இந்த ராஜாஜிக்கும் இட்லருக் கும் என்ன வித்தியாசம் என்று எரிச்சொற்களை எடுத்து வீசினர் எண்ணற்றோர். இந்த முதுபெரும் கிழவருக்கும் முசோலினிக்கும் முரண்பாடு இல்லையே என்று புரு வத்தை மேலேற்றினர் பலர். இதன் பிறகு ஏற்பட்ட நிலை, ஆச்சாரியாரை வெளியேற்றுவதற்காக, சட்டசபைக் கட் சிக்கூட்டத்தைக் கூட்டும்படி ஆச்சாரியாரைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. உடனே ஆச்சாரியார் நேருவிடம் யோசனை கேட்டார். இப்போது கூட்டவேண்டிய அவசியமில்லையென்று நேரு பதிலளித்து விட்டார். இதனால் முதல் முயற்சி தோல்வியடைந்தது. காங்கிரஸ் பத்திரிகைகள் சில, ' அப்பா—மலைபோல் வந்த அபாயம் பனிபோல் நீங்கிவிட்டது ' என்று பெருமூச்சுவிட்டன.

ஆனால் இரண்டாவது முயற்சியும் வெகு விரை விலேயே உருவெடுத்தது. ஆச்சாரியாரை எதிர்த்து சட்ட சபை காங்கிரஸ் மெம்பர்கள் பலர் நேருவுக்குப் புகார் மனு அனுப்பினர். சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டியது அவசியம் என்றும் அதில் வற்புறுத்தி யிருந்தனர்.

மனு அனுப்பியவர்களில் முக்கியமானவரான டாக் டர் நாயுடுவுக்கு நேரு பதில் கடிதம் எழுதினார். அதில் இராசகோபாலாச்சாரியை முன்பு வருந்தி வருந்திக் கூப்

பிட்டவர்கள் இப்போது ஏன் போகச் சொல்ல வேண்டும், என்று கேட்டிருந்தார். ஆக இந்த இரண்டாவது முயற்சியும் பயனளிக்காமல் போய்விட்டது.

இதை அடுத்து இறுதித் திட்டம் தயாராகப் போவதாக அறிவித்துவிட்டார்.

அதுதான் அவர்மேல் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம். இனி சமரசத்துக்கே இடமில்லை. ஒன்று, அவர் பதவியை விட்டுப் போகவேண்டும், அல்லது அவரே தொடர்ந்து இருக்கவேண்டும். இதில் சமரசத்துக்கு எங்கே இடமிருக்கிறது என்று திட்டவட்டமாகக் கூறி பூரண மெஜார்ட்டியைத் தயார் செய்து கொண்டிருந்தார்.

இடிமேல் இடி விழுந்ததைப்போல ஆச்சாரியாருக்கு மேலும் மேலும் பல இடிகள் விழுந்துகொண்டே இருந்தன.

அதில் ஒன்று ஜோதி அம்மாளைப்பற்றியது.

அந்த அம்மாளை மந்திரியாக்க வேண்டுமென்று ஆச்சாரியார் படாத பாடுபட்டு உறுப்பினர்களை உருக்கமாகக் கேட்டுக் கொள்ளும் கட்டத்தைப் பாருங்கள்:

'நண்பர்களே ! சனம். ஜோதி அம்மாளுக்காக வோட்டுப் போடும்படி கேட்கவே இக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. இந்த அம்மாளை மத்திய பார்லிமெண்ட் போர்டு அங்கீகரிக்க வேண்டுமென எழுதினேன்! அவர்கள் அங்கீகாரம் தந்துவிட்டார்கள். ஆகவே நீங்கள் எல்லாம் அவருக்கு வோட்டுப்போட வேண்டியது கட்டாயமாகிறது. இதை வற்புறுத்திக் கூறி, உங்களை எல்லாம்

தயவு பண்ணி வோட்தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றார்.

அதற்குப் பதிலாக டாக்டர் சொன்னது ?

'இப்போதுதான் கோர்ட்டிலிருந்து வருகிறேன். எனக்குப் பேசவே கஷ்டமாக இருக்கிறது. இருந்தாலும் பேசுகிறேன்.' 35 ஆண்டுகளாக பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடியிருக்கிறேன். பல தரம் என்னைச் சிறையிலே பிடித்துப் போட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் கூட இவ்வளவு மோசமாக, பழி தீர்க்கும் எண்ணத்துடன் நடந்துகொள்ளவில்லை என்பதை நான் உங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். அரும்பாடு பட்டுப் பெற்ற சுயராஜ்யம் எப்படிச் சீரழிகிறது என்பதைப் பாருங்கள்.

"கனம் ராஜாஜி ஜோதி அம்மாளுக்காக வோட்டுப் போடும்படி கூறுகிறார், அவருக்கு ஒரு விஷயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். நாங்களும் (மெம்பர்களும்) மனிதர்கள்தான். எங்களுக்கு அவ்வளவு அறிவும் படிப்பும் இல்லையென்றாலும் மனிதர்கள்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. மேலும் 2 லட்சம் மக்களின் பிரதிநிதிகளாக தேர்தலில் ஜெயித்து வந்திருப்பவர்கள் நாங்கள். இதில், எத்தனையோ பேர் எவ்வளவோ கஷ்ட நஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். அதை விவரிக்க நான் விரும்பவில்லை. ஆனால் மெம்பர்கள் எப்பேர்ப்பட்ட தேர்தலில் வெற்றி பெற்று வந்தார்கள் என்பதை தலைவர் மறந்துவிடக்கூடாது. அப்படி அவர் மறவாதிருந்தால் எந்த ஒரு காரியத்தையும் அவர் நம்மைக் கேட்டுத்தான் செய்யவேண்டும். இந்த மாகாணத்துக்கு 5 மந்திரிகளை

போதும். இவ்வளவு தொகை அதிகமான மந்திரிகள் அவசியமில்லை என்று முன்பு கூறினேம். சரி, போட்டதுதான் போட்டாரே. மெம்பர்களில் யாரையாவது பொறுக்கி எடுத்துப் போட்டாரா? மந்திரி பதவி என்பது மக்களாகக் கொடுக்கும் கௌரவ உத்தியோகம். வேண்டியவர்களுக்காகக் கொடுக்கிற சலுகையல்ல. உண்மையில் இந்த மந்திரியை எனக்கு யாரென்றே தெரியாது. என்னைப் போலவேதான் இங்குப் பலர் இருக்கிறார்கள். தேச சேவை, காங்கிரஸ் சேவை, பொதுஜன சேவை, எதிலாவது ஒன்றில் இருக்க வேண்டும். அப்படி ஒன்றும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே தலைவர் எங்களை எல்லாம் ஒரு துரும்பாகத்தான் மதிக்கிறார் என்றாகிறது. இந்த லட்சணத்தில் எங்களை எல்லாம் கூப்பிட்டு, இப்படி மானத்தை வாங்குகிறீர்கள்.

'அல்லது ஒரு ஹரிஜனைப் போடவேண்டுமென்றால் ஜெயித்து வந்த 43 பேர் இருக்கிறார்களே அவர்களைப் போடலாமே. தலைவரே இப்படி நடத்தினால் அதிகாரிகள் எப்படி எங்களை மதிப்பார்கள். இப்போதே எந்த அதிகாரியும் கலெக்டர்களும் எங்களை மதிப்பதே இல்லை. சில விடங்களில் அவமரியாதையாகக் கூடப் பேசுகிறார்கள். ஆகு நாம் தேர்தலிலே நின்றது, ஜெயித்தது, ஜனங்களிடம் வோட் வாங்கியது, ஜனங்கள் நம்மை மதித்து அனுப்பியது எல்லாம் கேலிக் கூத்தாகிவிட்டது. தலைவருக்கு இதெல்லாம் மனதில் பட்டதாகவே தெரியவில்லை. இந்த நிலையில் நம்மை அவமானம் செய்யத்தான் இப்படியெல்லாம் செய்கிறாரா என்று நினைக்கிறேன்.

'இப்போது எதிர்ப்போருக்கெல்லாம் தொல்லை தரப்படுகிறது. இந்தத் தொல்லையைச் சமாளிக்க எனக்குப்

போதிய மனேபலம், தேகபலமெல்லாம் இருக்கிறது. ஆயுள்பலமும் இருந்தால் இதை அடியோடு இரண்டி லொன்றெனத் தீர்த்துக் கட்டிவிடுவேன்' என்று கண் டித்தார்.

ஆச்சாரியார் தந்த பதில் :—

'மெம்பர்களை அவமதிக்கிற எண்ணம் எங்களுக்கு இல்லை. ஆனல் மதுவிலக்குக்கு ஒரு பெண் மெம்பர் அவசியமென நினைத்தோம். இதன் பலாபலன் சில வரு டங்கள் கழித்துத்தான் உங்களுக்குத் தெரியும்.' இப்படி இவர் சொன்னதைக் கேட்ட ஒருவர், 'சிதம்பர ரகசி யமோ?' என்ருராம்.

இதை ஏன் இவ்வளவு விரிவாக எழுதினேம் என் ருல், ஆச்சாரியாருக்கும் டாக்டருக்கும் தனிப்பட்ட முறையிலே எந்தவித விரோதமுமில்லை. இறுதி வரையில் அவர்கள் குடும்ப நண்பர்கள் போலவே பழகினர்கள். என்ருலும் பொதுக் காரியங்களில் தனக்கிருக்கும் அதி கார பலத்தால் மக்களுக்கு வேண்டாத ஒன்றைச் செய்யும்போது அதை எதிர்த்து ஒழிக்கும் பணியிலே தயை தாட்சண்ணியமில்லாமல் முன்வரும் பேராற்றலும் துணிவும் தீரமும் டாக்டர் நாயுடு அவர்களுக்கிருந்தது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகவே இதைக் குறிப் பிட்டோம்.

இறுதியில் இவருடைய முயற்சியாலேயே ஆச்சாரி யார் மந்திரி சபையும் ஒழிந்து குலதருமக் கல்வியும் கல் லறைக்குச் சங்கு பேரிகை ஜெயகண்டி முழங்க சுருட்டு வழங்க சுடலையில் புதைக்கப்பட்டது எல்லாரும் அறிந்

தகே. அந்தக் கல்வித் திட்டத்தை ஒழிக்காமலிருந்தால் ஒரு பத்து ஆண்டுகளில் நமது முன்னேற்ற வரலாறு ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கி ஓடியிருக்கும். அதற்காக நாம் பெருந்தகை டாக்டர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த முயற்சிதான் அவர் கடைசியாகச் செய்த முயற்சி. முழு வெற்றி பெற்றார். ஓய்வெடுக்க வேண்டுமென்று கருதி அண்மையில் நடந்த தேர்தலிலேயும் அவர் கலந்து கொள்ளவில்லை.

## அவர் கடைசியாக ஆற்றிய உரை

1957-ல் நடைபெற்ற தமிழ்நாட்டுச் சித்த மருத்துவர் மாநாட்டில் டாக்டர் வரதராசலு நாயுடு அவர்கள் ஆற்றிய தலைமையுரையின் இன்றியமையாத பகுதிகளாவன:—

வரலாற்றுக் காலத்திற்கும் மிக முந்திய காலத்திலிருந்து தமிழர் நாகரிகம் தனிப் பெருஞ் சிறப்பை அடைந்திருக்கிறது என்பது எல்லோரும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். மொகஞ்சதரோவிலும், ஹரப்பாவிலும் நடைபெற்ற புதை பொருள் ஆராய்ச்சிகளிலிருந்து, இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே, திராவிடர்கள், நாகரிக வளர்ச்சியின் மிக உயர்ந்த கட்டத்தை அடைந்துவிட்டார்கள் என்பது தெளிவாக விளங்குகிறது. ஏனைய கலைகளைப் போலவே மருத்துவக் கலையிலும் அவர்கள் தலைசிறந்த புலமை அடைந்திருப்பார்கள் என்பதிலும், மருத்துவக் கலை பற்றிய ஏராளமான அரிய நூல்களைத் தமிழ் மொழியில் இயற்றியிருப்பார்கள் என்பதிலும் எள்ளளவும் ஐயமில்லை. சங்க காலத்துச் சான்றோர்கள் இயற்றிய பல அற்புதமான இலக்கியங்

களும் இலக்கணங்களும் பிற்காலத்தில் அழிந்துவிட்டதைப் போலவே தமிழ்நாட்டு மருத்துவக் கலை நூல்கள் பலவும் அழிந்துபோய்விட்டன. அழிந்தவை போக, இப்போதும், தமிழ்நாடு முழுவதிலும், ஆங்காங்கே, மருத்துவக் கலை பற்றிய பனை ஓலை ஏடுகள் சிதறிக் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் தேடிக் கண்டுபிடித்துத் தக்க முறையில் தொகுத்து, தமிழ் மொழியிலும் பிற மொழிகளிலும் வெளியிட ஏற்பாடு செய்யவேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும்.

சித்த மருத்துவக் கலை, ஒப்பற்ற புகழுடைய தமிழ் நாட்டு நாகரிகத்தின் அற்புதமான விளைவுகளில் ஒன்றாகும். அந்த மருத்துவக் கலை பற்றிய ஏடுகளைத் தொகுப்பதோடும் வெளியிடுவதோடும் திருப்தியடையாமல், நோய் போக்கும் துறை—மருந்துகளின் வளர்ச்சித் துறை—ஆகிய பல்வேறு துறைகளிலும், சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்வதற்காகச் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நாம் விரிவான அளவில் அமைத்தாகவேண்டும். ஆங்கில முறை மருத்துவர்களின் ஒத்துழைப்பையும், சித்த மருத்துவர்களின் கூட்டுறவையும், கிராம வைத்தியர்களின் துணையையும் கொண்டு, அந்த ஆராய்ச்சி நிலையத்தை நாட்டுக்கு நற்பயன் நல்கும் நனிசிறந்த மன்றமாக உருவாக்கவேண்டும்.

சித்த மருத்துவக் கலையானது தமிழ்நாட்டில் மட்டும் தான் நடைமுறையில் கையாளப்பட்டு வருகிறது. இந்தக் கலை பற்றிய விளக்கங்களைத் தரும் நூல்களும் தமிழ் மொழியில் மட்டும்தான் காணப்படுகின்றன. இந்திய மருத்துவத் துறை பற்றி இந்தியா முழுதிலும் இருக்கிற ஆராய்ச்சி நிலையங்கள் எல்லாவற்றையும் நான் பார்வையிட்டிருக்கிறேன். ஆனால் தமிழ்நாட்டைத் தவிர, வேறு எந்தப் பகுதியிலும் சித்த மருத்துவக் கலையை என்னால்

காண முடியவில்லை. தமிழ் நாகரிகத்தின் தனிச் சிறப்பு களில் ஒன்றே இந்தக் கலை. எனவே இந்தக் கலையின் வளர்ச்சிக்காகவும் மறுமலர்ச்சிக்காகவும் தேவைப்படும் அடிப்படைப் பணிகளைத் தமிழ்நாட்டில்தான் நடத்த முடியும்.

ஏறத்தாழ 1921-ல், எல்லா மாநில அரசாங்கங்களும், இந்திய மருத்துவக் கலைகளில் தாங்கள் இனி அதிகக் கவ னம் செலுத்தவேண்டும் என்றும், அந்தக் கலைகளின் மூல மாகத்தான் கிராமப் பகுதிகளிலுள்ள எல்லா மக்களுக்கும் வைத்திய வசதி நம்மால் அளிக்க முடியுமென்றும் ஒப்புக் கொண்டன. ஆனால் இந்தத் துறையில் இதுவரை ஏற் பட்டுள்ள முன்னேற்றம் போதுமானது என்றோ திருப்தி கரமானது என்றோ நாம் சொல்லிவிட முடியாது. நம் முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், பனகல் அரசர் ஆட்சியில் இருந்த காலத்தில், இந்திய மருத்துவக் கலைகளின் வளர்ச்சிக்கான நற்பணிகள் தொடங்கப்பட் டன என்றாலும், பிற்காலத்தில், எப்படியோ அந்த வேலை களெல்லாம் தடைப்பட்டுவிட்டன.........இந்திய மருத் துவக் கலைகளின் தனிப்பட்ட வளர்ச்சிக்காக என்றே தொடங்கப்பட்ட இந்திய மருத்துவக் கல்லூரி, இன்றைய தினம், மற்றோர் ஆங்கில முறைக் கல்லூரியாகவே காட்சி யளிக்கிறது. இதற்குக் காரணம், அந்தக் கல்லூரியில், இந்திய முறைகள் பற்றிய கல்வியை அதிகமாக அளிக்கா மல், ஆங்கில முறைபற்றிய பாடங்களை அளவுக்கு மீறி புகட்டுவதே ஆகும். ஆங்கில முறைபற்றிய கல்வியை அடியோடு வேண்டாமென்று நான் இயம்பவில்லை. ஆனால் அந்தக் கல்வி, இந்திய மருத்துவக் கலையின் தரத்தையும் சிறப்பையும் கெடுக்கிற அளவுக்கு இடம் பெறக்கூடாது என்பதைத்தான் தெரிவிக்க விரும்பு கிறேன். இப்போதுள்ள இந்திய மருத்துவக் கல்லூரியில் அளவுக்கு அதிகமாக ஆங்கில முறைகள் இடம்பெற்று விட்ட காரணத்தால், அதனை, முழு ஆங்கில முறைக்

கல்லூரியாகவே மாற்றி அமைத்துவிட்டு, இந்திய மருத்துவ வளர்ச்சிக்காகத் தனியானதோர் கல்லூரியை ஏற்படுத்துவதே சாலச் சிறந்தது என்பது என்னுடைய கருத்து.

பெங்களூரில் அண்மையில் நடைபெற்ற ஆயுர்வேத மாநாட்டில், அதன் தலைவர், ஆங்கில முறை மருத்துவத்திற்கு அரசாங்கத்தார் இதுபோது செலவழித்துவரும் கோடிக்கணக்கான ரூபாய்களில் பாதி அளவை இந்திய மருத்துவக் கலைகளுக்குச் செலவிட்டால் கூட, அந்தச் செலவின் மூலம், இந்திய மக்கள் அனைவருக்கும் மருத்துவ வசதியை அளித்துவிட முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் கருத்துரையை நம் அரசாங்கத்தார் கருத்தூன்றிக் கவனிக்கவேண்டும். நகரங்களில் வாழ்கிற சிறுபான்மையோருக்கு மட்டுமே பயன்படுகிற ஆங்கில முறைக்காகக் கோடிக் கணக்கில் பணத்தைச் செலவழிக்கிறபோது, கிராமப்புறங்களில் வாழ்கிற பெரும்பான்மை மக்களுக்குப் பயன்படக்கூடிய இந்திய மருத்துவக் கலைகளுக்காகச் சில இலட்சங்களையாவது ஏன் செலவழிக்கக் கூடாது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. ஆங்கில முறையில் பயிற்சிபெற்ற எம். பி. பி. எஸ். டாக்டர்களைக் கிராமங்களில் குடியேற்றுவதற்காக இதுவரை செய்யப்பட்ட எல்லா முயற்சிகளும் தோற்றுவிட்டன. ஆகவே, டாக்டர் குருசாமி முதலியார் அவர்கள் தீட்டித் தந்திருக்கிற திட்டப்படி, தாலூகாதோறும், குருகுல முறையில் இந்திய மருத்துவப் பள்ளிக்கூடங்களைத் தொடங்கி, ஏற்கெனவே மருத்துவப் பணியாற்றிவரும் கிராம வைத்தியர்களுக்குத் தகுந்த முறையில் அங்கே பயிற்சி அளித்து, பின்னால் அவர்களுக்குக் குறைந்த விலையில் சிறந்த மருந்துகளையும் அளித்து ஊக்கம் கொடுப்பதைத் தவிர, கிராமங்களிலும் முழு வைத்திய வசதியை அளிக்க வேறு வழி எதுவும் இல்லை.

இந்தப் பணிகளையெல்லாம் சிறந்த முறையில் ஆற்ற, இந்திய மருத்துவ டைரக்டர் என்கிற பதவியை மீண்டும் புதுப்பித்து, நிர்வாக இயந்திரத்தை ஒழுங்கு படுத்தி, இந்திய மருத்துவ வளர்ச்சிக்காகப் போதுமான பணத்தை ஒதுக்கவும் அரசாங்கத்தார் முன்வரவேண்டும்.

மிக விரைவில் ' இந்தத் துறையில் நற்பணிகள் தொடங்கப்படுமென்றும், பண்டைப் புகழ்படைத்த சித்த மருத்துவக் கலையில் புதையுண்டு கிடக்கும் ஒப்பற்ற பொக்கிஷங்களெல்லாம் தேடியெடுக்கப்பட்டு உலக நன்மைக்காக அளிக்கப்படுமென்றும் நான் மனமார நம்புகிறேன். வாழ்க் சித்த மருத்துவம் ! வளர்க அதன் சிறப்பு !!

## முடிவு

கீழே நெருப்பில்லாமல் எப்படி, தண்ணீர் கொதிக்காதோ அதேபோலத்தான் ஒருவர் எண்ணத்தின் அடிவாரத்திலே சில கொள்கையில்லாமல் உலகம் அவரைப் போற்றுவதில்லை.

அத்தகு சிறந்த கொள்கையின் குன்றாக இருந்த டாக்டர் அவர்களின் எதிர்பாராத முடிவு பலரை அதிர்ச்சியடையச் செய்தது. ஒரு திங்கள் ' ப்ளூ ' காய்ச்சலால் படுத்திருந்தார். பிறகு பூரண குணமடைந்துவிட்டார். முடிவு நெருங்குகிறது என்ற அறிகுறி ஒன்றுமே காணப்படவில்லை. ஜுலை 21-ந் தேதி இரவு முடிவெய்தப் போகின்ற அவரை அன்று மாலையும் பலர் சந்தித்துப் பேசியிருக்கின்றார்கள். கூடுமானவரை சுகாதார முறைப்படியே பழக்க வழக்கங்கள், குளியல், உணவு, ஓய்வு ஆகியவைகளை அனுசரித்துக்கொண்டுவந்தார். எனினும் இயற்கை நம்மை விட்டு அவரைப் பிரித்துவிட்டது.

அவர் வாழ்ந்த நாளில் நம்மிடம் அவர் பேச நேர்ந்த போதெல்லாம், அவருடைய உள்ளாழத்தைக் கிளறி நாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலோடு எழுப்பிய ஐயப்பாடுகளுக்கெல்லாம் அவர் தந்த பதில்கள் கீழே தரப்படுகின்றன.

மக்களுடைய நன்மைக்காகவும் நாட்டின் நலனுக் காகவும் சட்டங்களை யியற்றி நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும்.

சாட்டையை வாங்கிவிட்ட பிறகு அதன் அடியைத் தாங்கக்கூடிய குதிரையைத் தேடுவதைப் போல சட்டங்களையியற்றிவிட்டு, அதற்கு அடிபணிகிறீர்களா இல்லையா என்று கேட்பதை போலிருக்கக் கூடாது சட்டங்கள் என்பார்.

எவன் ஒருவன் மக்களிலே ஒருவனாகப் பிறந்து தனது அசாதாரணத் திறமையினாலே தலைவன் ஆகிறானோ அவனிடத்திலேதான் கொஞ்சமாவது தியாக சிந்தையும் நல்ல உள்ளமும் உறுதிப்பாடும் இருக்குமென்பார்.

ஒழுக்கம் ஒழுக்கம் என்று சொல்லிக்கொண்டு ஒழுங் கைக் கைவிட்டு விடுவதையும், ஒழுங்கு, ஒழுங்கு என்று சொல்லிக்கொண்டு ஒழுக்கத்தைக் கைவிட்டு விடுவதையும் அவர் விரும்புவதில்லை. ஒழுங்கு ஒழுக்கம், இரண்டுமே சமூகத்திலும் சரி, தனி மனிதனிடத்திலும் சரி, சர்க்காரிலும் சரி நிலவவேண்டும் என்பார். எதிர்க்கால பாதுகாப்புக் காக நிகழ்கால சுதந்தரத்தை விட்டுக் கொடுத்து விடுபவர் கள், எதற்கும் தகுதியற்றவர்கள் என்று கண்டிப்பார்.

'பிற்கால சந்ததிகளுக்காக, பிற்கால சந்ததிகளுக் காக,' என்று ஓயாமல் கத்துகிறார்கள். இது ஒரு பெரிய மண்டையிடி என்றே கருதுகின்றேன். பிற்கால சந்ததி யர்களுக்கு அறிவைத் தரவேண்டியதுதான். ஆனால், நம்முடைய சொத்து சுகம் எல்லாம் அவர்களுக்காக

விட்டு வைக்கவேண்டுமென்றால் அவர்கள் இவைகளை ஒன்றுமே தேட முடியாத முட்டாள்களா என்ன? நாம் ஏன் நம்முடைய வருங்காலத்தைப்பற்றி அவ்வளவு சந்தேகப்படவேண்டுமென்று கேட்பார்.

எல்லாரும் வாளேந்திப் போரிடும் வீரர்களாக வேண்டும் என்பதிலே அவருக்கு அசையாத நம்பிக்கையிருந்தது. எல்லா மதத் தலைவர்களும் ஆசையைவிட்டு வாழவேண்டுமென்று போதிக்கிறார்கள். அப்படியானால் நமக்குச் சுதந்தரம்தான் எதற்கு, அதுவும் ஒரு ஆசைதானே. ஆசையின் அடிப்படைதானே வாழ்வு. வாழ்வைத் துறப்பதானால் துறவியாகலாம். துறவியானால் மாத்திரம் என்ன, துறவிக்கு மோட்சலோகம் போகவேண்டுமென்ற ஆசை உண்டல்லவா. ஆகவே, ஆசையை விட்டொழித்தவர்கள் யார்? உலகமே ஆசையின் அடையாளமாக இருக்கிறது,

விருப்பமும் நம்பிக்கையும் தூண்டும்போது மனிதன் உடலுக்கஞ்சி பின்வாங்கக்கூடாது. வழியிலே ஒரு கணம் கூட சோம்பிக்கிடக்கக்கூடாது. தாமதம் செய்பவன் பாதையிலே இருந்து தள்ளப்படுவான் என்ற கோட்பாடுடையவர்.

ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையோடும் உறுதியோடும் வீரத்தோடும் வாழ வேண்டும் என்பதே அவர் கோட்பாடு.

அவர் இறந்துபட்ட தியாகிகளைச் சொல்லும் போது உருக்கமாக இருக்கும்.

"நமது மிகப் பழைய மூதாதையர்கள் எந்தெந்த ஆட்சியின் கீழோ இருந்தார்கள். அப்போது அவர்கள்

வாழ்ந்த அந்த வாழ்க்கை சுதந்திர வாழ்க்கைதானு என்று கூட அவர்களுக்குத் தெரியாது. ஆனுல் நம்முடைய தந்தையர் சுதந்தரத்தில் திளைத்த எல்லோரும் சமம் என்ற ஒரு மெச்சத் தகுந்த புதிய தத்துவத்திற்காகப் போராட முனைந்தனர். நம்மைக் கடைசியாக ஆண்ட வெள்ளை யன் செங்கோலையும் சட்டத்தையும் சீறி வரும் குண்டு களையும் காட்டி, மீறினுல் சுட்டுப் பொசுக்கி, பல கல்லறை களை நமது தாய் நாட்டிலேயே உண்டாக்கினுன். அந்த புனிதவான்களின் கல்லறையின் நினைவு, துக்கம், ஆத்திர மாக மாறி அறப்போராகத் தாண்டவமாடியது. சுதந்திரச் சூருவளி எங்கும் எரிமலைப் புகையெனச் சூழ்ந்து கொண்டது. அதன் பயனை எப்படியோ நாம் அடைந்து விட்டோம். ஆனுல் இப்போது அந்தவித எண்ணங் கொண்ட அல்லது அவ்விதம் தங்களை ஒப்படைத்துவிட்ட வேறு சமுதாயம் தலை தூக்கமுடியுமா என்பதைச் சோதிப் பதற்கான உள்நாட்டுக் குழப்பங்கள் தலை தூக்கி நிற் கின்றன.

ஒருகாலத்தில் நாம் சரியெனப் பட்டதற்காகப் போராடினேம். ஆனுல் பிறர் அதே உரிமைக்காகப் போராடும்போது அதை வழங்க நம்மில் எவ்வளவு பேர் தயாராயிருக்கிருர்கள் என்பதே சந்தேகமாக இருக்கிறது.

இன்றும்–இங்கும்–இன்னும் போராடி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள், அந்தக் கால தியாகிகளின் கல்லறைகளைத் தம் கண்ணீரால் கழுவுவார்களோ என் னமோ தெரியாது.

அன்று போராடிய அந்த வீரர்கள் விட்டுச் சென்ற வேலை இன்னும் முடிவுபெருமல் அதன் தொடர்ச்

சங்கிலியை நம் கையில் ஒப்படைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அதனால் ஏற்படும் குறைகளைப் போக்க இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் நாம்தான் நம்மை ஒப்படைத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் நாம் பெற்ற சுதந்தரம் பூரணத்துவம் அடையவில்லை.

எல்லா மக்களும் ஒப்புக்கொள்ளுகிற ஓர் உயர் நிலையை உண்டாக்க நமக்குப் பின்வரும் சந்ததிகளின் தலையிலேற்றிய பெரும்பாரமாக வைத்துவிட்டுப் போய் விடுவோமா என்ற சந்தேகமும் அச்சமும் அடிக்கடி என்னைப்பிடித்து உலுக்கிக்கொண்டிருக்கிறது. அதை எண்ணும்போது இன்னும் நாம் மகத்தானதோர் சோதனைக் காலச் சுழலிலே அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இறந்துபோன அந்த கௌரவமிக்க பெருமக்கள் எந்த லட்சியத்திற்காகத் தங்களின் கடைசி மூச்சை செலவழித்தார்களோ, அவர்களைவிட நாம் அதிக அக்கறை செலுத்துவதாகவும், இறந்துவிட்ட அவர்கள் வீணுகச் சாகவில்லை என்பதை இந்தச்சமுதாயமானது சுதந்தரத்தின் புதிய ஜனனத்தைப் பெறுமென்றும் நாம் உறுதி யெடுத்துக் கொள்ளவேண்டும். இதுதான் இனி வரும் காலத்தின் கோட்பாடாக இருக்குமென்றார். இதில் எவ்வளவு கருத்தாழமிருக்கிறது என்பதை எண்ணும்போது அவர் தான் இன்றைய நாட்டின் உண்மையான நிலையை எண்ணிப் பலரிடம் சொல்லிக்கொண்டே வந்தார். அத்தகு மேதையை நாம் அதிக நாள் காணமுடியவில்லை.

யார் யாருக்கு என்னென்ன உதவிகளைச் செய்தார் என்று அவர் யாரிடமும் சொல்லமாட்டார். தெரிந்து

கொள்ளவேண்டுமென்று யாராவது கேட்டாலும், ஒரு புன்சிரிப்பைத்தான் அதற்குப் பதிலாகத் தந்து சும்மா யிருந்துவிடுவார்.

மத்திய சர்க்கார், மாகாண சர்க்கார் இவ்விரண்டின் நிலை மக்களைப் பொருத்தவரையிலும் என்ன என்று கேட்பேன்.

ஒரு வேலைக்காரன் இரண்டு எசமானர்களுக்கும் வேலை செய்யமுடியாது என்று சுருக்கமாகப் பதில் சொல்வார். அவர் சார்ந்திருந்த கட்சியின் கொள்கைப்படி அவரால் அதற்குமேல் சொல்லமுடியாதல்லவா.

*முடிவில் பிடி சாம்பல்*

குடை நிழலிலிருந்து குஞ்சரமூர்ந்த கொற்றவனாயிருந்தாலும், நடைமெலிந்தோரூர் நண்ணிய ஏழையாயினும் முடிவில் ஒருபிடி சாம்பல். வேழத்தை ஏவிப் பகை வென்று வாகை சூடி வலம் வந்த மன்னர்களாயினும், முடிவேந்தனிட்ட கட்டளையை முடிமேல்தாங்கிப்போர்க் களத்தில் நின்றவராயினும் முடிவில் ஒருபிடி சாம்பல். இறவாதிருக்க அருள்புரி என்று அனவரதமும் அவனருள் பாடி நின்ற அடியாராயினும், அடியார்க்கு அடியாராயினும், போக போக்கியத்திலே புரண்டு ஏக சக்ராதிபதியெனத் தன்னை நினைத்துக்கொண்டவன் எவனாயினும் முடிவில் ஒரு பிடி சாம்பல். ஞாலத்தை யடக்கி காலத்தைக் காவலில் வைப்பேன் என கர்ஜித்தவராயினும், காலமே என்பால் கருணை காட்டமாட்டாயா என்று கவலைக் குரலெழுப்பிய ஏழையாயினும் முடிவில் ஒரு பிடி சாம்பல். காலமே உன்னைக் கண்டு கொள்வதே மகாக் கொடியதாயிருக்கிறது. உன் கருணை இன்னதுதான் என்று கண்டுகொள்வதே மகாக் கடினமாயிருக்கிறது.

பேதமற்ற இடம், இவன் உயர்ந்தவன் இவன் தாழ்ந்தவன் என்று சொல்லாத இடம், உயர் சாதி தாழ்ந்த சாதி என்ற இறுமாப்பான சொற்களே புக முடியாத இடம், நிசப்தமான இடம், வாழ்வோர் வாழ்ந்து வீழ்ந்தோர் விழிப்பில்லா ஊக்கமெனும் கல்லறைத் தொட்டிலில் கிடத்தி நாமும் ஒரு நாள் 'இப்படித்தான் என்று ' சுடலைச் சூள்' உரைத்துத் திரும்பும் இடம். 'குற்றங்கள் நிற்க நற்றங்கள் பறைந்து' என்ற நல்லோர்கள் உரைப்படி, இறந்தவன் எவ்வளவு கொடுமையாளனாக இருந்தாலும் அவன் வாழ்ந்த நாளில் அவனையும் அறியாமல் தினையளவு நன்மை செய்திருந்தாலும் அதைப்பற்றி மாத்திரம் பேசவேண்டுமென்ற உயரிய கொள்கையைக் கடைப்பிடிக்கப் வேண்டுமென்ற உத்தமமான இடம். வேகாத பிணங்களை வேக வைக்கும் வெட்டியானையும் ஒருநாள் வேக வைக்கக் காத்திருக்கும் வித்தியாசம் காட்டாத இடம்; ஊனுால் ஊன் வளர்க்கும் வானப்பறவைகளாம் வல்லூறுகளை ஊட்டி வளர்க்கும் இடம். இங்கே பிறந்தார், இங்கே வாழ்ந்தார், இங்கே மாண்டார் என்ற முறையில் உயிரின் கடைசி எல்லையின் தாயகமாய் விளங்கும் தனி இடம்.' அந்தோ! அந்த 'இடத்தைக் காண்போர் உயிர் நிலையாமையை எண்ணுவர். இதுதான கடைசி முடிவு, பிறந்த அத்தனைக்கும் இறப்புண்டு. ஆகவே இறப்பெனும் சாக்காடு நம்மை அணுகுமுன் நாட்டுக்காக, சமூகத்திற்காக நம்மாலியன்றதை ஏதேனும் செய்துவிட்டுப் போவோம், அந்த முயற்சியில் தீக்குண்டமென்றாலும் தாண்டுவோம், தூக்குக் கயிறென்றாலும் தாவிப் பிடிப்போம்,சிறையென்றால்,சாவி எங்கே என்போம், என்று சிந்தையை செந்நெருப்பாக்கிய சீலர்களின் அணிவகுப்பிலே 1957 சூலை 22-ம் நாள்

... A PUBLIC LIBRARY

இரவு உயிரைத் துறந்து, 23-ம் நாள் இடம் பெற்றுவிட்டார், நமது டாக்டர் நாயுடு அவர்கள்.

செய்தி காட்டுத் தீப்போல் பரவியது. வானொலி அந்த உத்தமனின் முடிவை அறிவித்துவிட்டது. அவரது உயிர்போன்ற நண்பர்களிலே மிகச் சிறந்தவர் என்று சொல்லப்பட்ட மாகாண முதலமைச்சர் உயர்திரு. K. காமராசர் ஓடினர்; மற்ற மந்திரிகளும் ஓடினர்கள். எதிர்பாராத முடிவு. அரசியலிலே நமக்கு மிக மிக மூத்தவர், வழிகாட்டி, நம்மோடு இருந்தவர். அடிக்கடி ஆலோசனைகளைக் கூறிக்கொண்டு வந்தவர்; அடியற்ற மரம்போல் வீழ்ந்துவிட்டாரா! ஐயகோ! இனி யாரை யணுகி என்ன கேட்க முடியும். நாட்டு விடுதலைக்குப் போரிட்ட நல்லவனுக்கா-காலம் தன் கருணையைக் காட்டவில்லை! கொடிது-கொடிது என, கைகளைப் பிசைந்தனர்; கண்களைக் கசக்கினர்.

'அப்பெரியோனின் அரசியல் தேர் நில்லாமல் நடக்க அருள்புரிந்த அம்மையே! அன்பு அன்னையே!தாய்த்திருநாடு தந்த உருக்குமணி அம்மையார் அவர்களே! உம் கண்ணீரோடு எம் கண்ணீரைக் கலக்குகின்றோம். செடியில் மலர்ந்த மலர் கொய்வாரின்றிச் செடியினடியிலே விழுந்து வாடிவிடுவது, இந்த வாழ்க்கை என்பார்கள். ஆனால், உம் தலைவரும் எம் தலைவருமான இப் பெருந்தகையின் வாழ்க்கை அப்படிப் போன்றதல்ல. எவ்வளவு பேர்களோ கொய்திருக்கிறார்கள். அந்த நறுமணம் நாட்டு விடுதலைக்குப் பயன்பட்டது.கீழே விழுந்தபின்னும் மணம் வீசும் சாகா நறுமணமுள்ளதாக, இருந்த மலர். கீர்த்திக் குன்றத்தின் உச்சியிலிருந்தபடியே சாய்ந்துவிட்டார். எம்

தலைவர் என்று நீவிர் கொண்டாடும் அந்தப் பரிபூரண உரிமையிலே எங்களுக்கும் பாதிப் பங்கு உண்டு, 'எம் தலைவ!' என்றழைக்க. இனி நாம் அவரைப் பெறப்போவதில்லை. என்ன சித்தாந்தத்தை எங்களில் மூத்த மூதாட்டியாராகிய தங்களுக்கு நாங்கள் சொல்லுவதா. உங்கள் முதிர்ந்த அனுபவத்தால் ஆற்ருது அழுது நிற்கும் எங்களைத் தேற்றுங்கள், எங்கள் கண்ணீரைத் துடையுங்கள். எங்கள் கண்கள் உதிர்க்கும் கவலை மலர்களை அந்தக் கண்ணியவானின் கல்லறையில் சொரியுங்கள். அவர் விட்டுச் சென்ற பெரும் பணியின் கடைசி அத்தியாயத்தை முதல் அத்தியாயமாக எடுத்துக்கொள்வோமாக! இஃதொன்றே நாம் அவருக்கு ஆற்றும் கடன்.

இதுவரை இறந்துவிட்டவர்களெல்லாம் நல்லவர்கள். இதுவரை பிறவாதவர்கள் எல்லாம் நல்லவர்கள். இப்போது உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் நாமெல்லாம் யாரோ என்ற ஐயப்பாட்டை நீக்க நாமும் ஒரு நாள் இறந்து காட்டவேண்டியவர்களே, என்ற ஆறுதலோடு நமது கடைசி வணக்கத்தை அந்தக் கர்ம வீரனின் கல்லறைக்குச் செலுத்துவோமாக!' என்று பேசிக் கலைந்தனர்.

---

CONNEMARA PUBLIC LIBRARY
1 - JUL 1958
MADRAS

P41
P 96